CSI தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலம்

ஆண்கள் ஐக்கிய சங்கம்

பாகம் - 1

19ம் நூற்றாண்டு முன்னோடி மிஷனெரிகள்

(வாழ்க்கை வரலாறு)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

19ம் நூற்றாண்டு
மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு

பாகம் - 1

ஆசிரியர்

Rev. Prof. D.A . கிறிஸ்துதாஸ்

தொகுப்பு

Rev. R. சாமுவேல் ஜெயசீலன்

இயக்குநர் & செயலர் - ஆண்கள் ஐக்கிய சங்கம்.

வெளியீடு

தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலம்

ஆண்கள் ஐக்கிய சங்கம்

கால்டுவெல் மேல்நிலைப்பள்ளி வளாகம், தூத்துக்குடி - 1.

செல் : 94869 38380

உள்ளடக்கம்

1. லேக்டையாஸ்ப்ராட் அம்மாள் 7
2. சாலட் கூலிரீ கிரேபான் அம்மாள் 10
3. ஜியார்ஜ் மிட்டன் ஹெறுபல் ஐயர் 15
4. செப்றிமஸ் ஹூடன் ஐயர் 17
5. ஜேம்ஸ் ஸ்பிராட் ஐயர் 22
6. ஜேம்ஸ் ஃபிலிப்ஸ் ஃப்லெச்சர் ஐயர் 27
7. அலன் ஜான்சன் ஐயர் 29
8. ஆல்ஃப்ரெட் ஹீறர் வைக்கின் ஐயர் 31
9. பேராசிரியர் J.J. செப்மோர் 32
10. சார்ள்ஸ் போசியா ற்றிரெட்லர் ஐயர் 33
11. ஜான் விட்சர் ஐயர் 38
12. வில்லியம் கிளார்க் ஐயர் 48
13. ஹென்ரி கான்ஸ்டன்றைன் ஹக்ஸ்ரபிள் ஐயர் 66
14. சாமுவேல் வில்லியம் கோல்ரசுட் ஐயர் 81
15. சார்ள்ஸ் எக்பர்ட் கென்னெட் ஐயர் 82
16. ஷோளார் அம்மாள் 90
17. ஸ்டைடன் ஹூரான்ஸ் ஐயர் 92
18. ஜான் தாம்ஸன் ஐயர் 100
19. வில்லியம்ஸ் ஹரிக்ஸ் ஐயர் 101
20. ஜெல்லிங்ஹூத் ஐயர் 108
21. ஜான் ஜேம்ஸ் முல்லர் ஐயர் 110
22. ஜான் மைக்கேல் லெக்னர் ஐயர் 114
23. தாமஸ் ஹென்றி ஆப்பிள்கேட் ஐயர் 115
24. சார்ள்ஸ் டோலஸன் ஐயர் 116

நூற்குறிப்பு

நூலின் பெயர்	:	19ம் நூற்றாண்டு மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு (பாகம் - I)
ஆசிரியர்	:	Rev. Prof. D.A. கிறிஸ்துதாஸ்
தொகுப்பாசிரியர்	:	Rev. R. சாமுவேல் ஜெயசீலன் செயலர் - ஆண்கள் ஐக்கிய சங்கம்.
பதிப்பாசிரியர் உரிமை	:	தூத்துக்குடி - நாசரேத் திருமண்டல ஆண்கள் ஐக்கிய சங்கம்
பதிப்பு	:	2012 அக்டோபர்
பக்கம்	:	120
விலை	:	ரூ. 60/-
படிகள்	:	2000
அச்சு	:	பிஷப் அசரியா பிரிண்டெக் தூத்துக்குடி - 1.
கிடைக்குமிடம்	:	தூத்துக்குடி - நாசரேத் திருமண்டல ஆண்கள் ஐக்கிய சங்கம் கால்டுவெல் மேல்நிலைப்பள்ளி வளாகம். தூத்துக்குடி - 1.

எமது வெளியீடுகள்

1. மண்ணில் மறைந்த மாமனிதர்கள் விலை ரூ. 50/-

2. 19ம் நூற்றாண்டு முன்னோடி மிஷனெரிகள் (பாகம் -1) விலை ரூ. 60/-

3. 19ம் நூற்றாண்டு முன்னோடி மிஷனெரிகள் (பாகம் -2) விலை ரூ. 50/-

4. நினைவுக்கூறப்படும் நீதிமான்கள் விலை ரூ. 30/-

5. செபத்தையாபுரம் சேகர வரலாறு விலை ரூ. 50/-

Jesus, the humble suffering servant is the powerful conquering king and Judge...

Church of South India
THOOTHUKUDI - NAZARETH DIOCESE

The Rt. Rev. Dr. J.A.D. Jebachandran, B.Sc., M.A., B.D., D.D.,
Bishop of Thoothukudi - Nazareth Diocese
Chairman TND & Manager, TND Colleges

Bishop's House
111/32 T, State Bank Colony
Thoothukudi-628 002
Tamilnadu, South India
Phone: Office: 0461 - 2345430
Res: 0461- 6536555
Tele Fax : 0461 - 2346911
Email: bishoptndone@yahoo.com

"யாரை நான் அனுப்புவேன் யார் எனது காரியமாய் போவார்"

திருச்சபையின் தலைவராம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சபையை கட்டும் பணியில் நமது பகுதிக்கு மிஷனெரிகளாக வந்து இறைப்பணியையும், கல்விப்பணியையும், சமுதாயப் பணியையும் நிறைவேற்றிய முன்னோடி மிஷனெரிகள் அநேகர். அவர்களுடைய அர்ப்பணிப்பு நிறைந்த அருட்பணியால் நாம் கிறிஸ்துவைக் கண்டு கொண்டோம். அருள்திரு. D.A. கிறிஸ்துதாஸ் ஐயரவர்கள் எழுதி புத்தகமாக வெளிவராமல் மறைந்திருந்த 19ம் நூற்றாண்டு முன்னோடி மிஷனெரிகளின் வரலாற்றை திருச்சபை மக்கள் பயன் பெறும்படி **"19ம் நூற்றாண்டு மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு"** (பாகம் - 1) என்ற புத்தகமாக வெளியிடும் திருமண்டல ஆண்கள் ஐக்கிய சங்கத்தைப் பாராட்டுகிறேன். இன்னும் கிறிஸ்தவ உலகத்திற்குத் தெரியாமல் இருக்கும் மிஷனெரிமார்களின் வரலாறு, திருச்சபைகள் தோன்றிய வரலாறுகளை வெளியிட வாழ்த்துகிறேன்.

"என்னை அனுப்பும் கர்த்தாவே நீர் என்னை அனுப்பும்" என்று இறைப்பணி செய்திட நம் திருச்சபையின் மக்கள் அநேகர் எழும்பிட ஜெபிக்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்

மகாகனம் அறிவர் சா. அ.த. செபச்சந்திரன்

பேராயர்

[illegible]
CHURCH OF SOUTH INDIA - THOOTHUKUDI - NAZARETH DIOCESE

MEN'S FELLOWSHIP

Rev. R. Samuel Jeyaseelan
B.Sc., B.Ed., B.D.,
Secretary & Director

Diocesan Office,
Caldwell Hr.Sec.School Campus,
Thoothukudi-628 003 Cell: 94889 3838

"நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்" என்று வாக்குரைத்த இறைமகனாம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தி[illegible] அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[illegible] தனக்குக் கொடுத்த பணியை குமாரனாகிய இயேசு கிறிஸ்தும் [illegible] பூமியில் நிறைவேற்றி, தாம் செய்த பணியை நாம் தொடர்ந்து செய்யும் படியாக நமக்கு கட்டளை கொடுத்துள்ளார்.

சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள் என்ற இறைக்கட்டளைக்குத் தங்க[illegible] வாழ்க்கை அர்ப்பணித்து ஜாதி மத இன வேறுபாடின்றி பாமரனையே தன் முன் நிறுத்தி பா[illegible] [illegible] இருள் அகன்றிடவும், பாமர மக்கள் பரமனின் பாதம் பணிந்திடவும், வெயிலிலு[illegible] வேதனையிலும் வெற்றி வேந்தராம் இயேசு கிறிஸ்துவை நமக்கு அறிவித்த முன்னோ[illegible] மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்றை 19ம் நூற்றாண்டு மிஷனெரிகளின் வாழ்க்[illegible] வரலாறு பாகம் – 1 என்ற புத்தகமாக வெளியிடுவதில் திருமண்டல ஆண்கள் ஐக்கி[illegible] சங்கமாக பெருமகிழ்ச்சி அடைகிறோம். நம்முடைய திருச்சபை வரலாறுகளையும் நம[illegible] பகுதியில் ஊழியம் செய்த மிஷனெரிகளின் வரலாறுகளையும் அதிகமாக எழுதி வெளியிட் [illegible] பயன்பெறும்படி செய்த அருள்திரு. D.A. கிறிஸ்துதாஸ் ஐயரவர்களை நினை[illegible] கூறுகிறேன். அவர்கள் தன்னுடைய கடைசி நாட்களில் எழுதி வெளியிடாமல் மறைந்திருந்[illegible] [illegible] மிஷனெரிகளின் வாழ்க்கையை அருள்திரு. R. ஜோசப் ஐயர் மூல[illegible] நான் பெற்று வாசித்து பயனடைந்தேன். திருச்சபை மக்கள் அனைவரும் பயன்பெறும்ப[illegible] நான் இதை வெளியிட வேண்டும் என்று எண்ணி திருமண்டல ஆண்கள் ஐக்கியச் சங்கத்தி[illegible] மூலமாக வெளியிட ஆண்டவர் கிருபை செய்தார். ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன். இ[illegible] கொடுத்துதவிய அருள்திரு. R. ஜோசப் ஐயரவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

இறை பணியோடு கல்வி பணியையும், சமுதாயப் பணியையும் செய்து நிறைவேற்[illegible] கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்றை வாசிக்கு[illegible] [illegible] கோதுமை மணிகளாய் விதைக்கப்பட இறைமகன் இயேசு கிறிஸ்[illegible] [illegible] அருள்புரிவாராக.

அன்பரின் பணியில்

Samuel Jeyaseelan

அருள்திரு. இரா. சாமுவேல் ஜெயசீலன்

செயலர் & இயக்குநர்.

1

சோஃபையா ஸ்ப்ராட் அம்மாள் (C.M.S.)

1842 - 1853

ஹாப்ஸ் குடும்பத்திலிருந்து அண்ணன் தம்பியரான ஸ்டீபன், செப்ற்றிமஸ் ஹாப்ஸும், அக்காள் தங்கையரான சொஃபையா, மேரிஜேன் ஹாப்ஸும் C.M.S. மிஷனெரிகளாகச் சிறந்த பணியாற்றினார்கள். சொஃபையாவும், மேரி ஜேனும் வேறிரு அண்ணன் தம்பியரான ஜேம்ஸ், தாமஸ் என்ற ஸ்ப்ராட் சகோதரர்களான மிஷனெரி குருமாரைத் திருமணம் செய்தனர்.

ஸ்டீபன் 1839 லேயே திருநெல்வேலிக்கு மிஷனெரியாக வந்தார். இவருக்கு, ஓராண்டு இளையவரான செப்ற்றிமஸ் தன் தங்கை சொஃபையாவுடன் 1842ல் வந்தார். செப்ற்றிமஸின் தமையனாரான ஸ்டீபன் செமினெரியில் தலைவராயிருந்தார். அவர் நல்லூருக்கு மிஷனெரியாக மாற்றப்படவே, ஸெப்ற்றிமஸ் செமினெரித் தலைவரானார். சொஃபையாவும் (Sophia) தன் பெரிய அண்ணனுடன் நல்லூர் போனார்.

நல்லூரில் அவர் பெண்கள் பள்ளியின் தலைவியாக அப்பள்ளியின் நிர்வாகத்தை மேற்கொண்டார். அந்நாட்களில் அப்பள்ளியில் கற்ற மாணவிகள் 25 பேர். அவர்களில் போர்டிங் பிள்ளைகள் 22. அடுத்த வருஷத்தில் (1843) இத்தொகை முறையே 30ம், 27ம் ஆயிற்று. தமிழ்ப் பாடப்புத்தகம், வேதபாடம், தமிழ் முறை ஆங்கில முறைக் கணக்கு, புவியியல், வரலாறு, தமிழிலக்கணம், தையல், நூல் நூற்றல் கற்றுக் கொடுக்கப்பட்டன.

அக்காலத்தில் மிஷன் பள்ளிகளில் கற்பிக்க ஆசிரியைகள் கிடைப்பதரிது. பாளையங்கோட்டை பெண்கள் (இன்றைய மேரி சார்ஜென்ற்) பள்ளி, நல்லூர் பெண்கள் போர்டிங் பள்ளி இவ்விரண்டிலும் மூன்று நான்கு வருஷங்கள் படித்து முடித்த ஒரு சில பெண்கள் தான் இங்கொன்றும் அங்கொன்றுமாக அப்பணியிலிருந்தனர். ஆகையினால் பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியொன்று (Female Normal Training) திருநெல்வேலி CMSக்கு இன்றியமையாத தேவையென்று மிஷனெரிமாரும்

சென்னை C.M.S. கமிற்றியும் (M.C.C) தீர்மானித்தனர். அந்நாட்களி இங்கிலாந்தில் **சொஃபையாவுடன்** பள்ளியிலும் ஆசிரியப் பயிற்சியிலு சேர்ந்து படித்த சிநேகிதியும் சொஃபையாவைப் பார்த்துப் போ வந்தவருமான **சார்லட் கிபெர்ன் அம்மாளின்** (Miss Charlotte Cuf Giberne) சேவை தேவை என்று, பாளையங்கோட்டை மூத்த மிஷனெ **பெற்றிற் ஐயர்** கூறினார். பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியை உடனே நிறுவி விட வேண்டுமென்றும், எந்த ஊரில் நிறுவுவதென்பன சொஃபையாவும், கிபர்னும் தீர்மானித்துக் கொள்ள வேண்டுமென்று முடி செய்யப்பட்டது.

பள்ளி நிறுவப்படுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்ட சிநேகிதிக இருவரும் அதற்கேற்ற இடத்தைத் தேடியலைந்து **கடாட்சபுரத்தை** தேர்ந்தெடுத்தனர். எனவே அங்கேயே அந்நிறுவனம் தொடங்கப்பட (1843). **கிபெர்ன்** தலைவியாகவும் **சொஃபையா** ஆசிரியையாகவு அமர்ந்தனர். பள்ளி சிறப்பாக இயங்கி வந்தது.

கடாட்சபுரத்தில் இப்பள்ளி நிறுவப்பட்ட அதே 1843ம் ஆண்டு ஜ மாதத்தில் மெய்ஞ்ஞானபுரம் மிஷனெரி **ஜாண் தாமஸும்** அம்மாளு அக்கிராமத்தில் **எலியற்றக்ஸ்ஃபோர்ட்** பெண்கள் போர்டிங் பள்ளியை நிறுவினார்கள். அதுவும் சிறப்பாகவே நடந்தது.

1845ம் ஆண்டில் **கிபெர்னுக்கு** மற்றொரு உதவியாசிரியை **ஹாக்கின்ஸ்** கிடைத்து விட்டதாலும், மெய்ஞ்ஞானபுரத்தில் **மேரி தாம** அம்மையாருக்கு ஹாக்கின்ஸ் உதவி தேவைப்பட்டதாலும், **சொஃபைய ஹாப்ஸ்** அம்மாள் மெஞ்ஞானபுரத்துக்கு மாற்றப்பட்டார்.

அங்கு **தாமஸ் ஐயருக்கு** உதவியாக **ஜேம்ஸ் ஸ்ப்ராட் ஐய** (Rev. James Spratt) சில காலம் உபதேசியாராகவும் 1845 முதல் உதவி குருவாயும் பணியாற்றி வந்தார். அவர் சிறந்த மிஷனெரி. சகல கிறிஸ்த நற்பண்புகளும் நிறைந்தவர்.

1846ம் ஆண்டில் **ஜேம்ஸ் ஸ்ப்ராற்றுக்கும், சொஃபைய ஹாப்ஸ்க்கும்** திருமணம் நடந்தது. அது முதல் சொஃபையா ஸ்ப்ராற்று தங்கள் மிஷனெரிகளிலொருவரென்று C.M.S. சங்கம் அங்கீகரித்தது.

ஜேம்ஸ், சொஃபையா ஸ்ப்ராட் தம்பதியர் மேலும் ஆறு ஆண்டுகள் மெய்ஞ்ஞானபுரத்தில் மிஷனெரிப் பணியாற்றினர். அந்நாட்களில் 1848-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1851 வரை ஜாண் தாமஸ் குடும்பத்தோடு விடுப்பில் சென்றார். அம்மூன்று வருஷங்களிலும் சொஃபையா ஸ்ப்ராட் அம்மாள் **எலியற்றக்ஸ் ஃபோர்ட்** பள்ளியின் நிர்வாகப் பொறுப்பும் ஏற்றிருந்தார்.

தாமஸ் ஐயர் திரும்பி வந்த பின்பும் மெய்ஞ்ஞானபுரத்திலேயேயிருந்து பணியாற்றிய ஸ்ப்ராட் தம்பதியர் 1852ம் வருஷம் **சுவிசேஷபுரத்துக்கு** மாற்றப்பட்டனர். அங்கு போய்ச் சிறிது காலத்தில் 1849ம் முதல் கடாட்சபுரம் வந்து அப்பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந்த தன் தங்கை **மேரி ஜேனுக்கும்**, தன் கணவரின் தம்பியும் பாளையங்கோட்டை பிரிப்பராண்டிப் பள்ளியில் ஆசிரியராயிருந்த **தாமஸ் ஸ்ப்ராற்றுக்கும்** திருமணத்தை சொஃபையா ஷ்ப்ராட் தன் பங்களாவிலேயே நடத்தி மகிழ்ந்தார். (ஏப்ரல் 20, 1852) மிஷனெரிமார் பலர் தம்பதிகளாய் வந்து கலியாணத்தைச் சிறப்பித்தனர்.

அடுத்த வருஷம் **சொஃபையா** பிரசவத்துக்காகப் பாளையங்கோட்டைக்குப் போனார். மருத்துவ வசதிகள் வெகு குறைவாயிருந்த காலம் அது. கஷ்டப் பிரசவம் அம்மாள் சமாதானமாய்க் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் (17 மார்ச் 1853).

2

சார்லட் கஃபி கிபெர்ன் அம்மாள் (C.M.S.)
1843 - 1849

சார்லட் கஃபி கிபெர்ன் அம்மாள் (Miss Charlotte Cuffie Giberne) திருநெல்வேலிக்குத் திருமணமாகாமல் வந்த முதல் பெண் மிஷனெரி. சொஃபியை ஹாப்ஸ் திருமணமாகாதவராக வந்தாலும் ஜேம்ஸ் ஸ்ப்ரா ஐயர் என்ற மிஷனெரியை மணந்த பிறகே C.M.S. மிஷனெரியாக ஏற்கப்பட்டார்.

திருநெல்வேலி C.M.S. சேகரங்களில் பள்ளிக்கூடங்கள், குறிப்பாக பெண்கள் பள்ளிகள் பெருகின போது ஆசிரியைகள் தேவைப்பட்டார்கள். தேவையான ஆசிரியைகள் கிடைக்கவில்லை. முறைப்படி ஆசிரிய பயிற்சிப் பெற்ற ஆசிரியைகளோ ஒருவருமேயில்லை. ஆகையினால் பாளையங்கோட்டை C.M.S. பெண்கள் போர்டிங் பள்ளியை (அதுவே இன்றைய **மேரிசார்ஜென்ற்** பெண்கள் மேனிலைப் பள்ளி) ஒரு செமினெரியாக நடத்தி ஓரளவு ஆசிரியப் பயிற்சியும் மாணவிகளுக்குக் கொடுக்க மிஷனெரிமார் திட்டம் செய்தனர். அது அதிக பயனுள்ளதாயிருக்கவில்லை. ஆகையினால் பெரிய மிஷனெரிகளான பாளையங்கோட்டை **ஜியார்ஜ் பெற்றிட்**, டோனாவூர் **எட்வர்ட் டென்ற்** மெய்ஞ்ஞானபுரம் **ஜாண் தாமஸ்** ஐயர்மார் ஆசிரியைப் பயிற்சி பள்ளியொன்றை நிறுவி ஆசிரியைகளைப் பயிற்றுவிக்கத் தீர்மானித்து மேல் கமிற்றிகளின் ஒப்புதலையும் பெற்றனர்.

அந்நாட்களில் கீழ்நாட்டுப் பெண் கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் (Society for Promoting Female Education in the East) சார்பில் இலங்கையில் கொழும்பு நகரில் பெண் கல்விப் பணி துவங்க அனுப்பப்பட்ட **மிஸ்கிபெர்ன்** அம்மாள் அதில் வெற்றி பெறாமல், திரும்பிப் போய் விட தீர்மானித்தார். இங்கிலாந்துக்குப் புறப்படும் முன் தென்னிந்தியாவில் தன்னுடன் கல்லூரியில் படித்த தன் சிநேகிதி **சொஃபையா ஹாப்ஸை** பார்த்து விட்டுப் போக முடிவு செய்து, தூத்துக்குடி வந்து நல்லூர் சேர்ந்தா

அந்த அம்மாள் ஆசிரியப் பயிற்சிப் பெற்றவர். சொஃபையாவும் அப்படியே. ஆகவே இருவரையும் இணங்கச் செய்து, ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியைத் தொடங்கி பெற்றிட் ஐயரும் அச்சமயம் பாளையங் கோட்டைக்கு வந்திருந்த M.C.C. செயலர் ஜாண்றக்கர் ஐயரும் திட்டமிட்டு அதில் வெற்றி பெற்றனர்.

தென் இந்தியாவின் மிஷனெரிப் பணியை செய்து கொண்டிருந்த கிபெர்னும், சொஃபையா ஹாப்ஸீம் பள்ளியை நிறுவுவதற்கு ஏற்ற இடத்தைத் தேடி அலைந்து, கடாட்சபுரத்தைத் தெரிந்து கொண்டு பெண்கள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியை (Female Normal School) -1843ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அக்கிராமத்தில் நிறுவி நடத்தினர்.

நம் பள்ளிகளில் 3ம் வகுப்பு (அக்காலத்தில் அது முதல் வகுப்பு எனப்பட்டது. முதல் வருஷம் மூன்றாம் வகுப்பு எனப்பட்டது) அதாவது மூன்றாவது வருஷப் படிப்பை வெற்றிகரமாய் முடித்தவர்கள் ஆசிரியப் பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு இங்கிலீஷ், தமிழ், கணக்கு, வேதபாடம் முதலியவற்றுடன் ஆசிரியப் பயிற்சிப் பாடங்களும் கற்பிக்கப்பட்டன. கடாட்சபுரம் மிஷன் பெண்கள் பள்ளியே பயிற்சி பெறும் பள்ளியாகப் பயன்பட்டது.

1844 - 45 ஹாக்கின்ஸ் அம்மாள் உதவிக்கு வரவே சொஃபையா ஹாப்ஸ் மெய்ஞ்ஞானபுரத்துக்கு மாற்றப்பட்டார்.

முதல் வருஷம் சேர்க்கப்பட்ட மாணவிகள் முப்பது பேர். பாலர் வகுப்பொன்று துவக்கவும் கிபெர்ன் முயற்சி செய்து வந்தார். பயிற்சி மாணவிகள் சேர்க்கப்பட்ட நாளிலிருந்து பயிற்சி முடித்து வெளியேறும் நாள் வரை அவர்களுக்கான அனைத்துச் செலவுகளையும் மிஷனே ஏற்றது.

ஆங்கிலத்திலும் வேத அறிவிலும் ஆசிரியைப் பயிற்சி மாணவிகள் அதிகத் தேர்ச்சி பெற்றார்கள். இயேசுவடியாள் என்ற மாணவியின் திருமணம் இங்கிலீஷிலேயே நடத்தப்பட்டது! (மறையவிருந்த மாணிக்கக் கற்கள் பாகம் 2, பக். 31 காண்க)

ஆயினும் இப்பள்ளியை நடத்துவதில் கிபெர்னின் பிரயாசங்களும் கஷ்டங்களும் எவ்வாறுயிருந்தன என்பதையும், 1847ம் ஆண்டு ஜுன் 20ம் தேதியுடன் முடிந்த அரை வருஷ அறிக்கையில் காணலாம். அவர் எழுதுவது:

என் பள்ளி ஆசிரியைகள் மதிய உணவுக்காகத் தங்கள் வீடுகளுக்குப் போகும் பொழுது, அவர்களில் ஒரு ஆசிரியையை நிறுத்தி வைத்து, அவ மாணவிகளோடு விடுதியில் பிள்ளைகளோடிருக்கக் கட்டளை யிட்டிருக்கிறேன். சாப்பிடப் போனவர்கள் திரும்பி வந்த பின் இவ உணவுக்குச் செல்வாள். இப்படியே முறை வைத்து ஒவ்வொரு நாளு போய் வந்தார்கள். இப்படிச் செய்வதினால் பிள்ளைகள் தவறு செய்வ தடுக்கப்படுகிறது. தண்டனைகள் கொடுக்க வேண்டியதுமில்லை.

மேலும் 22 ஜனவரி 1848 எழுதின நாட்குறிப்பில் "ஆசிரியைப் பயிற் மாணவிகளுக்கு ஒரு மாதமும் பாலர் பள்ளிக்கு ஒரு வாரமும் விடுப்பு கொடுத்தேன். தங்கள் வீடுகளுக்குப் போகும் பொழுது, தங்க துணிகளையும் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு போகும்படி பரீட்சார்த்தமாக, அனுமதி கொடுத்தேன். அந்தப் புத்தகங்கள் அவர்க ஆலய ஆராதனைக்குக் கொண்டு போக வேண்டியவை. இதற்கு மு இப்படி அனுமதித்ததில்லை. ஏன் என்றால் அவர்கள் ரொம்ப அழுக்காகவு கவலையீனமாயுமிருக்கிறார்கள். அவர்களுடைய பொருட்களில் பாதியை தொலைத்து விடுவார்கள் அல்லது யாருக்காவது கொடுத்து விடுவார்கள் ஆனால் இந்தத் தடவை, அவர்கள் போகும் போது அவைகள் எவ்வள சுத்தமாகவும் துப்புரவாகவும் இருந்தனவோ அதே போலத் திரும்பி வரு போது கொண்டு வந்தார்கள். விடுமுறை நாட்களில் நான் அந்த பிள்ளைகளை அவர்களுடைய வீடுகளில் பார்த்த போது, ஒரே ஒருத்தியை தவிர மற்றனைவரும் இங்கே என்னுடனிருக்கிற பொழு எப்படியிருந்தார்களோ அப்படிச் சுத்தமாகக் காணப்பட்டார்கள். இ நன்றியறிதலுடன் பாராட்டப்பட வேண்டிய காரியம் தான். இது ஒரு சின்ன விஷயம் எனினும், இந்த மாதிரிச் சின்னச் சின்னக் காரியங்களி கவனமுள்ளவர்களாயிருக்கப் பழக்குவோமானால், அது அவர்களுடை இயல்புக்கு மாறாயிருப்பினும், வருஷங்கள் செல்லச் செல்ல, அறி விருத்தியாகவே தாங்கள் பள்ளிக் கூடத்தில் பழகிய நல்ல பழக் வழக்கங்களைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது தங்களுடை நன்மைக்காகவே என்று கண்டு கொள்வார்கள். பெண்கள் போர்டி பள்ளிகளில் (போர்டிங்கில் வாழ்ந்து) படிக்கும் பிள்ளைகள் தங்க (உடைகள் ஆடைகளாகிய) துணிகளைத் தாங்களே துவைத்துச் சுத்த

பண்ணிக் கொள்ளச் செய்வதில், திருநெல்வேலியில் இரண்டே இரண்டு மிஷனெரி அம்மையார் தான் வெற்றி பெற்றியிருக்கிறார்கள். நானும், அவர்களுடைய வழியைப் பின்பற்றி அவர்கள் முன் மாதிரியை இப்பள்ளியில் ஆரம்பித்திருக்கிறேன்'' என்று வரைகிறார்.

அக்காலத்தில் **ஹாக்கின்ஸ்** என்ற ஒரு அம்மாள் கிபெர்னுக்கு உதவியாக அனுப்பப்பட்டார் (1847). அவ்வருஷம் வருஷாந்தரப் பரீட்சை பண்ணைவிளை மிஷனெரி **ஜாண்றக்கர்** ஐயரால் நடத்தப்பட்டது.

அடுத்த வருஷத்தில் (1848) ஆசிரியப் பயிற்சி மாணவிகள் 26, பாலர் பள்ளியில் 35 குழந்தைகள்.

அந்த ஆண்டு **கிபெர்ன்** தன் ஆசிரியப் பயிற்சி பள்ளியைப் பற்றி எழுதியது: "எவ்வளவு அதிகக் காலம் நான் இப்பள்ளிகளில் பணியாற்றுகிறேனோ அவ்வளவுக்கு முன்னேற்றம் இருக்கத் தான் செய்கிறது. அதோடு அவ்வளவுக்குக் குறைபாடுகளையும் சீர்ப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. சில வருஷங்கள் பின்னிட்டுப் பார்க்கும் போது, ஆசிரியப் பயிற்சிப் பள்ளியைத் துவங்கின காலத்தில் என்னைச் சூழ்ந்திருந்த பதினைந்து பதினாறு வயதுப் பெண்களை நினைவு கூறுகிறேன். அவர்களுடன், இப்பொழுதிருக்கிற அதே வயதுப் பெண்களை ஒப்பிடடுப் பார்க்கிறேன். கீழ்ப்படிதல், ஒழுக்கம், சுத்தம் முதலிய நற்பண்புகளில் சின்னப் பிள்ளைகளுக்கு இவர்கள் முன் மாதிரியாயிருக்கிறார்கள். இவர்களுடைய ஆசிரியைகள் கூட அந்த அளவு முன்னேறவில்லை. இது எனக்கு ஆச்சரியமாயுமிருக்கிறது. என் உள்ளம் நன்றியால் நிரம்பவும் செய்கிறது. நான் சொல்வதற்கென்ன இருக்கிறது! கர்த்தர் பெரிய காரிங்களைச் செய்கிறார். இங்கிலாந்தில் ஆசிரியைகள், வேலையாட்கள் செய்கிற அநேக சின்னச் சின்னக் காரியங்களை இங்கு நானே செய்ய வேண்டியதாயிருப்பது எனக்குப் பெரிய பாரமாகத் தான் இருக்கிறது. ஆனால், நானே அவைகளைக் கவனிப்பது அவசியம். சில சமயம் அதற்கேற்ற பிரதிபலன் எனக்கு அருளப்படுவதையும் உணருகிறேன். இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியதிருக்கிறதென்பது உண்மையே. எனினும் திரும்பிப் பார்க்கும் போது முன்னேற்றத்தையே காண்கிறேன்'' என்பது,

பள்ளிக்குத் தேவையான கட்டிடங்கள், போர்டிங் பிள்ளைகள் தங்க விடுதி அறைகள், தனக்கும் உடன் மிஷனெரிக்கும் பங்களா ஆசிரியைகளுக்கு வீடுகள் முதலியவற்றையும் கட்டினார். கடாட்சபுரம் தேவாலயத்துக்குப் பின் அக்கட்டிடங்கள் சிலவற்றின் அஸ்திவாரங்கள் சில அண்மை வருஷங்கள் வரை காணப்பட்டன. சில வீடுகள் பல மாறுதல்களுக்குட்பட்டு, இன்னமுமிருந்து வருகின்றன.

திருநெல்வேலிக் கிறிஸ்தவர்களும் மற்றவர்கள் பலரும் சென்னையில் குடியேறிய பகுதிக்குத் **திருநெல்வேலி குடியிருப்பு** என்று பெயர். சென்னைக் கமிற்றி, அக்குடியிருப்பில் பெண்கள் பள்ளியொன்றைத் துவக்கி, அதை நிர்வகித்து நடத்த **கிபேர்ன் அம்மாளே** தகுந்தவர் என்று தீர்மானித்து, அவரை அங்கு மாற்றினார்கள் (1849).

அவருடைய இடத்தில் **சொஃபை(ஹாப்ஸ்) ஸ்ப்ராட்** அம்மாளின் தங்கை **மேரி ஜேன் ஹாப்ஸ்** கடாட்சபுரம் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியின் தலைவியாக நியமிக்கப்பட்டார். அவர் வந்து (1849) பணியேற்றார்கள்.

மிஸ் ஹாக்கின்ஸும் அவ்வாண்டே போய் விட்டார். எனவே மேரி ஹாப்ஸுக்கு உதவியாக **மிஸ் நியூமன்** நியமனமானார் (1850).

3

ஜியார்ஜ் யீட்ஸ் ஹெய்ன் ஐயர் (S.P.G.)
1840 - 1845

ஜியார்ஜ் யீட்ஸ் ஹெய்ன் ஐயர் (Rev. Gefoge Yeats Heyne) 1815ம் வருஷம் செப்டம்பர் மாதம் 28-ம் நாள் **சென்னையில்** பிறந்தார். இவருடைய பெற்றோர் சென்னைவாசிகளான ஆங்கிலோ - இந்தியர். பள்ளிப் படிப்பு முடித்து, இவர் கல்கத்தாவுக்குச் சென்று அங்குள்ள **பிஷப்ஸ் கல்லூரியில்** இறையியல் கற்றார் (1831 - 35). பின் S.P.G.-யின் மிஷனெரி ஊழியத்துக்குத் தன்னை ஒப்புக் கொடுத்து, சில காலம் பணியாற்றிய பின் 1839 டிசம்பர் 6-ம் தேதி சென்னை அத்தியட்சரால் உதவிக் குருவாக அபிஷேகிக்கப்பட்டார்.

மறு வருஷத்தில், M.D.C.யினர் **முதலூரிலிருந்து C.S.கோலாஃப் ஐயரைத்** திண்டுக்கல்லுக்கு மாற்றி, **ஹெய்ன் ஐயரை முதலூரில்** நியமித்தனர். 1840 ஜூன் மாதம் 11-ம் தேதி அவர் முதலூர் சேகரப் பொறுப்பை ஏற்றார்.

அக்காலத்து முதலூர் மிஷனெரி இடையன்குடி சேகரத்தையும், இந்நாளைய கிறிஸ்தியாநகரம், குலசேகரப்பட்டிணம் முதலிய சபைகளையும் கண்காணிக்கும் பொறுப்புடையவர். 1840 பின் பகுதியில் அவர் குருப்பட்டம் பெறும் வரை நாசரேத் மிஷனெரி **கேமரர் ஐயர்.** இவருடைய பணியின் மேற்பார்வையாளராக இருந்து, வழி நடத்தி வந்தார். 1841ல் இடையன்குடி சேகரம் **ராபர்ட் கால்டுவெல் ஐயரிடமும்**, 1843-ல் கிறிஸ்தியாநகரம் தனி சேகரமாகி, **மக்லைட் ஐயரிடமும்** ஒப்புவிக்கப்பட்ட பின்பு கூட, முதலூர் ஒரு பெரிய சேகரமாகவே காணப்பட்டது.

ஹெய்ன் ஐயரின் ஐந்தாண்டுப் பணியைப் பற்றிய விபரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவருடைய நாட்களில் சேகர சபைகள் பிரச்சனைகளின்றிச் சீராக வளர்ந்து வந்தன. பள்ளிக் கூடங்களும் சீராக நடந்து வந்தன.

1844 - 45ல் **ஹெய்ன் முதலூர் பெண்கள் விடுதிப் பள்ளியை** (Girls Boarding School) நிறுவினார். திருமதி. ஹெய்ன் அம்மாளின் மேற்பார்வையில் அது நடைபெற்றது.

1845ம் ஆண்டு ஹெய்ன் **சென்னைக்கு** மாற்றப்பட்டார். பின் திருச்சி **இருங்கலூர்** முதலிய பல இடங்களில் ஊழியம் செய்து, 1878ல் ஓய்வெடுத்துச் சென்னையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது 1880 டிசம்பர் 14-ம் தேதி 65 வயதுடையவராய் மறுமைக்குள்ளானார்.

4

செப்ற்றிமஸ் ஹாப்ஸ் ஐயர் (C.M.S.)
1842 - 1853

செப்ற்றிமஸ் ஐயர், ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயரின் இளைய சகோதரர் 1816-ம் ஆண்டு பிறந்த இவர், தன் 25-ம் வயதில் உதவிக்குருப்பட்டமும் (1841) அடுத்த வருஷம் குருப்பட்டமும் லண்டன் நகரத்து அத்தியட்சரிடமும் பெற்று (1842). அவ்வாண்டு அக்டோபர் 28-ம் நாள் **திருநெல்வேலி** வந்து சேர்ந்தார். அவருடன் அவருடைய சகோதரி **ஸொஃபையா ஹாப்ஸ்** அம்மாளும் வந்தார். ஏற்கனவே பாளையங்கோட்டையில் மிஷனெரியாயிருந்த ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயரும் மற்ற மிஷனெரிமாரும் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

செமினெரி 1842 - 46 :

செமினெரித் தலைவராயிருந்த **ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயர் நல்லூருக்கு** மாற்றப்படவே **செப்ற்றிமஸ் ஹாப்ஸ்** ஐயர் செமினெரித் தலைவரானார். அவருக்கு உதவியாக **ரேனியஸ் ஐயரிடம்** இதே செமினெரியில் கற்று, பின் **யாழ்ப்பாணத்தில் பூர்பண்டிதரிடம்** பயின்ற **வின்ஃப்ரெட் சற்குணமும்,** செமினெரியில் படிப்பை முடித்துப் பின் சென்னை இலக்கணப் பள்ளியில் கற்றுத் தேறிய **வீரபாகு வேதநாயகமும்** (இவரே பிற்காலத்து பிரசித்தப் பெற்ற வாகைக்குளம் வேதநாயகம் ஐயர்) மேலும் சிலரும் ஆசிரியராயமைந்தனர்.

செப்ற்றிமஸ் காலத்தில் செமினெரி மாணவர் 1842-ல் 30, 1843-ல் 46, 1844-ல் 40, 1845-ல் 33.1846-ல் 48. முதல் வருஷத்திலிருந்தே இங்கிலீஷ் கற்றுக் கொடுக்கப்பட்டது. கடைசி வருஷ மாணவர் லத்தீன் மொழியிலும் கூட சிறப்பாகத் தேர்ச்சி பெற்றார்கள். "மாணவர்கள் அதிக சந்தோஷமாயிருக்கிறார்கள். மிகுந்த சுறுசுறுப்புடன் காணப்படுகிறார்கள். ஊக்கம் மிக்கவர்களாயிருக்கிறார்கள்" என்றெழுதுகிறார். அதிகமான நேரத்தை செமினெரி மாணவர்களுடன் அவர் செலவழித்தார். கிராமச் சபைகளில் ஆலயப் பிரதிஷ்டை போன்ற சம்பவங்கள் நிகழ்ந்தால் தன் மாணவர்களனைவரையும் கூட்டிக் கொண்டு போய் பாட்டுகள் பாடச் செய்து,

அவ்வைபவங்களில் கலந்து கொண்டு கிராமச் சபை மக்களை
கௌரவித்து, மகிழ்விப்பது அவருக்குப் பிரியமானவொன்று.

நான்காண்டுகள் செமினெரித் தலைவராயிருந்தபின்
எக்காரணத்தினாலோ விடுப்பில் (Furlough) இங்கிலாந்துக்குப் போய்விட்
1949-ம் ஆண்டு திரும்பி வந்து, புதிதாக உருவாக்கப்பட்ட பாவூர் சே
மிஷனெரியானார்.

பாவூர் 1949 - 53 :

மிஷனெரி ஊழியத்தைத் துவக்கினது முதல் செமினெரியி
தலைவராகவும், ஆசிரியராகவுமிருந்த செப்ற்றிமஸ்க்கு சபை ஊழியமு
சபை மிஷனெரிப் பணியும் முற்றிலும் புதியதும், பாரமுமா
அனுபவமாயிருந்தது. ஒரே ஒரு வருஷம் அனுபவத்திலேயே மிஷனெ
ஊழியத்தின் கஷ்டங்களை உணர்ந்த அவர், 1851 - 52 வரு
அறிக்கையில் "**நமக்கருமையானவர்களை விட்டுப் பிரிந்திருக்
வேண்டியதான கஷ்டத்தோடு, மிஷனெரியைப் பாரப்படுத்துவ
பச்சையான ஒவ்வொரு மரத்தின் கீழும் காணப்படும் விக்கிர
வணக்கமான அருவருப்புகளின் மத்தியில் சபைகளைப் பற்றி
கவலையே.** உறுதியான அஸ்திபாரத்தின் மேல் நாட்டப்படுகிற திருச்சபை
உதவாப் பொருட்களால் கட்டப்பட்டு விடாதிருக்க சில வருஷங்களுக்
மிகுந்த கவனமும் விழிப்புள்ள பராமரிப்பும் தேவையாயிருக்கும் என்
நான் நிச்சயப்படுகிறேன்" என்றெழுதினார்.

சபைகளை ஒழுங்காகச் சந்தித்துத் தன் கையேட்டில் குறிப்புகள் எழு
வைத்தார். அவற்றில் சில வருமாறு :

1849-ம் வருஷம் ஆண்டறிக்கையில் :

கல்யாணிபுரம் : நம்பிக்கை தரும் சில நல்ல கிறிஸ்தவர்களைக் கொண்
நெடுங்கால சபை. மற்ற அநேக சபைகளைவிட நன்கு போதிக்கப்பட்டுள்ள
உறுதியான சபை.

இலஞ்சி : இதுவும் ஒரு நெடுங்காலச் சபை. உறுதியானதும், நன்
போதிக்கப்பட்டிருப்பதுமான சபையே.

விசுவாசபுரம் : இதுவும் ஒரு பழைய சபை. பாடங்களை நன்கு கற்றிருக்கிற நிலையான சபை.

மைலப்பபுரம் : எட்டு வருஷங்களுக்கு முன் உண்டான ஒரு சிறிய சபை. இந்நாள் பரியந்தம் அமைதியும், நிலையான ஸ்திரத்தன்மையும் நன்னடத்தையில் கவனமுமுள்ள சபை.

1850-ம் வருஷ அறிக்கையில் காணப்படும் நாட்குறிப்புகள் :

புலவனூர் : 12.10.1850 சபையைச் சந்தித்து பாடங்களில் சபையாரின் அறிவைச் சோதித்தேன்.

கல்யாணிபுரம் : 13.10.1950 இங்கு நற்கருணை ஆராதனை நடத்தினேன். பதினாறு பேர் பங்கு பெற்றனர். இங்கு பலத்த மழை.

நீதிபுரம் : 14.10.1850 இங்கு திடப்படுத்தலுக்கு ஆயத்தப்படுகிறவர்களைச் சோதித்தேன். பள்ளிக்கூடத்தையும் பார்வையிட்டேன்.

கடையம் : 14.10.1850 சபை சந்தித்தேன்.

ஐந்தாங்கட்டளை : இவ்வூர் ஜெப ஆலயத்தின் கூரை பலத்த மழையினால் மிகுந்த சேதமடைந்திருக்கிறது.

கோவிலூத்து : 15.10.1850 பலத்த மழை மத்தியானம் 1 மணிக்குத் தான் இங்கு வந்து சேரக் கூடியதாயிருந்தது. சபையார் ஜெப வீட்டில் காத்துக் கொண்டிருந்தார்கள்.

1851-ம், 1852-ம் வருஷ நாட்குறிப்புகளில் சில :

சேர்வைக்காரன்பட்டி 19.10.1851 இது ஒரு நல்ல சபை. மாலையில் ஆராதனை நடத்திப் போதனை கொடுத்தேன்.

கடையம் : நான் சேர்வைக்காரன்பட்டிக்கு வந்திருக்கும் தகவல் அறிந்து இருட்டோடே நடந்து இவ்வூர்ச் சபையார் இங்கு வந்து விட்டார்கள். இங்கே மாலை ஆராதனை முடிந்து விட்டதெனினும் நான் கடையம் சபையாரை ஏற்றுக் கொண்டு ஆராதனை நடத்திப் போதனையும் கொடுத்தேன். திரும்பிப் போவதற்கு அவர்களிடத்தில் தீவட்டியுமில்லை. விளக்கும் (Lantern) இல்லை. அதற்கெல்லாம் **அவர்களிடத்தில் பணமில்லை. அவ்வளவு** ஏழைகள். அவர்களை உட்கார வைத்து, அவர்களுடைய கிறிஸ்தவ

அறிவைக் கொடுத்தேன். இந்தச் சேகரத்திலேயே மிகவும் அன்னை காலத்தில் இப்பக்கம் கிறிஸ்தவர்களானார்கள். இது நினைக்கையி எனக்கு அதிகத் திருப்தி தான்.

ஜயபுரம் 09.02.1852 இந்தச் சபையில் கிறிஸ்தவர்கள் கொஞ்ச பே தான். ஒரு தேவாலயம் இங்குண்டு. திரவியமும் நிறைந்த சபை. அ னைக்குத் தொடர்ந்து வரும் கவலை.

காக்கையனூர் 09.02.1852 ஆலயத்தில் ஆராதனை நடத்தினே பத்து பேர் தான் வந்திருந்தனர். ஆனால் என் மனதுக்கு மகிழ்ச்சிய திருப்தியளித்தார்கள். பின்பு வியாதியாயிருக்கும் தாவீதைப் பார்த் ஜெபித்தேன். காக்கையனூர் தாவீது ஒரு சிறந்த கிறிஸ்தவ பக்தன் அந்தந்த நாளின் வேலை முடிந்த பின் எங்காவது போய் யாருக்காவ நன்றித் தான் பிரதிகளைக் கொடுத்துச் சுவிசேஷத்தை அறிவிக்காவிட்டா அவருக்கு தூக்கம் வராது. 1851-ம் ஆண்டிலொரு நாள் உயர் சா இந்துக்கள் வாழ்ந்த ஓர் ஊரில் சுவிசேஷம் அறிவித்த அவரை இப்பக்க கல்லெறிந்தனர். அவர் கீழே விழுந்ததும் நெருங்கி வந்து கல்லெறிந்தன மரணம் நிச்சயமென்றெண்ணின தாவீது கல்மாரியினூடே முழங்காற்படியிட்டு கைகளை உயர்த்தி அண்ணாந்து பார்த்து, "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று உரத்த சத்தமாய் சொன்னார். அதை கேட்ட பகைவர் ஆச்சரியப்பட்டு ஓடி விட்டனர். பின் மெதுவாக நடந்து தாவீ ஊர் போய் சேர்ந்தார்.

கரிசலூர் : 20.10.1852 மாலை 7 மணிக்கு இங்கு வந்தேன். பலத்த மழை பெய்தது. மழைக்குப் பின் ஆராதனை நடத்தினேன். சபையார் தங்க பாடங்களை நன்கு கற்றிருக்கிறார்கள். எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

காக்கையனூர் : 20.10.1852 தாவீது இன்று இறந்து விட்டார்.

இலஞ்சி : 22.10.1852 அதிகாலையில் ஆராதனை நடத்தினேன். சபைய அநேகர் வந்தார்கள். மத்தியானம் நற்கருணை ஆராதனை நடத்தினே 15 பேர் நற்கருணை பெற்றார்கள்.

1853-ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஐயர் மறுபடியும் விடுமு சென்றார். ஆனால் அவர் விடுப்பு முடிந்துத் திருநெல்வேலிக்கு வரவில்ல

விடுப்பில் போகும் முன்னர் அவர் மேற்கமிற்றிக்கு 12.8.1852-ல் எழுதின ஒரு கடிதத்தில் தன்னுடைய சேகரத்தில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 263 பேரும் மலைவாழ் மக்கள் 150 பேரும் (மொத்தம் 413) புதிதாகக் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள் என்று எழுதினார்.

மலையரசர் என்றறியப்பட்ட மலைவாழ் மக்கள் **பாவநாசம்** மலைகளில் பதினைந்து மைல்களுக்கு அப்பால் வாழ்ந்த ஏழை ஜனங்கள். அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்ட, பாவூர் சேகர பள்ளியாசிரியரான **வேதமுத்து, மாசிலாமணி** என்ற இரண்டு ஊழியர். செப்ற்றிமஸ் ஹாப்ஸ் ஐயரின் அனுமதி பெற்று, மலையேறி, அடர்ந்த காடுகளில் அவர்களைக் கண்டுபிடித்துப் பழகிச் சில நாட்கள் தங்கியிருந்து, நட்புறவு கொண்டாடி, அவர்களுக்கு இரட்சகரின் அன்பின் சுவிசேஷம் கூறித் திரும்பினர் (மார்ச் 7 - 24, 1851). அது முதல் மேலும் சில தடவைகள் அம்மக்களைத் தேடிச் சென்று சுவிசேஷம் கூறி வந்தனர். ஆகஸ்ட் மாதத்தில் **செப்ற்றிமஸ் ஐயரும்** அவருடைய தமையனார். **ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயரும்** மலையேறி காடுகளில் அவர்களை நேரில் சந்தித்துத் திரும்பினர். அது முதல் அவ்வூழியம் தீவிரப்படுத்தப்பட்டு, அம்மக்களில் 150 பேர் விசுவாசத்துக்குள் வரவும், அவர்கள் மத்தியில் ஒரு பள்ளிக்கூடம் நிறுவப்படவும் நிரந்தர ஊழியம் நடைபெறவும் ஏதுவாயிற்று. அப்பள்ளியில் படித்த **சுவிசேஷமல்லன்** என்ற இளைஞன், பின்னால் **நல்லூர்** ஆண்கள் போர்டிங் பள்ளியில் படித்து முடித்து, திரும்பிப் போய் தன் ஜனங்களுக்கு உபதேசியாராய் நியமிக்கப்பட்டார்.

சில வருஷங்களுக்குப் பின், மலைவாழ் மக்கள் மத்தியில் நடந்த இவ்வூழியம் திருவாங்கூர் C.M.S. மிஷனெரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

5

ஜேம்ஸ் ஸ்ப்ராட் ஐயர் (C.M.S.)
1843 - 1854

சென்னையில் வாழ்ந்த ஸ்ப்ராட் தம்பதியருக்கு ஜேம்ஸ், தாமஸ், ஜான் என்று மூன்று குமாரர்கள் இருந்தார்கள். மூவரில் இருவர் திருநெல்வேலியில் மிஷனெரி குருமாராகவும், மூன்றாமவரான ஜான் திருவாங்கூரில் 'லே' மிஷனெரியாகவும் C.M.S. சார்பில் ஊழியம் செய்தார்கள்.

ஜேம்ஸ் ஸ்ப்ராட் C.M.S. ஊழியத்துக்குத் தன்னை ஒப்புக் கொடுத்து சங்கத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, சென்னையிலிருந்த CMS மிஷனெரி பயிற்சி பள்ளியில் படித்தார். பயிற்சி முடிந்ததும், தன் 21 வது வயதில், மெய்ஞ்ஞானபுரத்தில் ஜான் தாமஸ் ஐயரின் கீழ் மிஷனெரி உபதேசியாக 1843-ம் வருஷம் ஜூன் மாதம் பணியில் சேர்ந்தார்.

முதல் இரண்டு ஆண்டுகள் பயிற்சி உபதேசியாராக ஆராதனை நடத்துவது, வீடு சந்திப்பு போன்ற கடமைகளை உற்சாகமாக நிறைவேற்றி வந்தார். அவர் மெய்ஞ்ஞானபுரத்தில் ஊழியம் செய்யத் துவக்கின மாதத்தில் தான் பெரிய தேவாலயத்துக்கு அஸ்திபாரம் போடப்பட்டு, அதின் கட்டு வேலையும், எலியட் டக்ஸ்ட்ஃபோர்டு பிரதான கட்டிட வேலையும் ஆரம்பிக்கப்பட்டன. தாமஸ் ஐயருக்கு உதவியாக, அவ்வேலைகளை மேற்பார்வை செய்வதும் அவருடைய பணிகளிலொன்று.

1845-ம் ஆண்டில் பாளையங்கோட்டைக்கு வந்த சென்னை அத்தியட்சர் ஸ்பென்ஸர் ஸ்ப்ராட்டுக்கு உதவிக்குருப்பட்டம் கொடுத்தார். அது முதல் அவர் மெய்ஞ்ஞானபுரம் உதவி மிஷனெரியாகக் கூடுதல் பொறுப்புகளுடன் தாமஸ் ஐயருக்குப் பேருதவியாயிருந்து வந்தார். இரண்டாண்டுகள் கழித்து அதே ஸ்பென்ஸர் அத்தியட்சர் ஸ்ப்ராட்டுக்கு குருப்பட்டம் கொடுத்தார் (1847). அதற்கிடையில், தாமஸ் ஐயரின் மனைவி மேரி தாமஸ் அம்மாளுக்கு உதவியாகப் பணியாற்றி வந்த சொக்கையா ஹாப்ஸ் அம்மாளை ஸ்ப்ராட் திருமணம் செய்தார். அது முதல் ஸ்ப்ராட் அம்மாளும் C.M.S.-ன் மிஷனெரிகளிலொருவரானார். தம்பதிகளிருவரு-

தாமஸ் ஐயருக்கும், அம்மாளுக்கும் மிஷனெரி ஊழியத்தில் பெருதவியாயிருந்தனர்.

1847 டிசம்பர் 9-ம் தேதி பெரிய தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அடுத்த வருஷம் ஜனவரி மாதத்தில் தாமஸ் ஐயர் மூன்று வருஷ விடுப்பில் இங்கிலாந்துக்குச் சென்றார்.

மெய்ஞ்ஞானபுரம் சேகரத்தின் மிஷனெரிப் பொறுப்பை ஏற்று **ஜேம்ஸ் ஸ்ப்ராற்றும்** அவர் மனைவியும் அந்த மூன்று வருஷங்களிலும் உத்தமமான ஊழியம் செய்தனர்.

சேகர சபைகள் 62, ஆலயங்களும், ஜெபவீடுகளும் 45, உபதேசிமார் 11, உதவி உபதேசிமார் 14, பள்ளிக்கூடங்கள் 38, ஆசிரியர் 36, ஆசிரியைகள் 10, ஞானஸ்நானம் பெற்றவர்கள் 3124 (ஆ. 897, பெ. 925, பி. 1299) ஞானஸ்நானம் பெறாதவர்கள் 1651 (ஆ. 506, பெ. 495, பி. 650) (மொத்த கிறிஸ்தவர்கள் - 4775). நற்கருணைக்காரர் 444 (ஆ. 179, பெ. 265). பள்ளிக்கூடங்களில் கிறிஸ்தவ மாணவர் 40, மாணவிகள் 433, கிறிஸ்தவரல்லாத மாணவர் 239, மாணவிகள் 13 (மொத்தம் 1135). வாசிக்கப் படித்தவர்கள் 790. சொஃபையா ஸ்ப்ராட் அம்மாள் பெண்கள் போர்டிங் பள்ளி நிர்வாகத்துடன் சேகரப் பெண்கள் ஊழியம் பொறுப்பையும் ஏற்றிருந்தார்.

ஸ்ப்ராட் சேகரப் பொறுப்பேற்றவுடன் **நாலுமாவடி** ஆலயக் கட்டுமான வேலையைத் துரிதப்படுத்தினார். பணமில்லாததினால் தேங்கி நின்ற அவ்வேலைக்குத் தேவையான பணத்தைச் சேகரித்து, ரூ.1,500/- செலவில் 50 அடி நீளம், 30 அடி அகலம், 15' x 14' (கிராதி அறை) அளவு கொண்ட அவ்வாலயத்தைக் கட்டி முடித்து 1850 செப்டம்பர் 24-ம் தேதி புதன்கிழமை அதை பிரதிஷ்டை செய்தார். நாசரேத் **கேமரர் ஐயர்,** சாத்தான்குளம் **ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயர்,** கடாட்சபுரம் **தேவசகாயம் ஐயர்** முதலிய மிஷனெரிமாரும் சேகர ஊழியரும் திரளான சபை மக்களும் அவ்வாராதனையில் பங்கேற்றனர். இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்ற திருவசனத்தின் மீது **ஹாப்ஸ் ஐயர்** அருளுரையாற்றினார்.

பெருகி வந்த சபைகளில் பணியாற்றத் தேவையான பயிற்சி பெற் உபதேசிமார் ஆசிரியர் போன்ற ஊழியர் அக்காலத்தில் வெகு குறைவ இதை ஓரளவாவது நிவிர்த்தி செய்வதற்காக, மெய்ஞ்ஞானபுரத்திலேயே **பிரிப்பராண்டி** (The Preparandi) என்ற **உபதேசிமார் பயிற்சி பள்ளியொன்றை** நிறுவ வேண்டுமென்று **ஜாண் தாமஸ் ஐய** திட்டமிட்டிருந்தார். ஆனால் மெய்ஞ்ஞானபுரம் தேவாலயக் கட்டுமானத்தில் ஈடுபட்டிருந்ததால் அத்திட்டத்தை நிறைவேற்றக் கூடாதிருந்தார். **ஸ்ப்ரா ஐயர்** இக்காரியத்தில் தீவிரக் கவனம் செலுத்தி M.C.C.-யின் அங்கீகார பெற்று 1849-ம் ஆண்டில் மெய்ஞ்ஞானபுரம் பிரிப்பராண்டி என்ற அ நிறுவனத்தை தோற்றுவித்து அதின் தலைவராயிருந்து அதை நடத் வந்தார்.

இங்கிலாந்தில் 1799-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் தேதி C.M.S. சங்க லண்டன் மாநகரத்தில் நிறுவப்பட்டது. எனவே 1849-ம் வருஷ அச்சங்கத்தின் 50-ம் ஆண்டு **ஜூபிலி கொண்டாட** தீர்மானிக்கப்பட்டது C.M.S. ஊழியத்துக்குத் திருநெல்வேலியில் தலைமைப் பீட பாளையங்கோட்டையே எனினும் முழுவதும் C.M.S. மிஷனைச் சேர்ந் கிறிஸ்தவர்களைக் கொண்ட பெரிய ஊர் மெய்ஞ்ஞானபுரம் என்றதால் ஜூபிலியை திருநெல்வேலி C.M.S. சேகரங்களைத்துக்கும் பொதுவான ஒ வைபவமாக மெய்ஞ்ஞானபுரத்தில் கொண்டாட தீர்மானிக்கப்பட்டது ஸ்ப்ராட் ஐயரும் மிஷனெரி ஊழியரும் மெய்ஞ்ஞானபுரம் சபையாரு சகல ஆயத்துங்களும் குறைவின்றிச் செய்வதில் கவனமாயிருந்தனர்.

குறித்த நாளில் C.M.S. S.P.G. மிஷனெரிமாரும் ஏராளமான ஊழியரு திரளான சபை மக்களும் மெய்ஞ்ஞானபுரத்தில் கூடி **ஜூபி கொண்டாடினர்**. ஸ்தோத்திரக் காணிக்கையைக் கொண்டு, ஜூபி ஞாபகார்த்துமாக **ஜூபிலிபுரம்** என்ற பெயருடன் ஒரு கிறிஸ்தவக் கிராமத் அமைக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் பண்டிகை நிறைவுற்றது.

ஸ்ப்ராட் ஐயர், தாமஸ் ஐயரைத் தனது முன்மாதிரியாக வைத் அவருடைய பாங்கிலேயே சபை நிர்வாகம் பள்ளிக்கூடக் கண்காணிப் சுவிசேஷ ஊழியம், சபை ஊழியர் மற்றும் ஆசிரிய ஆசிரியர்கள் மாதாந்தர கூட்டங்கள், சபை சந்திப்பு, சபையாரின் வேத அறிவு சோதனை, சிறு ஊழியம் முதலிய சகல விதமான மிஷனெரிப் பணிகளையும் தா

ஒருவராக மிகுந்த உற்சாகத்துடனும், சுறுசுறுப்புடனும், சேகர அளவில் குறைவின்றி நிறைவேற்றி வந்தார். தனி நபர்களான ஆண் பெண் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய நிலைமை, அனுபவங்கள் முதலியவைகளையும் அவர் நேரில் உரையாடி அறிந்திருந்தார் என்று அவருடைய நாட்குறிப்புகள் காட்டுகின்றன.

குடும்ப வாழ்க்கையும் மிகுந்த மகிழ்ச்சியுடையதாயிருந்தது சொஃபையா அமைதலான பெண் என்றும், அன்பு இருதயம் கொண்டவர் என்றும் தாமஸ் ஐயர் சாட்சி பகர்ந்துள்ளார். மெய்ஞ்ஞானபுரத்தில் அத்தம்பதியினர் செலவிட்ட வருஷங்கள் அவர்களுடைய வாழ்வின் பொற்காலம். ஆண் பெண் போர்டிங் பள்ளி மாணவ மாணவிகளைத் தங்கள் சொந்தப் பிள்ளைகளை நேசிப்பது போல நேசித்தனர். சபையாரின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடைய சுகதுக்கங்களில் இருவருமே கலந்து கொண்டதினால் சபை மக்களும் அவர்களைத் தங்கள் பெற்றோரென மதித்து அன்பு கூர்ந்தனர்.

ஜாண் தாமஸ் ஐயரும் குடும்பத்தாரும் 1851 ஜனவரி மாதம் தங்கள் விடுப்பு முடிந்து மெய்ஞ்ஞானபுரம் வந்து சேர்ந்தனர். அவர்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் ஸ்ப்ராட் ஐயரும் அம்மாளும், சேகர மக்கள், ஊழியரும் வரவேற்றனர்.

அடுத்த வருஷம் ஸ்ப்ராட் ஐயர் சுவிசேஷபுரத்துக்கு மாற்றப்பட்டார் (1852) அங்கு சென்ற சில வாரங்களுக்குள் ஜேம்ஸ் ஸ்ப்ராற்றின் தம்பி தாமஸ் ஸ்ப்ராற்றுக்கும் சொஃபையா ஸ்ப்ராற்றின் தங்கை மேரி ஜேனுக்கும் சுவிசேஷபுரத்தில் திருமணம் நடந்தது (20.04.1852).

மெய்ஞ்ஞானபுரம் போலவே, இங்கும் இருவரும் கடின உழைப்பில் ஈடுபட்டார்கள். அவர்களுக்கு முன் இங்கு மிஷனெரிகளாகப் பத்தாண்டுகள் பணியாற்றிய எட்வர்ட், எலிசபெத் சார்ஜென்ற் தம்பதியரின் ஊழியத்தை அப்படியே தொடர்ந்தார்கள்.

1853 மார்ச் மாதம் சொஃபையாவுக்குப் பிரசவ காலம். இருவரும் பாளையங்கோட்டைக்குப் போய் தாமஸ் - மேரி ஜேன் வீட்டிலிருந்தார்கள். 17-ம் தேதி கஷ்டப் பிரசவம் சொஃபையா இறந்து விட்டார்.

அவருடைய மனைவியைப் பிரிந்த துயரத்தை ஜேம்ஸ் ஸ்ட்ராட்டால் தாங்க முடியவில்லை. துக்கத்தை மறக்க முயன்று தன் வேலைப் பழுவையே அலைந்து திரிந்து ஓயாது உழைத்தார். உழைத்து, உடல் நலம்கெ இருந்தார். நோயுற்றார். தலைவலி, வேட்டிய் காய்ச்சலும் வந்து அவ அழுத்தும் கொண்டு பாளையங்கோட்டைக்குப் போய் சிகிச்சை பெ செய்தனர். சிகிச்சை பலன் தரவில்லை. அந்தாண்டையிலிருந்து சென ஹாட்ஸ் வந்தார். கூடவே இருந்தார். பிஷப்வெஸ்டர் வந்து பார்த்து விட் போயினர். பிழைத்துக் கொள்வார் என்று அனைவரும் நம்பினர். ஆனா “அவருக்கோ நம்பிக்கையில்லை. தன் முடிவு நெருங் விட்டதென்றும், 'அழைப்புக் காகக் காத்திருக்கிறேன்' என்றும் அடிக்க டெனர். ஆனாலும் இன்னும் சில காலம் உயிரோடிருந்து, கர்த்தரை ஊழியத்தைச் செய்வது தேவ சித்தமானால் அதை ஆனந்திக்க தேவிே டொழுது அதில் சேர்ந்து கொள்வார்” என்று ஹாட்ஸ் எழுதுகிறார்.

ஸ்ட்ராட் 'தன் 'அழைப்பு' வருவதற்காக மிகுந்த சமாதானத்தோ காத்திருந்தார்” அந்த அழைப்பு செப்டம்பர் 14-ம் தேதி விடியற்காலை (1854) வந்தது... கர்த்தருக்குள் சமாதானமாய் நித்திரையடைந்தார்.

அவருடைய மரணத்துக்கு இரங்கல் தெரிவித்து டக்கர்' சாமேவல் ஐயர், “பிஷப்வெஸ்டாவில் மிகுந்த திறமையுள்ள மிஷனெரிகளில்; தமிழ் மொழியிலும், பழக்க வழக்கங்களிலும் அவருக்கு இருந்த விசேஷித்த அறி வருங்காலத்தில் மிகுந்த பயனுள்ளவராயிருப்பாரென நம்பிக்கையைத் தந்திருக்கிறது” என்றெழுதுகிறார்.

ஜேம்ஸ் ஸ்ட்ராட் ஐயர் ஒரு வேத விற்பன்னர். அவர் எழுதிய ரோமா நிருப வாக்கியம் என்ற சிறப்பு மிக்க நூல் அதற்கு சான்று.

6

ஜேம்ஸ் பிலிப்ஸ் ஃப்ளெச்சர் ஐயர் (S.P.G.) 1845

ஜேம்ஸ் பிலிப்ஸ் ஃப்ளெச்சர் ஐயர் (Rev. James Philips Flectcher) **இடையன்குடியில் கால்டுவெல் ஐயருக்கு** உதவி மிஷனெரியாகப் பணியாற்றினார். அவருடைய பெற்றோர் ஊர், படிப்பு முதலிய விபரமெதுவும் கிடைக்கவில்லை. **லண்டனில்** அந்நகர் அத்தியட்சரிடத்தில் உதவிக்குருப்பட்டம் பெற்று S.P.G. மிஷனெரியாக இந்தியாவுக்கு வந்து, **இடையன்குடியில்** உதவி மிஷனெரியாக நியமிக்கப்பட்டார். உதவி மிஷனெரியாக என்று சொல்லுவதைவிட, தமிழ் கற்க என்று கூறுவதே பொருத்தமாயிருக்கும்! ஏனெனில் ஓராண்டுக்குள் அவர் **கனந்தாகுடிக்கு** மாற்றப்பட்டார் (1846).

கனந்தாகுடியிலும் ஒரு வருஷம் தான்! மறு வருஷம் **வேப்பேரி** (1847) அங்கும் ஒரு வருஷந்தான்! 1848-ல் Retired! ஓய்வெடுத்து இங்கிலாந்துக்குத் திரும்பினார்.

'**ஒரு மிஷனெரியின் சுயசரிதை**' (Autobiography of a Massionary) என்றொரு நூலும் (1853), **இந்தியாவின் வரலாறு என்றவொரு** நூலும் (1855) எழுதி வெளியிட்டார். மிஷனெரியாயிருந்தது மூன்று வருஷம்! அந்த மூன்று வருஷங்களில் மூன்று தொலைதூரமான மிஷன் பணித்தளங்கள். இதில் ஒரு நூல் எழுதத்தக்க அளவுக்கு என்னென்ன 'மிஷனெரி அனுபவங்கள்' அவருக்குக் கிடைத்தனவோ! அறியோம்.

ஒரு சங்கடமான அனுபவம் நிச்சயம். அது வருஷத்துக்கு ஓரிடம் மாற்றப்பட்டது. **திருநெல்வேலியில் S.P.G. செய்த தவறு இது தான்.** குறுகிய காலத்துக்குள் இடம் மாற்றுவது, அதிலும் 100, 200, 400 மைல்களுக்கு அப்பால் மாற்றி விடுகிறது. **நாசரேத் கேமரர், மர்காஷிஸ், இடையன்குடி கால்டுவெல்** போன்ற சிலர் தான் தொடர்ந்து பல வருஷங்கள் ஒரே இடத்தில் பணியாற்றக் கூடியதாயிருந்தது.

S.P.G. மிஷனெரிமார், ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள், நாட்குறிப்புகள் எழுதி வைக்கவில்லை. அதினால் அவர்களுடைய ஊழிய விவரங்கள்

வரலாற்றாராய்ச்சியாளர்களுக் கிடைப்பதில்லை. சபை வளர்ச் நிறுவனங்கள், கட்டிடங்கள், நிர்வாகம், பிரச்சனைகள் இவைகளைப் பற்றி செய்திகளையும் அறிய முடியவில்லை.

S.P.G. மிஷனெரிமாரின் தொகை எப்பொழுதும் குறைவாகவே இருந் வந்தது. எனவே அவர்களில் பலர் பல தடவைகளில் மூன்று, நான்கு, ஐந் சேகரங்களைக் கூட தன்னந்தனியாகக் கண்காணிக் வேண்டியதாயிருந்தது. இது அவர்களுடைய ஊழியத்தை வெகுவா பாதித்ததில் ஆச்சரியமில்லை.

7

அலன் ஜாண்சன் ஐயர் (S.P.G.)

1845 - 1849

அலன் ஜாண்சன் ஐயர் (Rev. Allan Johnson) இந்தியாவில் பிறந்தவர். (1813 ஜனவரி 23). ஆங்கிலோ இந்தியர். 1842-ல் உதவிக்குருப்பட்டம் பெற்று சென்னை **வேப்பேரியில்** ஊழியம் செய்தார். 1844-ல் குருப்பட்டம் பெற்ற பின் S.P.G. மிஷனெரியாக இராமநாதபுரம் சேகரப் பொறுப்பேற்றார். அக்காலத்தில் **இராமநாதபுரம்** S.P.G. சேகரம் திருநெல்வேலி S.P.G. மிஷனுக்குட்பட்டிருந்தது. அச்சேகரத்தில் அவர் செய்த ஊழியத்தைப் பற்றி விபரங்கள் கிட்டவில்லை.

அடுத்த வருஷம் அவர் **திருநெல்வேலியிலுள்ள புதுக்கோட்டைக்கு** மாற்றப்பட்டு அங்கு மூன்று வருஷங்கள் (1846 - 49) மிஷனெரிப் பணியாற்றினார்.

புதுக்கோட்டைச் சபை 1839-ம் ஆண்டில் உருவானது. அவ்வூர் மணியாச்சி ஜமீனுக்குட்பட்டது. ஜமீந்தாருடைய ஆட்களால் அடிக்கடி அவ்வூரார் பலவிதமாக இம்சிக்கப்பட்டனர். ஊர்த்தலைவனையும், அவர்கள் கொள்ளையடிக்கவே, அனைவரும் **முதலூர் ஹேய்ன் ஐயரிடம்** போய் கிறிஸ்து சபையில் சேர்ந்தார்கள். அதிலிருந்து ஜமீந்தார் அவர்களை மிகவும் கோரமாகத் துன்புறுத்தினார். மக்கள் பயந்து போய் மறுதலித்தார்கள். அதன் பின்பும் ஜமீன்தார் அவர்களை ஒடுக்கத் தொடங்கவே **சாயர்புரம் போப் ஐயர்** காலத்தில் மனந்திரும்பி அனைவரும் சபையில் சேர்ந்தார்கள். மிஷனெரிமாரின் தலையீட்டினால் ஒடுக்குதலும் நின்றது.

1844-ல் கூரை மேவிய பங்களாக் கட்டப்பட்டது. பெரிய உறுதியான ஆலயத்துக்கும் அஸ்திபாரமிடப்பட்டது. இதற்கெல்லாம் துவக்கத்தில் இடையூறு செய்த ஜமீந்தார், பின்னர் மனம் மாறி, ஊழியத்துக்கு உதவுவராய் 150 பனைகளையும், 4 புளியமரங்களையும், 100 வண்டி காட்டு மரங்களையும் கொடுத்தார்.

8

ஆல்ஃப்ரெட் பீற்றர் லௌக்கின் ஐயர்

A.K.C.M.A. (S.P.G) 1845 - 1846

இங்கிலாந்தில் வின்செஸ்டர் அத்தியட்சாதீனத்தில் ஓர் உதவிக்குருவாக அபிஷேகம் பெற்ற இவர், அங்கு பணியாற்றி கொண்டிருக்கும் போது (1845) S.P.G. ஊழியத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு, திருநெல்வேலியில் சாயர்புரத்தில் 1843 அக்டோபரில் போப் ஆயர் நிறுவியிருந்த செமினெரியில் ஓர் ஆசிரியராக நியமிக்கப்படவே இந்தியாவுக்கு வந்து பணியாற்றச் சேர்ந்தார்.

தமிழ் மொழி கற்றார். ஓராண்டு பணியாற்றினார். 1846-ல் திரும்பிப் போய் விட்டார்!

இங்கிலாந்தில் 1849-ல் குருப்பட்டம் பெற்று பற்பல இடங்களில் குருத்துவ ஊழியம் செய்து 1895-ல் இறந்தார்.

9

பேராசிரியர் J.J. செய்மோர் M.A. (S.P.G)

1845 - 1849

சாயர்புரத்தில் போப் ஐயர் நிறுவி நடத்தி வந்த செமினெரியில் அவருக் உதவியாக ஆசிரியப் பணியாற்றுவதற்காக சென்னை வந்தவ அத்தியட்சரால் அனுப்பப்பட்டவர் **செய்மோர்**. M.A. பட்டம் பெற்றவர். **இ கண்களிரண்டும் தெரியாதவரானாலும் சிறந்த ஆசிரியர்**. இவருடை மனைவியும், இவருடைய ஊழியத்தில் உற்ற துணைவியாக விளங்கினா இங்கு வரும் முன் இவர் சென்னை S.P.G. செமினெரியி ஆசிரியராயிருந்தார்.

சாயர்புரத்தில் எவ்வளவு காலம் பணியாற்றினார் என்ப தெரியவில்லை. ஒரு வேளை போப் 1849-ல் சாயர்புரத்தை விட்டுப் போகு போதும் இவரும் போயிருக்கலாம்.

பேராசிரியர் செய்மோர் தர்க்கவியல் (Logic), நன்னெறியியல் (Mor Philosophy), வரலாறு (History) என்னும் பாடங்களைக் கற்பித்தா தலைசிறந்த ஆசிரியர்களான **போப், செய்மோர்** என்பவர்களின் புக இங்கிலாந்தில் ஆக்ஸ்ஃபோர்ட் சர்வ கலாச்சாரம் வரை எட்டே அப்பல்கலைக்கழகத்தினர் சாயர்புரம் செமினெரியில் ஒரு நூல் நிலைய அமைக்கப்படுவதற்கு உதவினார் என்று Digest of S.P.G. Records என்ற நூ மூலம் அறிகிறோம்.

10

சார்ள்ஸ் யோசியா ற்றெய்லர் ஐயர் (C.M.S)

1844 - 1851

சார்ள்ஸ் யோசியா ற்றெய்லர் ஐயர் (Rev. Charles Jasiah Taylor) சென்னைவாசி. 1809-ம் வருஷம் பிறந்தவர் (ஏப்ரல் 30, 1809). சுமார் முப்பது வயதாயிருக்கும் போது, C.M.S. ஊழியத்துக்குத் தன்னை ஒப்புக் கொடுத்து, ஏற்றுக் கொள்ளப்பட்டு, சென்னை C.M.S. மிஷனெரி பயிற்சி பள்ளியில் கற்ற பின், சிலகாலம் மாயவரத்தில் உபதேசியராயிருந்தார். பின் 1844-ம் ஆண்டில் சென்னை அத்தியட்சரிடம் உதவிக்குருப்பட்டம் பெற்றார்.

சென்னை C.M.S. கமிற்றியினர் (M.C.S.) அவரைத் திருநெல்வேலியில் நல்லூர் உதவி மிஷனெரியாக நியமித்தனுப்பினர். நல்லூரில் அப்பொழுது ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயர் சேகர மிஷனெரியாயிருந்தார். அக்காலம் நல்லூர் சேகரம் வடக்கே ராஜபாளையத்தை உள்ளடக்கி வெகுதூரம் வியாபித்திருந்தது. ஹாப்ஸ் ஐயருக்கு உதவியாக, நல்லூர் சேகரத்தின் வடக்குப் பாதியை ற்றெய்லர் மேற்பார்த்தார். தேவைப்படும் போது மேற்கு பகுதி சபைகளையும் கண்காணித்து வந்தார்.

1845-ல் நல்லூர் என்ற வடசேகரம் நல்லூர், சுரண்டை, பாவூர், பனைவடலி என்ற நான்கு சேகரங்களாகப் பிரிக்கப்பட்டது.

பனைவடலி சேகரத்தின் மிஷனெரியாக ற்றெய்லர் ஐயர் நியமிக்கப்பட்டார். அச்சேகரம் வடக்கே ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, ஏழாயிரம்பண்ணை, பனையடிப்பட்டி என்னும் ஊர்களையும் தன்னுள்ளடக்கியதாயிருந்தது. விரிந்து பரந்து கிடந்த தன் பெரிய சேகரத்தில், ஒன்றுக்கொன்று தொலைவிலிருந்த சபைகளை கிராமம் தவறாமல் சந்தித்து, உற்சாகமூட்டி, ஊக்குவித்து வளர்த்து, தவறு கண்டால் தண்டித்து சபை நீக்கம் கூடச் செய்து, சுத்திகரித்து, இவ்வாறு சபை நிர்வாகம் நடத்தினார்.

அவர் எழுதி வைத்த நாட்குறிப்புகளிலிருந்து நாம் அறியக்கூடியவை:

ரங்கசமுத்திரம் : 04.11.1846 சபை சிறிதாயினும் உறுதியும் பலமும் பொருந்தியது.

இலந்தைக்குளம் : 16.09.1849 இங்குள்ள ஆலயம் மிகவும் சிறியது. இவ்வூர் தலைவன் ஓர் இந்து. தன்னைக் கிறிஸ்தவனாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்கிறார். நோக்கம் என்னவாம், அப்படியானால் தான் தன்னுடைய மகன்கள் படிப்பதற்காக ஓர் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தை இந்த ஊரில் நிறுவ மிஷனெரிடம் கேட்க முடியுமாம்!

கம்மாப்பட்டி : சிறிய சபை. நான் போன போது ஆலயத்தில் ஆராதனை நடந்து கொண்டிருந்தது.

செட்டிக்குறிச்சி : 17.09.1849 சிறிய சபை தான். மாலை ஆராதனை நடத்தி சபையாரை சந்தித்தேன்.

கட்டாலங்குளம் : 18.09.1849 முந்நூறு கிறிஸ்தவர்களைக் கொண்ட சபை. கட்டாலங்குளம் ஜமீன்தார் தனக்கும், தன் குடும்பத்தாருக்கும் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார். ஆனால் ஞானஸ்நானத்தை ஒத்திப் போட்டிருக்கிறேன். இந்த ஜமீன்தாருக்கும் எட்டையாபுரம் ஜமீன்தாருக்கும் இடையில் ஒரு வழக்கு நடக்கிறது. கட்டாலங்குளம் ஜமீன் சொத்துக்கள் தனக்கே உரியன என்று எட்டையாபுரம் ஜமீன்தார் வழக்காடுகிறார். இந்த வழக்கில் எட்டையாபுரம் வெற்றி பெற்றால் கட்டாலங்குளம் ஜமீன் குடும்பம் 290 வருஷங்களாக அனுபவித்து வருகிற கிராமங்களும் அவைகளைச் சேர்ந்த நிலங்களுமான சொத்து முழுவதையும் கட்டாலங்குளம் ஜமீன்தார் இழந்து விடுவார். ஜமீன்தாரின் விசுவாசம் இந்த வழக்கின் வெற்றி தோல்வியைச் சார்ந்திருக்கிறதோ இல்லையோ என்பதை நான் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். இதுவரை திருப்திகரமாகவே இருக்கும்படி இருந்து வருகிறது.

ரெங்கசமுத்திரம் : 18.09.1849 மாலையில் இங்கு வந்து மாலை ஆராதனை நடத்தினேன்.

ஏழாயிரம்பண்ணை : 19.09.1849 இங்குள்ள சிறு சபையைச் சந்தித்தேன்.

பனையடிப்பட்டி : 19.09.1849 இந்த சபை வெகு காலமாக அதிக ஒழுங்கீனமானதும், திருப்தியற்றதுமாயிருந்து வந்தது. இன்று ஒழுங்கீன கலியாணத்தினிமித்தம் மூன்று குடும்பங்களை சபை நீக்கம் செய்தேன். இந்த நடவடிக்கை சபையாரை இனி ஜாக்கிரதையாயிருக்கத் தூண்டுகிறது.

கோபால்புரம் : 20.09.1849 இவ்வூரில் இன்று ஒரு புதிய சபையை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். உலகப் பிரகாரமான நோக்கமெதுவுமில்லை. இந்த மக்கள் உண்மையான வாஞ்சையுள்ளவர்கள். மாலையில் ஆராதனை நடத்தினேன்.

சிவகாசி : 21.09.1849 இங்கு நிறுவப்பட்டுள்ள பள்ளிக்கூடம் நன்றாய் நடந்து வருகிறது. **புண்ணியன்** என்ற புதுக்கிறிஸ்தவர் தன் உறவினரால் கொடுக்கப்படுகிற கஷ்டங்களைப் பற்றி முறையிட்டார். **பனைவடலியில்** நான் துவக்கி நடத்தி வருகிற பிரிப்பராண்டியில் சேர விரும்புகிறார். அதற்குரிய தகுதி அவருக்கில்லை. ஒரு வேளை வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை தான். கிறிஸ்துமார்க்கத்தில் சேர அவரை தூண்டியிருக்கும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் : 21.09.1849 சேகரத்தில் மிக சிறந்த (the best) சபை இது. சிறிய சபை தான். ஆனாலும் கிறிஸ்து மார்க்கத்தில் உறுதியான பற்றுடையவர்கள் கலியாணம் அடக்கம் இவைகளில் சட்டத்தின்படி இவர்களை நடந்து கொள்ளும்படி செய்வதில் கஷ்டமேயில்லை.

கிருஷ்ணன்கோவில்பட்டி : 22.09.1849 மனுஷர் எவ்வளவு ஏழைகளாயிருக்கக் கூடுமோ அவ்வளவு ஏழைகள் இங்குள்ள கிறிஸ்தவர்கள். அறியாமையிலும் அப்படித்தான். ஆனால் ரொம்ப ஒழுங்குள்ளவர்கள் ஜெப வீட்டுக்கு வருவதிலும் ஒழுங்கு தவறாதவர்கள். மார்க்க அறிவில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களோடு ஜெபிப்பதும் நித்தியத்துக்குரியவைகளைப் பற்றிப் பேசுவதும் இன்பமான அனுபவம். ஜெபவீடு சிறியதாகத்தானிருக்கிறது. அவர்களில் பலர் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்கு பெறுவார்கள் என்பது பற்றி நான் கிஞ்சித்தும் சந்தேகம் கொள்ள முடியாது.

வன்னியன்பட்டி : 22.09.1849 மாலை ஆராதனை நடத்தினேன். பொட்டல்பட்டிச் சபையாரும் வந்து கலந்து கொண்டார்கள்.

1850 -ம் வருஷம் ஆகஸ்ட் மாத நாட்குறிப்புகளில் சில :

இலந்தைக்குளம் : 18.08.1850 சிறிய, ஆனால் திருப்திகரமான சபை கிறிஸ்மார்க்கத்தில் உறுதியான பற்று. புதிதாய் சிலர் மந்தையில் சேர்ந்துள்ளனர்.

கம்மாப்பட்டி : 19.08.1850 அநேகர் வேறிடம் போய் விட்டதால் சபை சிறுத்து விட்டது.

கட்டாலங்குளம் : 20.08.1850 ஆலயமணி வாங்கவில்லை. போர்க்கொட்டு தான் அநேகர் ஆராதனைக்கு வருகிறார்கள். ரொம்ப நம்பிக்கை தரும் சபை. ஆலயக்கூரை வெகு தாழ்வானது. சுவர்கள் ஓர் அடி உயரமே. ஜமீன்தாரின் குடும்ப பெண்கள் முன்பெல்லாம் வீட்டிற்கு வெளியில் வருவதில்லை. இப்போது ஆலய ஆராதனைக்கெல்லாம் வருகிறார்கள். சபையில் ஆதி திராவிடமும் உண்டு. உயர்சாதியினரும் உண்டு. ஆனால் ஆலயத்தில் சாதி இல்லை. ஜமீன்தார் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. எட்டையாபுரம் ஜமீன்தார் இவர்களுடைய நிலங்களைப் பறித்துக் கொண்டாலும் இவர்கள் கிறிஸ்துமார்க்கத்தைத் துறக்கமாட்டார்கள்.

குமாரரெட்டிப்பட்டி : 20.08.1850 நாயக்கர்களைக் கொண்ட இப்புது சபையை இன்று ஏற்றுக் கொண்டேன். எல்லாக் காரியங்களிலும் கிறிஸ்துமார்க்க விதிகளின்படி நடப்போம் என்று வாக்குப் பண்ணி பத்திரம் எழுதிக் கைெயொப்பமிட்டுக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

பனைவடலி சேகரப் பொறுப்பேற்றவுடன் வருங்காலங்களுக்காகப் பெரிய திட்டங்கள் வகுத்து, தென் திருநெல்வேலி சேகரங்களுக்கொப்பாக அது வளர வேண்டுமென்று ஆசித்த **ற்றெய்லர்** ஓர் **ஆண்கள் போர்டிங் பள்ளியையும்** அதனுடனிணைந்த **ப்ரிப்பாரான்டியையும்** நிறுவினார். போர்டிங் பள்ளியில் 20 மாணவர் கற்றனர். பனைவடலி ஆலயத்தில் மாதமொரு நற்கருணை நடத்தினார். சேகர சபைகளிலிருந்து நற்கருணைக்காரர் அவ்வாராதனைக்கு வந்தனர். நமக்குக் கிடைத்துள்ள நாட்குறிப்புகளிலிருந்து நாம் அறியக்கூடிய செய்திகள் இவைகளே யெனினும் பிற மூலங்களிலிருந்து **ற்றெய்லர் ஐயர்** காலத்தில் தோன்றிய சில சபைகளைப் பற்றி ஒரு சில தகவல் கிடைத்துள்ளன.

நல்லூரில் உதவி மிஷனெரியாயிருந்த காலத்திலே ற்றெய்லர் வடபகுதிச் சபைகளைக் கண்காணித்து வந்தார். அவற்றில் இலந்தைக்குளம் ஒரு புது சபை. 1843-ல் தான் அந்த சபை உருவானது. தீழமுடிமன் சபையும் புதிதே (1844). அக்காலத்திலிருந்தே ற்றெய்லர் தீவிர சுவிசேஷ முயற்சி மேற்கொண்டதின் விளைவாக வெங்கடேஸ்வரபுரத்தில் ரெட்டிமார் கிறிஸ்து நாதரை ஏற்றுக்கொள்ள முயன்று வந்தனர் (1844).

தெற்குமைலோடையில் சபையாருக்கு மிகுந்த துன்பமுண்டானதினால், தங்களுக்கு ஆலயமொன்றைக் கட்டின பின்பும் கூட திகைத்து நின்றனர் (1845). ஆனால் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் விசுவாச உறுதி கொண்டு திருச்சபையில் சேர்ந்தனர். (1846 மார்ச் மாதம்) கடம்பூரில் செய்யப்பட்ட சுவிசேஷ பணியின் பயனாகக் கர்த்தரை அண்டிக்கொள்ள விரும்பின பத்து பேரடங்கிய ஒரு கூட்டத்தார் தீர்மானத்துக்கு வரமுடியாதவர்களாக (1845) திகைத்து நின்றனர். ஆயினும் 1846 மார்ச் 14-ம் தேதி ற்றெய்லர் ஐயரிடம் சென்று திருச்சபையில் சேர்ந்தனர். அவ்வருஷத்தில் உண்டான மற்ற இரு சபைகள் சத்திரப்பட்டி, வையக்கவுண்டன்பட்டி சபைகளாகும். கசவன்குண்டு மற்றும் வில்லிசேரியில் வாஞ்சை தெரிவித்தவர்கள் 1847-ல் முன்வரவே அக்கிராமங்களில் சபைகளுண்டாயின. கசவன்குண்டு சபையில் 18 ரெட்டியார் குடும்பங்கள், சுமார் 90 பேர் சபை உறுப்பினர்.

கடம்பூரில் கயத்தாரிலும் ற்றெய்லர் 1849-ல் பள்ளிக்கூடங்களை நிறுவினார். அச்சம்பட்டியில் அவர் செய்த ஊழியம் அவருடைய மரணத்திற்கு பின்பே பலன் தந்தது (1851 டிசம்பர் 11-ம் தேதி அவ்வூரில் சிலர் திருச்சபையில் சேர்ந்தனர். 1852 ஜுன் மாதத்தில் ஊராரனைவரும் கிறிஸ்துநாதரின் மந்தையில் சேர்ந்தார்கள்)

1851-ம் வருஷம் ஏப்ரல் துவக்கத்தில் ற்றெய்லர் ஐயர் ஏதோ ஒரு காரியமாய் பெங்களூருக்குப் போனார். வழியில் சேலம் நகரில் காலரா நோய்வாய்ப்பட்டு இவ்வொப்பற்ற மிஷனெரி தான் நேசித்து சேவித்த இரட்சகரின் சமூகம் சேர்ந்தார். அவருடைய திடீர் மரணம் பனைவடலி சேகரத்தில் மட்டுமல்ல திருநெல்வேலி திருச்சபை முழுவதிலுமே பேரிழப்பாக உணரப்பட்டது.

11

ஜாண் விட்சர்ச் ஐயர் (C.M.S)

1851 - 1869

ஜாண் விட்சர்ச் ஐயர் (Rev. John Whitchurch) இங்கிலாந்தில் மெல்ற்ற மௌப்ரே (Meltron Mowbray) என்ற இடத்தில் 1827-ம் வருஷம் ஆகஸ் மாதம் 20-ம் நாளில் பிறந்து, தெய்வ பக்தியில் வளர்க்கப்பட்டவ மிஷனெரி ஊழிய ஆர்வம் கொண்டு C.M.S-க்கு மனு செய்து, அந் சங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, குருப்பட்டம் பெறாத 'லே மிஷனெரியாக **மெய்ஞ்ஞானபுரம் ஜாண் தாமஸ் ஐயர்** விடுப்புக்கு சென்று திரும்பும்பொழுது, அவருடன் மெய்ஞ்ஞானபுரத்துக் அனுப்பப்பட்டார் (ஜனவரி 1851).

அங்கு அவர் குருத்துவரல்லாத உதவி மிஷனெரியாக (Lay Assista Missionary)-வும் மெய்ஞ்ஞானபுரம் ஆண்கள் போர்டிங் பள்ளி **தலைமையாசிரியராகவும்** பணியாற்றினார். அப்பதவியிலிருக்கு பொழுது அவர் தமிழ் மொழியை கற்பதிலும் மிஷனெரிமாராகிய **ஜா தாமஸ், ஜேம்ஸ் ஸ்ப்ராட்** ஐயர்மாரின் ஊழியத்தில் உதவி செய்வதி ஈடுபட்டு சபை ஊழியம், பள்ளிக்கூட பணி, மிஷன் நிர்வாகம், சுவிசே ஊழியமாகியவற்றில் தக்க பயிற்சி பெற்றார்.

பனைவடலி சேகர மிஷனெரி C.J. **ற்றெய்லர் ஐயர்** 1851 ஏப்ரலி இறந்த பின் அச்சேகரத்தைப் **பண்ணைவிளை ற்றக்கர் ஐயர்** சில கால மேற்பார்த்து வந்தார். பின்னர் அச்சேகரத்தின் ஒரு பகுதியை **சுரண்** சேகரத்துடன் இணைத்து விட்டு எஞ்சியப் பகுதியுடன் **பண்ணைவி** சேகரத்தின் வடமேற்குப் பகுதியை இணைத்துப் **பன்றிகுளத்** மையத்தளமாகக் கொண்ட **பன்றிகுளம் சேகரத்தை** உருவாக்கி ஜா **விட்சர்ச்சை அதின் மிஷனெரியாக** M.C.C. நியமித்தது (1853).

பன்றிகுளத்தின் வட எல்லைக்குள் **விருதுபட்டி** (இன்றை விருதுநகர்)யும் அடங்கும். கிழக்கில் பண்ணைவிளை, **புதியம்புத்** சேகரங்கள், தெற்கே **பாளையங்கோட்டை** சேகரம், பனைவட

பன்றிகுளம் சேகரத்தின் ஒரு பகுதி ஆனது. மேற்கு எல்லை திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர் நெடுஞ்சாலை. சபைகள் 52.

இதற்கிடையில் 1853-ம் வருடம் ஜூலை 25-ம் தேதி குற்றாலம் ஆலயத்தில் சென்னை அத்தியட்சர் தாமஸ் அடல்ட்ரி, விட்சர்ச்சுக்கு உதவிக் குருப்பட்டம் கொடுத்தார்.

1854 பெப்ரவரி 6-ம் தேதி ஜாண் விட்சர்ச் ஐயரும் பண்ணைவிளை ற்றக்கர் ஐயரும் பன்றிகுளத்துக்குப் போனார்கள். அது ஒரு ஞாயிற்றுக்கிழமை, நேரம் காலை ஏழு மணி. ஆராதனைக்கு சபையார் கூடி வந்தனர். விட்சர்ச் ஆராதனை நடத்தி, சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவையே பிரசங்கிக்கிறோம் என்ற வசனத்தின் பேரில் போதனை கொடுத்தார். மாலை ஆராதனையில் ற்றக்கர் ஐயரும் பரிவுபச்சார செய்தி கொடுத்து சபையாரிடம் விடை பெற்றுக் கொண்டார்.

அன்றைய பன்றிகுளம் கிராமத்தில் மொத்தம் 160 வீடுகளே. மக்களில் வெள்ளாளர், பள்ளர், ஆதிதிராவிடர் இவர்களே அதிகம். கிறிஸ்தவர்கள் 5 வெள்ளாளர், 7 ஆதிதிராவிடர் குடும்பங்கள் மட்டுமே தேவாலயம் ரேனியஸ் ஐயரால் கட்டப்பட்ட சிறிய கட்டிடம்.

விட்சர்ச் ஐயர் செய்த முதல் வேலை இரண்டே மாதங்களில் பன்றிகுளத்தில் ஒரு புதிய ஆலயத்தைக் கட்டி, ஏப்ரல் மாதம் 25-ம் தேதி (25.04.1854) திங்கட்கிழமை ஆலயத்தை பிரதிஷ்டை செய்ததாகும். பிரதிஷ்டைக்கு பாளையங்கோட்டை C.M.S. அச்சகத் தலைவர் பென்லி, ராக்லண்ட் ஐயரின் உடன் ஊழியர் ஃபென் ஐயர், பண்ணைவிளை ற்றக்கர் ஐயர், பாளையங்கோட்டை செமினெரித் தலைவர் W.க்ளார்க் ஐயர், கடாட்சபுரம் ஜாண் தேவசகாயம் ஐயர், சேகர உபதேசிமார் மற்றும் சேகர சபையார் 500 பேர் வந்தனர். ஆராதனையில் ற்றக்கர் ஐயர் நல்ல மரமானது நல்ல கனி கொடுக்கும் (மத். 7:17) என்ற வசனத்தில் அருளுரையாற்றினார். 86 பேர் நற்கருணை பெற்றனர்.

மறுநாள் பன்றிகுளம் சேகர தர்மசகாய நிதிச் சங்கம், வேதாகமச் சங்கம், மார்க்க துண்டுத்தாள் பிரசுரச் சங்கம், தேவாலயம் கட்டுமானச் சங்கம் முதலிய கழகங்கள் நிறுவப்பட்டன. சேகரிக்கப்பட்ட தொகை ரூ.168-1-6.

பன்றிகுளத்தில் ரேனியஸ் ஐயர் மூலமாய் ரோமானித்த இந்துக்களுமான சில குடும்பங்கள் விசுவாசித்துத் திருச்சபையி சேர்ந்தனர். ரேனியஸ் உடனே தானே ஒரு ஆலயத்தை கட்டி உபதேசியாரையும் நியமித்தார். அவர்களுக்கு அதிகமான எதி இருந்ததில்லை. அவர்கள் தங்கள் ரோமானித்த இந்து மத விக்கிரகங்களை கைவிடவில்லை. அதினிமித்தம், இரண்டு தடவை அவர்கள் சபை நீக் செய்யப்பட்டனர். ஆலயத்தின் கூரை உத்திரம், கை பட்டியல் முதலிய இறக்கப்பட்டு வேறு கிராமங்களில் ஆலயங்கள் கட்டுவத பயன்படுத்தப்பட்டன. மிஷன் நிலம் கூட பெற்றிட் ஐயர் காலத் விற்கப்பட்டது. இந்த பழைய வரலாறுகளையெல்லாம் சபையாருக் குறிப்பாக பன்றிகுளம் சபையாருக்கும் உபதேசிமார் மற் ஊழியர்களுக்கும், ஞாபகப்படுத்தி "என் வீடு எல்லா ஜனத்துக்கும் ஜெப என்ற வசனத்தைக் கொண்டே போதித்தார்.

ற்றக்கர் ஐயர் இரண்டரை ஆண்டுகளாக தங்கள் மத்தியில் செ பணியை நன்கு மதித்து அவரை நேசித்த ஜனங்கள் அவர் இ தங்களுடைய சேகர பொறுப்புடையவர் அல்லவென்று அறி பிரிவாற்றாமையால் கண்ணீர் வடித்தனர். ற்றக்கர் ஐயரும் உணர்ச்சிவசப்பட்டார் அவருடைய கண்கள் குளமாயின. அது மன உருக்கும் காட்சியாயிருந்தது என்று விட்சர்ச் எழுதுகிறார். சே பொறுப்பெடுத்தவுடனேயே விட்சர்ச் சேகர சபைகளை சந்திக் புறப்பட்டார். 6-ம் தேதி பொறுப்பேற்றவர். 7-ம் தேதி மாலை கல்லத்திக்கிணறு என்ற கிராமத்துக்குப் போனார். ஊரார் தண்ணீரெடுக் கிணற்றின் அருகில் நின்ற பெரிய கல்லத்தி விருட்சத்தினால் இவ் இப்பெயர் பெற்றதென்கிறார் விட்சர்ச். கிராமத்தில் 50 வீடுகள். அதில் கிறிஸ்தவர்களின் வீடுகள் மீதி பதினாறும் இந்துக்களுடையவை. அழக தேவாலயம். ற்றக்கர் ஐயர் கட்டினது. "இந்த சேகரத்தில் இதை மேலான (Superior) சபை வேறொன்றுமில்லை. சபை தலை உண்மையான கிறிஸ்தவர்" என்று ஐயர் குறிப்பெழுதுகிறார்.

தெற்கு மைலோடையில் ற்றக்கர் ஐயர் நிறுவின ஒரு பள் அப்பள்ளிக்காகும் ஆசிரியர் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவினங் அனைத்தையும் இங்கிலாந்தில் மெல்போர்னிலிருந்த G.ஹே

(Rev. G. Hadley) என்னும் ஒரு குருவானவர் கொடுத்து வந்தார். பள்ளிக்கூடம் நல்ல நிலைமையிலிருந்தது. சபையார் 41 குடும்பங்கள் (10.02.1854).

வேப்பன்குளம் சபையின் முதல் விசுவாசி **மரியாள்** என்னும் ஓர் இளம் விதவை. தனக்கு வந்த துன்பம் தாளாமல், ஒரு கிறிஸ்தவக் கிராமத்தில் தன்னை சேர்த்துக் கொள்ளும்படி அவள் **ரேனியஸிடம்** கேட்க, அவர் மறுத்ததுமல்லாமல் **"கடுகு விதையாக இங்கேயேயிரு"** என்று கட்டளையிட்டு விட்டுப் போய் விடடார். நாட்டாண்மைக்காரனாகிய தன் தமையனாரால் விசுவாசத்தினிமித்தம் உண்டான சகல துன்பங்களையும் சகித்த அந்த **"கடுகு விதை மரியாள்" பெரிய விருட்சமானாள்.** கொடூரமான தமையன் உட்பட ஊராரில் பலர் அவளுடைய விசுவாச நிழலில் வந்தடைந்து விசுவாசித்துக் கீழ்ப்படிந்தனர் (11.02.1854).

கைலாசபுரம் (மடத்துப்பட்டி பாஸ்ற்றரேட்) : பதினாறு கிறிஸ்தவக் குடும்பங்கள். சபை தலைவன் **சவரிமுத்து.** முன்னாட்களில் ரோமானித்த மதத்திலிருந்து, அங்குள்ள விக்கிர வணக்கத்தைத் தானாகவே வெறுத்து, அம்மதத்திலிருந்து விலகி, ஆனால் கிறிஸ்துநாதரிடம் ஜெபிப்பதை மட்டும் விடாதிருந்தார். சில காலங்களுக்குப் பின்பே நம் சபையைப் பற்றி அறிந்து, தன் குடும்பத்துடனும், உறவினருடனும் சபையில் சேர்ந்தார். இங்கு ஒரு பள்ளிக்கூடமுண்டு (21.02.1852).

சின்னக்கட்டாரங்குளம் : மறவர், நாடார்குலக் கிறிஸ்தவர்கள் பதினாறு குடும்பங்களைக் கொண்ட திருப்தி தரும் சபை (22.02.1852).

மூவரிருந்தாளி : 1853-ல் மறவர் குலக் கிறிஸ்தவ விசுவாசிகள் 17 குடும்பங்களுண்டான புதிய சபை. ஜெபவீடு மிகவும் தாழ்ந்த கூரை. இரவு 7 மணிக்கு வந்து சபையைச் சந்தித்து விட்டு அங்கே தங்கினார் (22.02.1852).

அச்சம்பட்டி : சுமார் ஒரு வருஷத்துக்கு முன் அதாவது 1853 ஏப்ரல் பள்ளர் குல மக்கள் 37 குடும்பத்தினர் கிறிஸ்துநாதரை ஏற்றுக் கொண்டதிலிருந்து உண்டான சபை. பாடங்களை நன்கு படித்திருக்கிற சபை (23.02.1854).

பெரிய கட்டாரங்குளம் : 23.02.1854 மாலை இங்கு வந்து சேர்ந்தார். இங்கு தான் **கிறிஸ்தவ ஜமீன்தாரும்** அவருடைய உறவினர் 23

குடும்பங்களும் கிறிஸ்தவர்களாயிருந்தார்கள். எல்லாரு ஞானஸ்நானமும், திடப்படுத்தலும் பெற்றவர்கள். ஜமீன்தாரின் கச்சேரி கட்டிடமே தேவாலயமாய் மாற்றப்பட்டது. ஆராதனைக்கு ஜமீன்தாரு குடும்பமும் உறவினர்களும், பள்ளர்குலக் கிறிஸ்தவர்கள் 4 குடும்பங்களும் ஆக 65 குடும்பங்களும் திரண்டு வந்திருந்தன ஆராதனை கர்த்தருக்கு மகிமையாயிருந்தது (24.02.1854).

தீத்தாம்பட்டி : நல்ல சபை. சபை தலைவர் ஒரு மெய்க் கிறிஸ்தவ பக்தன்

வில்லிசேரி : ற்றக்கர் மிஷனெரி ஊழியத்தில் அநேக மேலைநாட் நண்பர்கள் பணவுதவி செய்து வந்தனர். **பிரவுன்** என்னும் குடும்பத்தை சேர்ந்த இரண்டு சகோதரிகள் கிறிஸ்தவ அடைக்கல குடியேற்றமொன்ை உருவாக்குவதற்கென்று பணம் அனுப்பினார்கள். அந்தப் பணத்தை கொண்டு தன்னுடைய பெரிய பண்ணைவிளை சேகரத்தில் தென்பகுதியி ஒன்றும் வட பகுதியில் ஒன்றுமாக இரண்டு கிறிஸ்தவ கிராமங்களை உருவாக்க திட்டமிட்டார். தெற்கில் **அடைக்கலாபுரம்** என்ற கிறிஸ்த கிராமத்தை உண்டாக்கினார். வடக்கில் வில்லிசேரி பகுதியி **ஆமூருக்கருகில்** மதுரை பெரும் பாதையை ஒட்டி, **ப்ரௌனூர்** (Brownoo என்ற பெயருடன் ஒரு கிறிஸ்தவ கிராமத்தை தோற்றுவிக்க நிலம் வாங்கினா இப்போது பண்ணைவிளை சேகரத்தின் வடபகுதியிலுள்ள **வில்லிசே பன்றிகுளம்** சேகரத்தை சேர்ந்து விட்டதால் **ப்ரௌனூரை** தோற்றுவிப்பது விட்சர்ச்சின் பொறுப்பானது.

மார்ச் 19-ம் தேதி (1854) அவர் **வில்லிசேரிக்கு** சென்றார். ஒ காலத்தில் இங்கு பெரிய சபையிருந்தது. அந்த பகுதி **தலை உபதேசியார்** வசிக்கும் ஊராகவுமிருந்தது. இப்போதோ அச்சபையில் 1 குடும்பங்கள் மட்டுமே அந்த சபையை சந்தித்து விட்டு, அவர் அந் நிலத்துக்குப் போய், **ப்ரௌனூரில்** நடுத்தெரு, குறுக்கு சந்துகள் ஒ மாதிரியான வீடுகள் பந்தல்கள், ஆலயம், கிணறு இவை எந்தெந்த இடத்தி அமைய வேண்டுமென்று திட்டம் பண்ணினார்.

முடுக்காலங்குளம் : 1853 இறுதியில் 21 குடும்பங்களைக் கொண்ட புதி சபை இங்கு தோன்றியது. இந்துக்கள் அவர்களைத் துன்புறுத்தின **விட்சர்ச்** 24-ம் தேதி இரவு 11 மணிக்கு (24.03.1854) அங்கு சென்றா சபையார் அதுவரை காத்திருந்து கண்டு மகிழ்ந்தனர். போதித்து ஆறுத

றினார். அடுத்த நாளும் தங்கி ற்றக்கர் அங்கு நிறுவின பள்ளியையும் சோதித்தார்.

பின் 1848-ல் தோன்றி செழிப்பாயிருந்த 18 ரெட்டியார் குடும்பங்களை கொண்ட கசவன்குண்டு சபை. 1843-ல் தோன்றிய துறையூர் சபை (26.03.1854) முற்றிலும் புதிய பாரப்பட்டி, பரசுராமபுரம் சபைகளையும் சந்தித்து (27.03.1854) போதித்து மனநிறைவுடன் பன்றி குளத்துக்குத் திரும்பினார்.

மறுபடியும் மே மாதத்தில் (மே 1854) கம்மாப்பட்டி, ஒத்தரசம்பட்டி, தளவாய்புரம், பாறைக்கூட்டம் முதலிய சபைகளைச் சந்தித்தார். ஒத்தரசம்பட்டி ஒரு புது சபை. அங்கு தாவீது ரெட்டியாருக்கு பகைவரால் கொடிய துன்பம். கிறிஸ்துவுக்காக சந்தோஷமாக சகித்தார்.

பின் சாலைநாயக்கன்பட்டி, சங்கரநத்தம், சங்கம்பட்டி என்ற மூன்று சபைகளை சந்தித்தார். மூன்றும் புத்தம் புது சபைகள். சங்கரநத்தத்தில் 148 பேர் விசுவாசத்திற்குள் வந்தனர் (ஆகஸ்ட் 1854) செப்டம்பரில் ஒலை நத்தத்தில் உண்டான புதுசபைக்கும், கல்லம்பட்டி, தெற்குமைலோடை, குப்பனாபுரம், மும்மலைப்பட்டி சபைகளுக்கும் சென்றார். கல்லம்பட்டியில் ஒரே ஒரு குடும்பம் தவிர அனைவரும் சபையில் சேர்ந்தனர். குப்பனாபுரத்தில் இரண்டு பேர் தான் கிறிஸ்தவர்கள்.

ப்ரெளனூரில் கிறிஸ்தவர்கள் குடியேறி வீடுகள் கட்டிக் கொண்டிருந்தனர் (09.09.1854).

இப்படியே ஊழியம் நடந்து வந்தது. அந்நாட்களில் கடம்பூர் பகுதியில் சில சபைகள் தோன்றின. கடம்பூரில் ஒரு ஜமீன்தாரிணி இருந்தாள். அவளுடைய ஆட்சியில் பிராமணருடைய ஆதிக்கம் அதிகம். எனவே கிறிஸ்தவர்களை அவள் கொடூரமாய் துன்புறுத்தினாள். இரண்டு கிராமங்களிலிருந்து கிறிஸ்துமார்க்கத்தை விரட்டி விட்டேன் என்று பெருமைப்பட்டுக் கொண்டு தன் அதிகார எல்லைக்குள்ளிருந்த மற்றச் சபைகளையும் உபத்திரவப்படுத்தினாள்.

ஆயினும் விட்சர்ச் தன்னுடைய தீவிர சுவிசேஷ திருப்பணியைத் தொய்வில்லாமல் நடத்தி வந்தார். புது சபைகள் பெருத்தன. பழைய சபைகள் பருத்தன. சில சபைகள் சிறுத்தன.

[illegible]

[illegible] 1857-ம் [illegible]

[illegible]

விடாசர் ஒரு ஜெபமாந்தன். ஆத்மதாகம் மிக்கவர். ஒரு நட[illegible] நெல்லையிலிருந்தும் பாளையங்கோட்டையில் சார்ஜென்ற் [illegible] பங்களாவில் ஒரு நாள் ஜெபத்திற்காக கூடினார்கள் (6.01.1856). பொது[illegible] "உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்கள்" ஒவ்வொருவராக ஜெபித்த[illegible] விடாசரின் முறை வந்தபோது 'போக் கிறிஸ்தவர்களுக்காக இத[illegible] கொண்டு ரொம்ப உருக்கமாக ஜெபித்தார். ஜெபிக்கும்பொழு[illegible] மயக்கமாகி விழுந்தார். பின் சில விநாடிகளில் மயக்கந்தெளிந்[illegible] ஜெபத்தை முடித்தார். அந்த அனுபவத்தை [illegible] விடா[illegible] ஜர்.

1858-ம் வருஷம் அவரும் ஜான்னா அம்மாளும் மூன்று வ[illegible] விடுமுறையில் இங்கிலாந்துக்குப் போனார்கள். அந்த வருஷங்களில் முதலா[illegible] ஆஷ்டன் டிப் ஐயரும் (Rev. Ashton Dibb) மிஷனரி. ஜான்ஸ்டீ[illegible]

ஐயரும் (Rev. John Gritton) **பன்றிகுளம்** மிஷனெரிகளாகப் பணியாற்றினர்.

1861-ம் வருஷம் **விட்சர்ச்சும் சூசன்னாவும்** திரும்பி வந்து தங்களுடைய பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் துரதிஷ்டவசமாக நாட்குறிப்புகளாவது ரிப்போர்ட்களாவது எமக்குக் கிட்டவில்லை.

இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்து ஓராண்டுக்குள் **சூசன்னா** வியாதிப்பட்டார். மூன்று வருஷங்களாகியும் பாளையங்கோட்டையிலும், கோட்டயத்திலும், சென்னையிலும் எவ்வளவோ சிகிச்சை செய்தும் நோய் குணமாகவில்லை. நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே போனார்.

இனி **விட்சர்ச்சே** சொல்லட்டும்.

என் நேச மனைவியின் ஆவியைத் தம்மிடத்தில் சேர்த்துக் கொள்ள தேவன் சித்தம் கொண்டார். ஏப்ரல் மாதம் 6-ம் தேதி அவள் இளைப்பாறுதலுக்குட்பட்டார். மூன்று வருஷங்களாக இடைவிடாதபாடு; சரீரம் எலும்புக் கூடாய் இளைத்துப் போயிற்று; அவளுக்கு இந்த இளைப்பாறுதல் எவ்வளவு இனிமையாயிருக்கும்! மரணத்தின் திகில் அவளிடத்தில் இல்லை. சாத்தான் அவளைச் சோதிக்க அனுமதிக்கப்படவில்லை. ஒரே ஒரு நாள், 'சாத்தானே போ' என்ற கத்தினாள். அவன் அவள்மீது தன் தாக்குதல்களைத் தொடங்குவதற்கு ஆரம்பித்த சமயம் போல் அது தொனித்தது. அதன் பின் அமைதி, என்னிடம், 'நான் சாகபோகிறேனா' என்று கேட்டாள்; பின் இரக்கமும் தயவும் நிறைந்த தகப்பனே. உமக்கு சித்தமானால் நான் தூங்கும் போது என்னை எடுத்துக் கொள்ளும் என்று ஜெபித்தாள். அமைதியாய்த் தூங்கினாள் மெதுமெதுவாக அவளுடைய ஆவி பிரிந்து இரட்சகரிடம் சென்றது. துக்கமும், வேதனையும், நோயும் சாவும் இனி என்றென்றும் அவளுக்கில்லை.

அவளுடைய விருப்பத்தின்படியே அண்மைக்காலத்தில் கல்லறைப் பூமியாக வாங்கப்பட்ட நிலத்தில் வெட்ட வெளியில் அவளுடைய சரீரம் அடக்கம் பண்ணப்பட்டது. அந்த இடத்துக்கருகில் பெரும்பாதை இருக்கிறது. கிராமத்து ஜனங்கள் எப்பொழுதும் அதில் போய் கொண்டிருப்பார்கள். என்னை அங்கு அடக்கம் பண்ணினால் பள்ளிக்கூடத்துக்குப் போகிற சிறு பெண்களும், மற்ற பெண்களும் அடிக்கடி, என் கல்லறையைப் பார்க்கும்

போதெல்லாம் நான் சொன்னவைகளை நினைவு கூருவார்கள். நீங்களு
வந்து பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தாள்.

அவளில்லாதது வெகு ஆழமாக உணரப்படுகிறது. ஊழியத்தி தன்னையே பரிபூரணமாக அர்ப்பணித்திருந்தாள். முழு நேரத்தை முழுப் பெலனையும் அதில் செலவழிப்பாள்.

சூசன்னாள் விட்சர்ச் இறந்தது 1865 ஏப்ரல் 6-ம் நாள். மனை இறந்ததினாலுண்டான பெருந்துக்கத்தை ஆற்ற முயல்பவராய், **விட்ச ஐயர்,** முழு மூச்சுடன் தன் வேலையிலீடுபட்டு சபைகளைச் சந்திப்பதிலு சுவிசேஷ ஊழியத்தை தீவிரப்படுத்துவதிலும் மும்முரமானார். அவருக் உதவியாக பனைவடலி பாஸ்றரேட்டின் குருவாக (1859-லிருந்து) **ஜா நல்லதம்பி ஐயர்** நியமிக்கப்பட்டார். பத்து வருஷங்களாக (1859 - 6 பன்றிகுளத்தில் வசித்துக் கொண்டும், பின் பனைவடலியிலேயே வசித்து (1869 - 77, 1886 - 87) அவர் தன் ஊழியத்தை நிறைவேற்றினார்.

பல புதிய சபைகள் உருவாயின **வன்னிக்கோனேந்தல், ரெட்டியூ வடதலைவன்கோட்டை, அடைக்கலாபுரம், நரிக்குடி, வண்ண பொட்டல் தெற்கு பனைவடலி, வடக்கு பனைவட சின்னத்தலைவன் கோட்டை, கூவாச்சிப்பட்டி, ஆராச்சிப்பட் அணையாள்பட்டி, மையேந்தரவதி, தோணுகால், நீலிதநல்லூ பலவேந்திரபுரம், ராமநாதபுரம் முதலியன 1868-க்கு மு தோன்றின சபைகள்.**

சுவிசேஷ ஊழியம், சபை ஊழியம் மற்ற மிஷனெரி ஊழி பணிகளுக்கு பொருளுதவி செய்வதில் சபையார் தங்களுடைய பொறுப் உணரச் செய்ய வேண்டுமென்று மிஷனெரிக் கூட்டங்கள் (Missiona Meetings) வருஷத்துக்கொருமுறை ஒவ்வொரு சபையிலும் நடத்தப்படும் **விட்சர்ச்** ஏற்பாடு செய்தார். சபையார் உற்சாகமாகக் கொடுத்தார்க **காலாம்பட்டியில் அழகுமுத்து சேர்வைக்காரர்** என்ற ஒருவர் மட்டு ரூ. 35/- கொடுத்தார். (13.06.1866) **முடுக்காலங்குளம்** சபை தலை கொடுத்தது ரூ. 20/- **பாண்டவர்மங்கலம்** சபை காணிக்கை ரூ. 47/-

பன்றிகுளத்துக்கு மிஷனெரியாக வந்து பத்து வருஷங்களுக்கு மேல **விட்சர்ச் ஐயர்** ஒரு கூரை வீட்டில் தான் வசித்து வந்தார். 1862-க்கு பி

சன்னா வியாதியாயிருந்தபடியால், பங்களா கட்டுவதற்கு எல்லாம் ஆயத்தமாயிருந்தபோதிலும், கட்ட முடியாமற் போயிற்று. மனைவி இறந்து பல மாதங்கள் சென்ற பின் 1865 பின் பகுதியில் பங்களா கட்டுமான வேலையைத் துவக்கி, நவம்பர், டிசம்பர் மாதங்களில், தானே நேரில் மேற்பார்த்து ஜனவரியில் வேலையை முடித்து பிரதிஷ்டை செய்து அதில் குடியேறினார்.

புதிய பங்களாவில் சுமார் மூன்று வருஷங்கள் வாழ்ந்து, 1869-ல் இரண்டு வருஷ விடுப்பில் விட்சர்ச் ஐயர் இங்கிலாந்துக்குப் போனார்.

அங்கு 1870-ல் வியாதிப்பட்டு தன் சொந்த ஊரான மெல்ற்றன் மௌப்ரேயில் 1871 ஜனவரி 7-ம் தேதி இம் மண்ணுலகை விட்டுப் பிரிந்து தான் நேசித்து சேவித்த இரட்சகரின் சந்நிதியடைந்தார். வயது 43.

12

வில்லியம் க்ளார்க் ஐயர் (C.M.S)

1848 - 1866

இங்கிலாந்தில் சௌத்வார்க் என்ற நகரில் பிறந்த **வில்லியம் க்ளா** **ஐயர்** (Rev. William Clark) தன் வாலிபத்தில் C.M.S. **மிஷ** ஊழியத்துக்கு ஒப்புக் கொடுத்து, குருத்துவத்துக்கான பயிற்சி பெற்ற பயிற்சிக்குப் பின் லண்டன் பட்டணத்து அத்தியட்சரிடத்தில் **உ** **குருவபிஷேகம்** பெறும் போது (1847) அவருக்கு வயது 25.

அடுத்த வருஷம் C.M.S. சங்க தாய்க் கமிற்றி (The Parent Commi of the C.M.S.) அவரை திருநெல்வேலிக்கு அனுப்பினர்.

திருநெல்வேலியில் பாளையங்கோட்டை செமினெரியிலிருந்து R **ஆல்நட் ஐயர்** போய்விட்டதால் அதின் முதல்வர் பதவி (Princip காலியாயிருந்தது. **ஜியார்ஜ் ஹஃப்ற்றன்** பொறுப்பில் (Acting) இருந் **ஜியார்ஜ் ஹவெல்ஸ்** (Howells) உதவி ஆசிரியர் இருவ குருத்துவல்லாத ஆங்கிலோ - இந்தியர்.

க்ளார்க் ஐயர் பாளையங்கோட்டைக்கு வந்ததும் செமினெரி தலைவராய் பொறுப்பேற்றார் (1848 - 55).

செமினெரித் தலைவர் 1849 - 55 :

இங்கு வந்த பின் 1851 ஜனவரி - பெப்ருவரியில் திருநெல்வேலி வருகை தந்த சென்னை **ஸ்பென்ஸர் அத்தியட்சரிடம்** பாளையங்கோ பரிசுத்த திரித்துவ தேவாலயத்தில் பெப்ருவரி 2-ம் தேதி நடந்த குரு அபி ஆராதனையில் **வில்லியம் க்ளார்க் ஐயர் குருப்பட்டம்** பெற் (02.02.1851).

திருவாங்கூர் இராச்சியத்தில், **கோட்டயம்** என்ற நகரைத் தலை பீடமாகக் கொண்டு, '**திருவாங்கூர் மூவர்**' என்று வரலாற்றுப் பெயர் பெ **ஃபென், பெய்லி, பேக்கர்** என்ற முப்பெரும் மிஷனெரிமார் (Rev. Me Fenn, Baillia, Baker the Travancore Trio) C.M.S. சார்பில் **ஊழியம்** செ வந்தனர். அவர்களில் பேக்கர் ஐயரின் மகள் **மேரி ஆன்** என்ற பெண்

வில்லியம் க்ளார்க் ஐயர் 1851 மே மாதம் 18-ம் தேதி கோட்டயம் C.M.S. ஆலயத்தில் திருமணம் செய்து, 20-ம் தேதி, மனைவியுடன் பாளையங்கோட்டை திரும்பினார்.

அவர்களுக்கு 1852 ஏப்ரல் 22-ல் ஒரு ஆண் குழந்தையும், 1853 செப்டம்பர் 8-ல் இரண்டாவது ஒரு ஆண் குழந்தையும், 1855 ஆகஸ்ட் 12-ல் ஒரு பெண் குழந்தையும் பிறந்தனர். மேரி க்ளார்க் அம்மாள் பாளையங்கோட்டை பெண்கள் போர்டிங் பள்ளியில் அதின் தலைவர் எலிசபெத் சார்ஜென்ற் அம்மாளுக்கு உதவியாயிருந்து பணியாற்றி வந்தார்.

செமினெரியில் மாணவர் தொகை : 1848 - 41 ; 1849 - 41 ; 1850 - 53 ; 1851 - 58 ; 1852 - 48 ; 1853 - 48 ; 1854 - 66 ; 1855 - 59. ஆசிரியர்கள் : ஜியார்ஜ் ஹஃற்றன், T.L. ஹஃப்ற்றன், V. வேதநாயகம் மற்றும் சில இந்திய ஆசிரியர்கள. (V.வேதநாயகம் பிற்காலத்தில் வாகைக்குளம் வேதநாயகம் ஐயர் என்று பிரபலமானார்) பின் பகுதியில் வேதநாயகம் ஐயர் ராக்லந்தையருடன் சேர்ந்து ஊழியம் செய்ய வட திருநெல்வேலிக்குப் போய்விட்டார் (1855). அவர் இடத்தில் பெரிய ஷாஃப்ற்றர் ஐயரின் மூத்த மகன் W.P. ஷாஃப்ற்றர் நியமிக்கப்பட்டார். D. சாமுவேல் என்ற ஆசிரியரும் நியமிக்கப்பட்டார். மற்ற ஆசிரியர்கள் முன் இருந்தவர்களே.

தரமான உபதேசிமாரையும், பிற ஊழியரையும் பயிற்றுவிப்பதற்காக ஓர் உயர்நிலை பிரிப்பராண்டி நிறுவனத்தை அமைக்க வேண்டுமென்றும், அந்த நிறுவனத்திற்கு செமினெரியில் கற்றுத் தேறியவர்களிலிருந்து தான் தகுதியான மாணவரைத் தெரிந்து கொள்ள வேண்டுமாதலால் செமினெரியில் கல்வித்தரம் இதுவரை இருந்ததைவிட உயர்த்தப்பட வேண்டுமென்று மிஷனெரிமார் தீர்மானம் செய்தார்கள். க்ளார்க் ஐயரும் அக்கருத்தை ஆமோதித்தார். தரம் உயர்ந்தது. 1851 ஜூலை 4-ம் தேதி மிஷனெரிக்குழு ஒன்று வந்து ஒவ்வொரு வகுப்பையும் ஒவ்வொரு பாடத்திலும் சோதனை நடத்தி தங்கள் சோதனை முடிவுகளை குழுத்தலைவர் மெய்ஞ்ஞானபுரம் ஜாண் தாமஸ் ஐயரிடம் சமர்ப்பித்தனர். அவர் எழுதுகிறார்: "ஆரோக்கியமும் செழிப்புமான நல்ல நிலைமையில் செமினெரி இருக்கிறதென்பது குழுவின் பொதுவான அபிப்பிராயம்.

எங்களுடைய பதினான்கு வருட அனுபவத்தில் அது இல்லாமை உயர்வா நிலையில் இருக்கிறேன். மிஷனுக்குத் திறமை மிக்க ஊழிய உருவாக்கித் தரும் என்ற நம்பிக்கை அது கொடுக்கிறது".

1852-ல் செப்டம்பர் ஹாட்ஸ் ஐயர் எழுதுவது: "கோடையில் ஆண்டு பரீட்சை நடந்தது. கனாக் ஐயரையும் உதவி ஆசிரியர்களையு இருவ புள்ளிகளைப் பாராட்டுகிறேன். நமது மிஷனின் பணி அமைப்புகளி முக்கியமானவைகளில் ஒன்றான இப்பிரிவு இல்லாமை செழிப்பாகவு திருப்திகரமாகவும் இருப்பதற்காக ஆண்டவருக்கு நன்றி. ஒரே ஒரு குறை மாணவரின் எண்ணிக்கை குறைவாகயிருப்பதே அது. திருநெல்வேலியி அறுவடைக்கு அநேக, நன்றாய்க்கற்ற, பயிற்சி பெற்ற, ஊக்க நிறைந்த ஊழியர் தேவை" (அக்.6, 1852).

பண்ணைவிளை ஐக்கரையர் 1853 மார்ச் 21-ல் செமினெ ஊழியத்தைப் பாராட்டி பேசி மாணவர் தொகை நூறாக உயர்த்தப்படவு ஆங்கில மொழி கற்பிக்கப்படவும் வேண்டுமென்றும், கல்வி சிறப்புமிக் ஊழியரை இரண்டாம் தலைமுறை கிறிஸ்தவர்கள் விரும்புகிறார்க என்றும் எழுதுகிறார்.

அக்காலம் செமினெரியில் மாணவர்கள் ஏழு வருஷம் படிக் வேண்டும். முதலாம் வருஷ வகுப்பு ஏழாம் வகுப்பு, இரண்டாம் வருஷ வகுப்பு, ஆறாம் வகுப்பு, இப்படியே ஏழாம் வருஷ வகுப்பு முதலாம் வகுப் அரசு உதவித் தொகை திட்டத்தை (Grant - in - Air System) அமல்படுத்தி பின்பே (1856) இந்த முறை இப்போதுள்ளது போல் மாறினது.

செமினெரி பாடங்களின் அட்டவணையைப் பார்த்தால், நமக் ஆச்சரியமாயிருக்கிறது. அட்டவணையில், ஆங்கிலம் ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டதாகவோ ஆசிரிய உபதேசிமார் வகுப்புப் பாடங்க போதிக்கப்பட்டதாகவோ தெரியவில்லை. உபதேசியார் பயிற்சியும் (ஆசிரிய பயிற்சியும் ஓரளவு) ஆங்கிலமும் 1852 முதல் தென் வளாகத்தில், அதாவ இன்றைய கத்தீட்ரல் மேனிலைப்பள்ளி வளாகத்தில் சார்ஜென்ட் ஐய நடத்திய பிரிபராண்டியில் கற்பிக்கப்பட்டது அதற்குக் காரணம். ஆனாலு ஆங்கில மொழி அறிவில்லாமல் அட்டவணையில் காணும் சில குறிப்பி பாடங்களைக் கற்பிப்பதும் கற்பதுமில்லாமல் ஆங்கில இலக்கணத்தி Orthography, Etymology, Spelling முதலியன அட்டவணையில் இ

பெற்றிருக்கிறதால் ஆங்கில அறிவு அம்மாணவருக்குப் போதிய அளவு இருந்திருக்க வேண்டும்.

பாட அட்டவணை :

7-ம் வகுப்பு - முதல் வருஷம், 6ம் வகுப்பு - 2ம் வருஷம், வேதபாடம் தமிழ், புவியியல் (ஆசியா), தமிழ் இலக்கணம், தமிழில் கணக்கு வாய்ப்பாடு.

5-ம் வகுப்பு - 3ம் வருஷம், 1சாமுவேல் 9-15 கணக்கு, Geometry, தமிழ், நன்னூல்: எழுத்தியல், புவியியல் (ஐரோப்பா), புராதன வரலாறு, இங்கிலீஷ் இலக்கணம், Orthography, Spelling, (Carpenter's book).

4-ம் வகுப்பு - 4ம் வருஷம், 2சாமுவேல் 1-10 கணக்கு, Geometry, Algebra, தமிழ், நன்னூல் : எழுத்தியல், இங்கிலீஷ் இலக்கணம், Etymology, புவியியல் (அமெரிக்கா), இங்கிலீஷ் Spelling புராதன வரலாறு.

3-ம் வகுப்பு - 5ம் வருஷம், 2ராஜாக்கள், கணக்கு, தமிழ், நன்னூல், உயிரீற்றுப் புணரியல், Euclid Book I, Algebra, இங்கிலீஷ் இலக்கணம், Orthography and Etymology, Mechanics 1 & 2.

2-ம் வகுப்பு - 6ம் வருஷம், மத்தேயு 1-9, கணக்கு (Square Roof) தமிழ் நன்னூல் : உருபுப் புணரியல், Euclid Book II, Algebra (Involution) இந்தியாவின் வரலாறு, இங்கிலீஷ் இலக்கணம், Orthography, Etymology, Syntax.

1-ம் வகுப்பு - 7ம் வருஷம், அப்போஸ்தலர் 1-12 Euclid (Revision - Book I & II) Algebra - Unkown quantity, Trigonometry, Astronomy - Lessons 1-6. தமிழ் திருக்குறள் I-III இங்கிலாந்தின் வரலாறு, வான மண்டலங்கள் இங்கிலீஷ் இலக்கணம் Orthography, Etymology.

இது ஒரு ஆசிரியர் பயிற்சி பள்ளி பாட அட்டவணையல்ல. C.M.S. மிஷனெரி போர்டிங்களுக்கு மேலாக ஓர் உயர்தரக் கலாசாலையாக இச்செமினெரி விளங்கியது என்பதையே இது காட்டுகிறது. மிஷனெரி போர்டிங் பள்ளிகளில் மூன்றாண்டுகள் படித்து மிஷனெரிமாரின் பரிந்துரை பெற்றவர்களே இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஒரு வகுப்பில் சராசரி 4 முதல் 8 மாணவரே கற்று வந்தனர்.

பாடங்களுக்குக் கொடுக்கப்பட்டதைவிட, அதிக முக்கியத்துவ சமயத்திற்கும், கிறிஸ்தவ நெறிமுறைப் பண்பாட்டிற்கும், கலிசேஷ ஜெபு ஆராதனைக்கும் கொடுக்கப்பட்டது என்று ரேனியஸ் ஐயர் காலம் முத மிஷனெரி முதல்வர்களின் அறிக்கைகள், நாட்குறிப்புகள் முதலியவற்றி ருந்து அறியலாம். வாரத்துக்கு ஒருமுறை மிஷனெரியாரும் ஒரு ஐரோப்பிய அலுவலருமடங்கிய ஒரு குழு சோதனை நடத்தும்.

செமினெரியில் படிப்பு முடித்தவர்கள் கிராம (மிஷன்) பள்ளிகள் ஆசிரியர்களாகவோ, Readers என்னப்பட்ட உதவி உபதேசியாராகவோ நியமிக்கப்படுவர். சிறந்த மாணவரிரண்டொருவர் மேற்கல்வி கற்க செ Grammar School-க்கு அனுப்பப்படுவதுமுண்டு.

ஆபிரகாம் ஞானப்பிரகாசம் செமினெரியில் ஒரு மாணவ கெட்டிக்காரன். வயது 15. பேலி என்பவரின் சான்றுகள் (Paley Evidences) என்ற நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த் அவன் பரிசு பெற்றான். "பக்தியும் ஒழுக்கமுமுள்ள ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் செலவிடப்பட்ட ஒரு நாள்" என்ற தலைப்பில் அவனெழுதி கட்டுரைக்கும் பரிசு கிடைத்தது. மொழி பெயர்ப்புக்கு அவனுக்குக் கிடை பரிசு கணக்குப்பாட உபகரணங்கள் பெட்டி (Mathematical Instruments Bo அதின் விலை ரூ. 22/- (அந்த காலத்தில் ரூ. 22/- என்றால் இன் அத்தகைய சிறந்த இளைஞன் காலரா கண்டு ஒரே நாளில் இறந்து விட்டா (A.R.1850).

கிளார்க் ஐயர் ஒரு நீச்சல் பிரியர். அவர் தன் பங்களாவுக்கு வடக் காம்பவுண்டின் கிழக்கு எல்லையையொட்டி சுமார் பத்தடி ஆழமுள்ள ஒ சதுரமான சிறுகுளம் வெட்டிக் கரைகட்டி, கன்னடியன் கால்வாயிலிருந் வயலுக்குத் தண்ணீர் பாயும் ஓடையிலிருந்து ஒரு சிறுவாய்க்கால் மூல அக்குளத்துக்குத் தண்ணீர் வரவும், குளத்தை நிரப்பி இன்னொ வாய்க்கால் வழியாய் ஓடி ஓடையில் சேரவும் செய்தார். அந்த நீச்ச குளத்தை 1851 மே 31-ம் தேதி பிரதிஷ்டை பண்ணினார். அக்குள அவருடைய குடும்பத்துக்கும் மற்ற மிஷனெரிக் குடும்பங்களுக்கும் மிகு பயனுள்ளதாயிருந்தது.

1855-ம் வருஷம் க்ளார்க் ஐயர் நல்லூர் சேகர மிஷனெரியாக அங்கு மாற்றப்பட்டார். (நல்லூரிலிருந்த P.P.ஷாஃப்டர் ஐயர் அதிக சுகவீனமாணப் படியால் இரண்டு வருஷம் விடுப்பெடுத்துக் குன்னூருக்குப் போய் தங்கினார்).

நல்லூர் மிஷனெரி 1855 - 66 :

க்ளார்க் ஐயர் நல்லூரில் பணியாற்றிய சிறந்த மிஷனெரி களிலொருவர். **நல்லூருடன் பாவூர் சேகரத்தைக் கண்காணிப்பது** இவருடைய கடமையாயிற்று. க்ளார்க் எழுதி வைத்த நாட்குறிப்புகள், வருடாந்திர அறிக்கைகள் மூலம் அவரது ஊழியம் மற்றும் சபைகளைப் பற்றி நாம் அதிகம் அறியக்கூடும். அவை அனைத்தையும் எழுத இச்சிறுநூல் இடந்தராது.

1855 ஜூன் 1-ம் தேதி நல்லூரில் குடியேறிய **க்ளார்க் ஐயர்** 12-ம் தேதியே சேகர சபைகளைச் சுற்றிப் பார்த்து சபை விசாரணை மேற்கொண்டார். அவ்வாண்டு டிசம்பர் 31வரை அவர் எழுதிய நாட்குறிப்புகளினின்று நாமறிபவை.

ஆலங்குளம் : சபை மக்கள் தொகை ஓராயிரம் (12.06.1855)

குருவன்கோட்டை : ஒரு காலத்தில் பெரிய சபை (900 ஆத்துமாக்கள்). இப்போது சுமார் 45 பேர் மட்டுமுடைய சிறிய சபை. ஆனால் நல்ல சபை. ஜெபவீடு கூட இல்லை. பள்ளிக்கூடம் ஒரு பந்தல்தான் (13.06.1855).

பார்வதியாபுரம் : நல்ல சபை. ஒரு குருவானவர் இங்கு வைக்கப்பட வேண்டும். ஜெபவாஞ்சையுள்ள மக்கள். சிலர் மறுபிறப்பின் அனுபவமுள்ளவர்கள்.

கட்டப்புளி : சபையில் 40 பேர் தான். ஜெப வாஞ்சை கிறிஸ்து மார்க்கப்பற்று விசேஷமானது. "கிறிஸ்தவர் அல்லாதவர்களை கலியாணம் செய்வதை விட திருமணமே செய்யாமலிருந்து விடுவோம்" என்று சொல்லும் வாலிபப் பெண்கள். அவ்வளவு மார்க்கப்பற்று! (16.08.1855).

வெங்கலப்பொட்டல் : சின்ன சபை. ஊக்கம் நிறைந்த விசுவாசிகள்.

இடைமறித்தான் துலுக்கப்பட்டி : ஒரு காலத்தில் இவ்விரு ஊர்களிலும் அனைவரும் கிறிஸ்தவர்கள். இப்போது மிகவும் கொஞ்ச பேர்தான் (27.08.1855).

முக்கூடல் : வாலிபத்தில் பேயாடியாயிருந்து 30 வருஷங்களுக்கு மு
முதலாவது கிறிஸ்தவனாகி துன்பங்களைச் சகித்த முதியவரான விசுவா
(28.08.1855).

தீப்பணம்பட்டி : பெருங்கூட்ட மக்கள் ஞானஸ்நான ஆயத்தக்கார
மறுதலித்தவர்கள் மனந்திரும்பி வந்துள்ளார்கள் (21.09.1855).

பெத்துநாடார்பட்டி : 40 குடும்பங்கள் கொண்ட புதிய சபை (27.09.185

கிருஷ்ணபேரி : அநேகர் சேர்ந்தார்கள். ஆனால் ஒரு வாலிபனைத் த
அனைவரும் பின்வாங்கி விட்டனர். அவர் தன் கோவிலை ஓலை எழு
மிஷனுக்கு கையளித்து விட்டார் (27.09.1855).

ஆரியன்காவு : ஜனங்கள் தங்கள் பேய் கோவிலை ஒப்புவித்து விட்டார்க
ஜெப வீடாகவும், பள்ளிக்கூடமாகவும் உபயோகிக்கிறோம். ஜனங்க
உறுதியாயிருப்பார்களென்று நம்புகிறேன் (20.10.1855).

மேட்டூர் : நம்பிக்கையூட்டும் சபை.

ரஸ்தா : சிறிய சபை. பெரியவர்களுக்குள் பக்தி வைராக்கியமு
அன்புமுள்ள ஆவி கிரியை செய்கிறது.

1856 :

கடையம் : சுமார் 30 குடும்பங்கள் முன் வந்தார்கள். நோக்கம் : ஒ
வழக்கில் உதவி வேண்டுமாம் மறுத்து விட்டேன் (29.01.1856).

சேர்ந்தமங்கலம் : ரோமானித்த மதத்திலிருந்து வந்த சிறிய சபை
(16.02.1856).

கரும்புளியூற்று : சிறிய ஆனால் கவனமுள்ள சபை. நம்பிக்கை உள்
(11.05.1856).

கீழபட்டமுடையார்புரம் : சுமார் 12 குடும்பங்களுள்ள இவ்வூர் முழுவு
சபையில் சேர்ந்தனர். அவர்களிலொருவரின் வீட்டு வளாகத்தில் ஜெ
நடத்தினேன். குருவன்கோட்டைச் சபையாருக்கு இவர்கள் உறவின
(12.05.1856).

ரஸ்தா : இன்று இச்சபையின் புதிய ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தே
சிறிய சபை. ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கையிலும், வார்த்தையில

ஆரோக்கியமுள்ளவர்கள். ஆலயக் கட்டுமானச் செலவு சுமார் ரூ.300/- இதில் சபையார் கொடுத்தது ரூ. 60/- நண்பர்களிடம் பிரித்தது ரூ. 30/- காணிக்கையாக் கொடுக்கப்பட்ட இரண்டு காளைகளை விற்றதில் வரவு ரூ. 5. நல்லூர் சேகர ஆலயக் கட்டுமான சங்கத்தின் உதவி ரூ. 200/- ஆராதனையில் சிலருக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன். நற்கருணை ஆராதனைக்குப் பின் அசன விருந்து (30.06.1856).

கோயிலூற்று : உட்பிரகாரம் (Nave) உள்பக்கவாட்டு விராந்தாக்கள் (aisles), பிரசங்க அறை, மண்டபம் கொண்ட 50' x 30' அளவு ஆலயத்துக்கும், சுற்றுச் சுவர்களுக்கும் (Compound walls) அஸ்திபாரம் போட்டேன். செங்கல், சுண்ணாம்பால் கட்டப்படும் - நேர்த்தியான சபை (16.07.1866).

தர்சலூற்று : இங்கும் பெரிய ஆலயம் கட்ட சபையார் விரும்புகிறார்கள்.

ஆவுடையநாடானூர் : முன்னர் ஒரு விசாரணை உபதேசியார் இருந்த இடம் இது. மறுபடியும் ஒரு விசாரணை உபதேசியாரை இங்கு வைப்பதற்காக ஒரு வீடு கட்ட ஏற்பாடு செய்தேன் (19.07.1856).

புலவனூர் : அண்மையில் அநேகர் புதிதாகச் சபையில் சேர விரும்புகிறார்கள். கவனமாக நடக்கும் சபை மக்கள் (20.07.1856).

கல்யாணிபுரம் : இரண்டொரு குடும்பம் தவிர, அனைவரும் ரோமன் அல்லது நமது சபைக் கிறிஸ்தவர்கள் சபையார் ஆலயம் கட்ட விரும்புகிறார்கள்.

திப்பணம்பட்டி, மீனாட்சிபுரம் : இரண்டும் புதுச் சபைகள் (11.08.1856)

சீவலசமுத்திரம் : பெரிய சபை, நற்கருணை ஆராதனை நடத்தினேன். நற்கருணை பெற்றவர்கள் 40 (24.08.1856).

சிவசைலனூர் : புது ஆலயம் பிரதிஷ்டை செய்தேன். ஒருவர் தவிர, சபையாரனைவரும் வந்திருந்தனர் (04.09.1856).

குரிச்சாம்பட்டி : நேர்த்தியான, நம்பிக்கை தரும் சபை. ஆலயத்துக்கு அருகிலுள்ள நிலத்தை சபை தலைவன் மிஷனுக்குக் கொடுத்துள்ளார்.

ஆலங்குளம் : அனேகர் பின்வாங்கி விட்டனர். காரணம் சபையில் இரண்டு கட்சிகள். அதினால் அரசதிகாரிகளிடம் பிராதுகள், வழக்குகள், மற்றொரு காரணம். ஆலங்குளம் விசாரணை உபதேசியாரான யாக்கோபு,

புரட்டுபதேசக்காரனாக மாறினதினால் வேலை நீக்கம் செய்யப்பட்டு அவர் உபதேசித்தது : 1. ஓய்வு நாளாசரிப்பு யூதருடைய வழக்கம் ஆகையால் கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை ஆசரிக்கத் தேவையில்லை. 2. சாம்பல் பூசிக் கொள்வது தவறல்ல. ஏனென்றால் இளங்காளையின் சாம்பல் யூதர்கள் மேல் தெளிக்கப்பட்டதென்று பழைய ஏற்பாட்டில் நா வாசிக்கிறோம். 3. சாம்பலினால் நெற்றியில் போட்டுக் கொள்ளும் மூன்று கோடுகள் திரித்துவத்தைக் குறிக்கின்றன. இந்த உபதேசத்தை ஏற்று கொண்ட பெரிய கட்சி புறமதத்தினருடன் சேர்ந்து கொண்டு சபையை துன்புறுத்துகின்றனர் (12.11.1856).

1857 :

1857-ம் வருஷ **சுரண்டை மிஷனெரி பேரன்புருக் ஐ** திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டதினால், **க்ளார்க் ஐயர் நல்லூ பாவூருடன் சுரண்டைக்கும் மிஷனெரியானார்.**

கோயிலூத்து 1857-ம் வருஷத்தின் இறுதியில் **கோயிலூத்து** கிறிஸ்தவர்களில் 35 பேர் மீது பகைவரால் பொய்யாகத் திருட்டு குற்றஞ்சாட்டப்படவே, அவர்கள் கைது செய்யப்பட்டு பல நா காவலிலிருந்த பின், குற்றச்சாட்டு பொய்யானதென்றுரு விடுதலையானார்கள். அந்த நாட்களில் சபையார் கலங்கித் தவித்த (13.11.1857).

புளியரைக் கிராமம் : ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி அரசுக் சொந்தமாயிருந்தது. அந்த வருஷம் அரசு அதை திருவாங் ராஜ்ஜியத்துக்குக் கொடுத்தது. அன்றிலிருந்து புளியரையிலிருந்த பத் கிறிஸ்தவக் குடும்பங்கள் திருவாங்கூர் அரசதிகாரிகளால் அவர்களை துன்பங்களுக்கு அளவே இல்லை. புளியவிளாரடி, சவுக்கடி, சிறையிரு ஊருக்கு ஊர் இழுத்தடிப்பு, கட்டாய வேலை இன்னும் பல, பல. **க்ளா** ஐயர் தலையிட்டு நடவடிக்கை எடுத்த பின் அவர்களுக்கு விடுத கிடைத்தது (03.12.1857).

மடத்தூர் : ஆலயம் கட்ட நிலம் வாங்கப்பட்டது (1856). ஆலயம் கட்டுவ தடுக்க எதிரிகள் பல முயற்சிகளெடுத்தனர். கடைசியாக **க்ளார்க்** கலெக்டரிடம் பிராது பண்ணி அதிகாரிகளின் விசாரணை முடிந்த பின் ஆலயம் கட்டப்பட்டுப் பிரதிஷ்டையானது (07.12.1857).

ஆலங்குளம் : சபை கொஞ்சங் கொஞ்சமாய் சீர்ப்பட்டு வருகிறது. பெரியவர்களை விட வாலிபரும், வாலிபப் பெண்களுமே திருச்சபை பற்று உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள் (09.12.1857).

1858 :

இவ்வாண்டு நாட்குறிப்புகள் கிடைக்கவில்லை. ஆனால் அரையாண்டு அறிக்கையில் பற்பல சபைகளைப் பற்றிக் குறிப்புகளெழுதியுள்ளார். அவற்றில் முக்கியமானவற்றை மட்டும் வெகு சுருக்கமாகக் கூறுவோம்.

கோயிலூற்று :

"சபை வளர்ச்சி திருப்திகரமாயிருக்கிறது. அது ஒரு மையமான இடமாயுமிருக்கிறதால் திரு. ஞானமுத்தை இங்கே பணியாற்ற வைக்க வேண்டுமென்ற என் தீர்மானம் சரியானது என்று திருப்தி கொள்கிறேன்" என்கிறார். திரு. ஞானமுத்து என்று க்ளார்க் ஐயரால் குறிப்பிடப்படுபவர் D. ஞானமுத்து ஐயர் சிறுவயதில் ரேனியஸ் ஐயரிடம் ஞானஸ்நானம் பெற்று, பாளையங்கோட்டை செமினெரியிலும், பின் சென்னையிலும் கற்று, 1849-ல் சென்னை அத்தியட்சரிடத்தில் குருவபிஷேகம் பெற்று, அங்கேயே சில வருஷங்கள் பணியாற்றி இப்பொழுது திருநெல்வேலிக்கு வந்திருக்கிறார். சென்னைக் கமிற்றி (M.C.C.) அவரை ஒரு வருஷம் டோனாவூரில் வைத்த பின் (1856 - 57) க்ளார்க்குக்கு உதவியாயிருக்க நியமித்தது. திருநெல்வேலித் திருச்சபையின் பிள்ளைகளில் குருபட்டம் பெற்ற முதல் "நெல்லை மகன்" இவரே. (இவருடைய பேரர்களான காலஞ்சென்ற திரு. வில்லியம் ஞானமுத்து, திரு. அலெக்ஸாண்டர் ஞானமுத்து இத்தலைமுறையினரில் பலருக்கு அறிமுகமானவர்களே).

புலவனூர் :

"கமிற்றியினர் (எனக்கு உதவியாக) இன்னுமொரு குருவானவரை இங்கு நியமிப்பராயின் அவருக்கேற்ற இடம் புலவனூரும் அங்குள்ள சபையுமே. அவர் இந்த சேகரத்தின் மேற்கு, தெற்குப் பகுதிகளையும், ஞானமுத்து (ஐயர்) கிழக்கு, வடக்குப் பகுதிகளையும் பொறுப்பெடுத்துக் கொள்வர்".

சிவந்திபுரம் :

இவ்வூரார் கிறிஸ்துமார்க்கத்தில் சேர வெகுநாளாக விருப்ப தெரிவித்தும், அவர்களுடைய மனவுறுதியைப் பற்றி நம்பிக்கை யின்மையால் சேர்க்கவில்லை. இந்த வருஷம் சேர்த்துக் கொண்டா ஆனாலும் இவ்வூர் ஒரு மடத்துக்குச் சொந்தமானதால் பலத்த எதிர்ப்பை எதிர்பார்த்தார். எதிர்ப்பில்லை! ஆகவே மிஷனெரி ஒருவரை அங் நியமித்து பள்ளிக்கூடமாயும், ஜெபவீடாகவும் ஒரு கட்டிடம் கட்டப் பணித்தா கட்டிடத்துக்கும் எதிர்ப்பில்லை! ஆனால் உபாத்தியாயர் ஊரிலில்லா ஓரிரவில் மடத்தாரனுப்பின ஆட்கள் பல பேர் வந்து, கட்டிடத்தை இடித் மரம், ஓலை மற்றும் கதவு, ஜன்னலனைத்தையும் கொண்டு போய் விட்டன **க்ளார்க்** மாஜிஸ்திரேட்டிடம் பிராது செய்யவே எதிரிகளின் தலைவர்க தண்டிக்கப்பட்டார்கள். சபை நிலைவரப்பட்டு விட்டது. “இப்பகுதியில் இ தான் முதல் சபை” யென்று க்ளார்க் எழுதுகிறார்.

குருவன்கோட்டை :

எதிரிகள் மேலும் மேலும் சபை மக்கள். ஆசிரியர் மற்றும் உபதேசியா மீதும், ஒரு தடவை **க்ளார்க் ஐயர்** மேலுங்கூட, பொய் வழக்குக தொடர்ந்து துன்பப்படுத்திக் கொண்டேயிருந்தனர். வழக்குகள் தொடர்பா இவர்கள் கைதாகிக் காவலில் வைக்கப்பட்டு, வழக்கு பொய்யென்றானபி விடுவிக்கப்படுவர். ஒரு வழக்கில் உபதேசியார், ஆசிரியர் மற்று சபையாரில் சிலர் சிறையில் அடைக்கப்பட்டனர். அங்கு அவர்க இரவிலும் பகலிலும் பவுல், சீலாவைப் போல பாடுவதும் ஜெபிப்பதும் மற்ற கைதிகளுக்குச் சுவிசேஷம் கூறுவதுமாயிருந்ததைக் கவனித் காவற்சேவகர், **“உங்கள் கடவுளே உண்மையான தெய்வம்”** என் அவர்கள் விடுதலையான போது, அவர்களிடம் சாட்சி கூறினார்கள்.

நல்லூர் ஆண்கள், பெண்கள் போர்டிங் பள்ளிகளின் பொறுப்பும் பக நேரப்பள்ளி மேற்பார்வையும் **அனி க்ளார்க்** அம்மாளிடமிருந்தன பெண்கள் போர்ட்டிங்கில் சேகரச் சபைகளிலிருந்து வந்த 70 பெண்க சேர்ந்திருந்தனர். **குருவன்கோட்டை, ஆலங்குளம், நல்லூ** பிள்ளைகள் பகல் மாணவிகள் (day - scholar).

க்ளார்க் தம்பதியருக்குப் பாளையங்கோட்டையிலிருக்கும் பொழுது இரண்டு ஆண், ஒரு பெண் குழந்தைகள் பிறந்தன என்று அறியுள்ளோமல்லவா? நல்லூருக்குப் போன பின் 1858-ல் ஒரு மகன், 1860-ல் ஒரு மகன், 1862-ல் ஒரு மகள் பிறந்தனர். கடைசிப் பிள்ளைகள் பிறக்கும் முன் 8 வயது, 6 வயது பிராயமான மூத்த பையன்களை அவருடைய மைத்துனரொருவருடன், பள்ளிப் படிப்பிற்காக இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டார் (12.08.1860).

ஓராண்டுக்குள் **க்ளார்க் ஐயரின்** இன்பமான குடும்ப வாழ்க்கையில் துயரம் சூழ்ந்தது. 1860-ல் பிறந்த குழந்தை **உவால்ற்றர் எட்வர்ட்** ஒரு வயதாயிருக்கும் போது வியாதிப்பட்டது. சிகிச்சைக்காகப் பாளையங்கோட்டைக்குக் கொண்டு போனார்கள். ஆனால் பயனில்லை. குழந்தை இறந்து விட்டான் (11.06.1861). **இரண்டே மாதங்களில்** 1858 ஏப்ரலில் பிறந்த மூன்று வயது பையன் **ஃப்ரெடெரிக் ஹ்யூ** 03.09.1861-ல் குற்றாலத்தில் திடீரென்று மரித்தான். வீடே வெறுமையாயிற்று. 1855-ல் பிறந்த 6 வயது பெண் ஒன்றே ஆறுதல். நாம் மேலே சொல்லியுள்ள கடைசிப் பெண் குழந்தை 21 நவம்பர் 1962-ல் பிறந்தாள்.

D. **ஞானமுத்து ஐயர்** 1857-ல் நல்லூர் வந்தார். சேகரத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து **க்ளார்க் ஐயர்** மேற்கு தெற்குப் பகுதிகளைச் சேர்த்து புலவனூரை அதற்குத் தலைமைப் பீடமாக்கி, அவ்வுபசேகரத்தை ஞானமுத்து ஐயரிடம் ஒப்புவித்தார்.

திருநெல்வேலி திருச்சபையின் இந்திய குருமாரனைவரிலும் சிறப்பில் முதலிடத்துக்குரியவர் D. ஞானமுத்து ஐயரே. குருமாரின் முதல் நெல்லை மகன் அவர் என்பது மட்டுமல்ல. ஆங்கில மொழி ஞானத்தில் ஆங்கில மிஷனெரிமாருக்கு இணையானவர். திருநெல்வேலி இந்தியக் குருமாரில் நூலாசிரியர்களில் முதலாவதானவர் இன்றைக்கும் இந்தியாவின் முதல் நிலை அத்தியட்சாதீனமாக (Premier Diocese) விளங்கும் இம்மாபெரும் ஆதீனத்தினுடைய பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக விளங்குகிற **"சங்கக் காணிக்கை"** அல்லது **"சங்கப் பணம்"** படைக்கும் முறையைக் கண்டுபிடித்தவரும் முதல் முதல் தன் சேகரத்தில் தொடங்கியவரும். **சங்கப் பணத்தின் தந்தை** D. **ஞானமுத்து ஐயர்.** அதன் பிறப்பிடம் **புலவனூர்**

C.M.S. தேவலாயம். பிறந்த தேதி 25 ஜனவரி 1861 செவ்வாய்க்கிழமை பரிசுத்த பவுலின் திருநாள்.

அதன் வரலாறு :

மேற்கு தெற்குப் பகுதி உண்மையில் **பழைய பாவூர் சேகரம்** அ இப்போது (1860) **புலவனூர் சேகரம் என்றறியப்பட்டது**. அதை மே நல்லூர் சேகரம் என்றும் குறித்தனர். அடுத்த கிழக்கு வடக்குப்பகுதி பழை நல்லூர் சேகரம். அது கிழக்கு நல்லூர் சேகரமென்றழைக்கப்பட்டது.

1860-ம் வருஷ கடைசியில் **ஞானமுத்து ஐயர்** தன்னுடை சேகரத்தில், உபதேசிமார் ஆறு பேர், சபையார் ஆறு பேர் கொண்ட ஒ குழுவைக் கூட்டினார். அந்தக் குழு அல்லது 'கமிற்றி'க்குச் 'சங்க (Sangam) என்று பெயர். இதற்கு மிஷனெரியே தலைவர் (அல் பிரசிடென்ற்) சேகர குரு உபதலைவர், பன்னிரு உறுப்பினரிலொரு செயலர் (செக்ரட்டெரி), பொருளாளர் மிஷனெரியே தான். 1. அந்தச் 'சங்க வருஷத்துக்கொருமுறை சேகரச் சபைகளை அச்சபைகளுக்கு வசதியா நாளெனக் குறிக்கப்பட்ட தினத்தில் அவர்களுடைய ஆலயத்தில் சந்தி வேண்டும். அச்சந்திப்பில் ஆராதனை நடத்தி அதில் சேகரத்தின் நிதிநிலை தேவைகள், திட்டங்கள், கிறிஸ்தவ ஈகை, கடமை முதலிய தலைப்புகள் சங்க உறுப்பினரும் குருவானவரும் பேசுவார்கள். அதன் பி கிராதிக்கருகில் மேசை போட்டு ஆசனத்தில் அமர்ந்து சபைப் பெயர் பட்டியலிலிருந்து குடும்பத் தலைவர்களின் பெயர்களை ஒவ்வொன்றா வாசிக்க வேண்டும். அப்போது அவர் எழுந்து வந்து தன் மனதில் நிர்ணயி தொகையைச் சொல்லி, முழுவதையுமோ, ஒரு பகுதியையோ படை வேண்டும். செயலர் அப்பணத்தைத் தொகையிட்டு வரவு வைத் 'பாக்கி'யைக் குறித்துக் கொள்ள வேண்டும். அன்று கையில் பண இல்லாதவர்கள் அந்த வருஷம் சங்கத்துக்குக் கொடுக்க நிர்ணயித்தை சொல்லலாம். செயலர் குறித்துக் கொள்வார். இவர்களும் 'பாக் வைக்கிறவர்களும் அடுத்த வருஷம் சங்கம் அவ்வூருக்கு வரும் நாளுக் முன் வாக்குப்பண்ணின தொகை முழுவதையும் படைத்துவிட வேண்டு 2. சங்கத்தின் செயற்கூட்டம் வருஷந்தோறும் ஜனவரி கடை புதன்கிழமையன்று நடத்தப்பட வேண்டும். 3. கூட்ட நடவடிக்கைகளை செயலர் ஒரு புஸ்தகத்தில் எழுதி வைக்க வேண்டும்.

'சங்கம்' சந்தித்த முதல் சபை புலவனூர் 25 ஜனவரி 1861. D.ஞானமுத்து ஐயர் ஆராதனை நடத்த, நல்லூர் கிழக்கு சேகரத்தில் நியமிக்கப்பட்ட குரு ஆபிரகாம் சாமுவேல் ஐயரும் 'சங்கத்'தின் உறுப்பினரில் மூன்று உபதேசிமாரும் பேசினார்கள். பின் சபையார் பெயர்கள் வாசிக்கப்படவே ஒவ்வொருவராக வந்து "சங்கப் பணம்" படைத்தார்கள். அன்றைய முதல் சங்கத்தில் புலவனூர் படைத்த சங்கம் ரூ. 80/- (ரூபாய் எண்பது).

அதுமுதல் 'சங்கம்' D. ஞானமுத்து ஐயர் தலைமையில் சேகரச் சபைகளிலெங்கும் சென்று "சங்கக் கூட்டம்" நடத்தினர். சங்கம் சந்தித்த 5 சபைகளிலிருந்து சேர்ந்த "சங்கப் பணம்" ரூ. 501/- வருஷம் முழுவதுக்குமாக ஒரே ஒரு அணா மட்டும் (இன்றைய 6 பைசா) கொடுத்தவர்களுமுண்டு. ரூ. 12/- கொடுத்தவர்களுமுண்டு.

அந்த முறையை வெகுவாய்ப் பாராட்டின க்ளார்க் ஐயர் உடனே கிழக்கு நல்லூர் உபசேகரத்திலும் ஒரு 'சங்கத்'தை ஏற்படுத்தினார். A.சாமுவேல் ஐயர் அதின் உபதலைவர்.

சங்கப் பணமுறை வெகு விரைவில் C.M.S. சேகரங்களனைத்திற்கும் பரவிற்று. சில வருஷங்களுக்குப் பின் S.P.G. சேகரங்களும் இதைப் பின்பற்றின.

திருநெல்வேலித் திருச்சபையின் சுயாதரவுத் திட்ட வளர்ச்சியின் வரலாற்றில் முதல் அடி எடுத்து வைக்க உதவினவர் ரேனியஸ் ஐயர் (C.M.S. சுதேச தர்மசகாய நிதிச்சங்கம் - 1830). அடுத்த அடி வைக்கப் போதித்தவர் அவருடைய சீஷன் D.ஞானமுத்து ஐயர் (சங்கப் பணம் 1860 - 61). மூன்றாம் அடி எடுத்து வைக்க வழிகாட்டியவர் தாமஸ் உவாக்கர் ஐயர் (தவச உற்சவம் 1890).

1860-ல் வடதிருநெல்வேலியில் ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் முக்கடையான்பட்டியிலும், உக்கிரங்கோட்டையிலும் ஆவிக்குரிய எழுப்புதல் அலைகள் தோன்றி சிவகாசி, வாகைக்குளம், பன்றிகுளம், அன்னைவிளை, சுரண்டை, நல்லூர் சேகரம் வரை பரவியது. 1862 வரை இவ்வெழுப்புதலின் நல்ல விளைவுகள் நீடித்தன. 1862-ம் ஆண்டறிக்கைகள் எழுப்புதலைப் பற்றியே இருந்தன.

அடுத்த ஆண்டு முழுவதும் சபைகள் பகைவரால் கொடி துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உள்ளான வரலாறுகள். அதிக துன்பங்களடைந்தவை. பாலூர், ஆவுடையாளூர், மேட்டு கோயிலூற்று, புளியரை, வெள்ளாளன்குளம். இந்தக் கொடி கலகங்களிலும் அடுத்த வருஷம் வந்த விஷபேதிக் (காலரா) காலங்களிலு க்ளார்க் ஐயரும் இருகுருமாரும் சபைகளைச் சந்தித்து ஆறுதல் சொ மருந்துகள் கொடுத்து ஜெபித்து, ஜெபத்தில் மக்களை ஊக்குவித்து வந்தார்கள். க்ளார்க் ஐயரின் மனைவி மேரி ஆன் கிராமங்களுக்குச் சென்று காலரா நோயாளிகளுக்கு மருத்துவம் செய்து அனேகரை மரணத்தினின்று மீட்டார் என்று சாமுவேல் ஐயர் எழுதுகிறார்.

ஏழைகளுக்குக் குறிப்பாகக் காலரா நோயாளிகளுக்கு ஜாதிமத பேத பாராமல் உதவி நல்லூர் சேகரக் கிறிஸ்தவர்கள் ஏழைகள் நிதிக்கு தாராளமாய்க் கொடுத்து வந்தார்களென்றும் அவர் எழுதினார்.

மேற்குப் பகுதியில் துன்பங்கள் மற்றும் காலராவினிமித்தம் பல மறுதலித்து விட்டார்கள். இந்துக்களில் மரித்தவர்கள் ஏராளம் வசந்தராயரொருவர் வரப்போகிறார். வந்து ஆங்கிலேயரை விரட்டி விட் அரசாளுவார் என்று ஒரு புதிய உபதேசமும் முத்துக்குட்டி வேதமென்னு ஒரு புதிய போதனையும் மேலும் சில மறுதலிப்புகளுக்குக் காரணங்கள்.

மருதம்புத்தூரில் கிட்டத்தட்ட அனைவரும் கிறிஸ்தவர்கள் புளியரையில் திருவாங்கூர் அரசரதிகாரிகளால் கொடிய துன்பம் கோயிலூத்தில் ஆலயம் கட்ட 464 ரூபாய் சேர்ந்திருக்கிறது. தேவை ரூ. 700/- மைலப்புரம் உபதேசியார் காலராவில் இறந்து விட்டார் சபையாரே ஆராதனை நடத்தி வியாதியஸ்தரைச் சந்தித்து ஜெபித்து வருகிறார்கள்.

பிள்ளையார்குளத்தில் 9 குடும்பங்கள் ஏழு பேர் 1862-ல் கிறிஸ்தவர்களாகி விசுவாசத்தில் உறுதியாயிருக்கிறார்கள் (பெப்.63 சீவலசமுத்திரத்தில் கொடூர காலரா. சபையார் பாவ அறிக்கை, ஜெப செய்தார்கள். சீவலசமுத்திரம் பாஸ்ற்றரேட் தலைமையிடமாகிறது (1863 சபையார் 157 புதிய ஆலயம் கட்ட க்ளார்க் ஒப்புக் கொண்ட எஸ்டிமே ரூ.2,000/-

க்ளார்க் ஐயரின் தங்கை (Miss Clark) தன் தமையனாருக்கு உதவியாக திருவாங்கூரிலும், நீலகிரியிலும் கோவினூற்று ஆலயத்துக்கென்று ரூ.465/- சேகரித்துக் கொடுத்தார்.

வெள்ளாளன்குளத்தில் மறுதலித்துப் போன ஒருவன் மற்றவர்களைத் தன் வழிக்கு இழுக்க முயன்று தோற்றவன். ஒரு மரத்திலிருந்து விழுந்து இரண்டு நாட்களில் மரண வாசலில் நின்று உபதேசியாரிடம், "நான் யூதாஸ்காரியோத் போலானவன்; என் பாவங்கள் மன்னிக்கப்படவே மாட்டாது" என்று பிரலாபித்து உயிர்விட்டான்.

மேற்கண்டவை நாட்குறிப்புகளினின்று எடுக்கப்பட்டவை. மேலும் சில: அரையாண்டறிக்கை 30.06.1864, புலவனூரில் 20 ஆண்டுகள் ஞானஸ்நானம் பெறாமலிருந்து வந்த சிலர் மறுதலித்து விட்டார்கள். ஆலங்குளத்தில் பல ஒழுங்கீனங்கள் மிகுதியானவர்களை 1863-ல் சபை நீக்கம் செய்து விட்டேன். புளியரையில் துன்பம் நீங்கி ஆவிக்குரிய வளர்ச்சி காணப்படுகிறது.

31.12.1864 உடன் முடிகிற அரையாண்டறிக்கையில் கிட்டத்தட்ட எல்லாச் சபைகளுமே ஒழுங்கிலும் ஆவிக்குரிய காரியங்களிலும் க்ளார்க்குக்குத் திருப்தியளித்தன. மேட்டூரில் ஒரு கலியாணம். மாப்பிள்ளை விவாகமாகாதவர் (Bachelor) பெண் ஒரு விதவை. இந்துக்களும், கிறிஸ்தவர்களும் பலமாய் எதிர்த்தார்கள். க்ளார்க் துணிந்து நின்று திருமணத்தை நடத்தினார். எதிர்ப்புகள் மறைந்தன. நாமறிந்தமட்டில் இதுவே மேற்கு திருநெல்வேலியில் நடந்த முதல் கிறிஸ்தவ விதவை மறுமணம்.

1865-ம் வருஷம் தன் சேகர எல்லைக்குள் வாழ்ந்த மக்கள் ஜனத்தொகையைக் கணக்கெடுத்தார். அதன் விபரம்: எல்லை - வடக்கே சிற்றாறு, தெற்கே - தாமிரபரணி ஆறு, மேற்கே - மேல்காற்று மலை, கிழக்கே - பாளையங்கோட்டை சேகரம். பரப்பு - 380 சதுர மைல். ஜனத்தொகை 1,16,973 இதில் இந்து 1,07,025, முஸ்லீம் 5,805, கிறிஸ்தவர்கள் 2,970, ரோமன் சபையினர் 1,173. ஜாதி ஜாதியாகவும் கணக்குக் கொடுத்திருக்கிறார். அதை இங்கே தருவது தேவையற்றது.

பாவநாசம் மலைகளில் வெகுதூரத்துக்கப்பால் மலையாளர் எ
மலைவாழ் மக்களுக்குள் பாலூர் மிஷனெரி செப்ற்றிமஸ் ஹாப்ஸ் ஐய
காலத்தில் சுவிசேஷம் போதிக்கப்பட்டு 150 பேர் கிறிஸ்தவர்களானார்க
அந்த ஜனங்கள் ஒரு வருஷத்தில் உண்டான வறட்சியினால் இடம் மாறி
போது ஒரு பையன் வழி தவறி கீழே வந்து பசியும் பட்டினியுமாய்
கிடந்ததைக் கண்டு, க்ளார்க் ஐயர் அவனை ஆதரித்து, தோட்டக்காரனாக
்கி படிக்க வைத்து ஞானஸ்நானத்தில் சுவிசேஷ மல்லன் என்று பெ
கொடுத்து, மலைக்கு அனுப்பினார். அவன் தன் ஜனத்துக்கு
போதகனானான்.

மேரி ஆன் க்ளார்க் அம்மாள் நல்லூர் பெண்கள் போர்டி
பள்ளியை நிர்வகித்தது போல் சுரண்டை பெண்கள் போர்டி
பள்ளியையும் கண்காணித்து வந்தார். அந்நாளில் சுரண்டையி
மிஷனெரி இல்லை. ஆகையினால் அப்பள்ளி நன்ற
நடத்தப்படவில்லை. எனவே அதை மூடிவிட்டு அதில் படித்த பிள்ளைகளை
க்ளார்க் ஐயர் நல்லூர் பெண்கள் போர்டிங் பள்ளியில் சேர்த்தார் (186
ஆன் க்ளார்க் நடத்திய ஞாயிறு பள்ளியில் படித்தவர்கள் 150.

க்ளார்க் ஐயர் காலத்தில் பள்ளிக்கூட மேற்பார்வையைக் கூடும
மட்டும் தாமே செய்து வந்தார். சில புதிய பள்ளிகளையும் நிறுவின
அக்காலத்தில், மிஷன் பள்ளிக்கூடங்கள் அரசின் உதவித் தொகை
திட்டத்தை ஏற்றுக் கொண்டது (1857) சரியா? அது ஞானமுள்ள செய
என்று ஒரு வாக்குவாதம். மிஷனிலிருந்து பெற்ற சம்பளத்துக்கு மேல
அரசு உதவித் தொகையாகப் பெற்றது மிக அற்பமான
தொகையேயெனினும், அவர்கள் அரசின் விதிகளுக்கு உட்பட்டு அ
நடத்தும் தேர்வில் வெற்றி பெறவும், வருஷந்தோறும் ஆய்வதிகாரி
நடத்தும் ஆய்வுக்கு (Inspection) தாங்களும் தங்கள் மாணவ மாணவிகளு
தங்கள் பள்ளிக்கூடங்களும், நிர்வாகமுங்கூட உட்பட வேண்டியதா
யிருப்பதால், அவர்களுடைய அறிவும் கற்பிக்கும் திறமையும், பள்
பிள்ளைகளின் தேர்ச்சியும், ஆசிரியரின் கடமையுணர்ச்சி
மிகுந்திருக்கிறதென்பது கண்கூடு, என்றெழுதி அரசுதவித் திட்டத்
ஆதரித்தார்.

சுவிசேஷ ஊழியத் திட்டங்களிலொன்று **'யாத்திரிகா'** திட்டமென்பது (Pigrims) அதாவது சுவிசேஷகரான வாலிபர் இரண்டு பேர் சேர்ந்து, ஊர் ஊராகச் சென்று துண்டுத்தாள் பிரசுரங்கள், சுவிசேஷப் பங்குகள் முதலியவற்றை விநியோகித்து சேகரம் முழுவதிலும் சுவிசேஷம் கூற வேண்டும். இவ்வூழியம் சபைகளிலுள்ள வாலிபராலேயே செய்யப்பட வேண்டும். உபதேசிமார் ஆசிரியர் முதலான ஊழியர் தேவையான உதவி ஒத்தாசைகள் தந்து அவ்வியாத்திரீகர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பது இத்திட்டம். இது தீவிர சுவிசேஷ முயற்சிகளுக்கு வழிவகுத்தது.

க்ளார்க் ஐயரின் ஊழிய காலத்தில் தோன்றிய புதுச்சபைகள் கடையம் 1856, **கிருஷ்ணபேரி** 1856, **பட்டமுடையார்புரம்** 1856, பெத்தநாடார்பட்டி 1855, உறுதி 1856-ல் **ஆரியன்காவு** 1855, உறுதியானது 1856-ல், **அரியப்புரம்** 1857, **சிவந்திபுரம்** 1858, மருதம்புத்தூர் (மறுமலர்ச்சி) 1862.

க்ளார்க் கட்டின முக்கிய தேவாலயங்கள்: ரஸ்தா - 30.06.1856, கோயிலூற்று 16.07.1856 (தன் காலம் முழுவதிலும் இதைக்கட்டி முடிக்க முயன்றார்) சிவநாடானூர் 04.09.1856, மடத்தூர் 07.12.1857, கல்யாணிபுரம் 1865 (கோயிலூற்று தவிர, மற்ற பிரதிஷ்டை நாள்கள்).

1865-ல் க்ளார்க் ஐயர் விடுப்பில் இங்கிலாந்துக்குப் போனார். அதன் பின் அவர் திருநெல்வேலிக்குத் திரும்பி வரவில்லை. பின் இலங்கையில் சிலோன் கூலி மிஷனில் 1879-ம் ஆண்டு வரை பணியாற்றினார். அங்கே இலங்கை அத்தியட்சருக்கும், அவருக்கும் ஒத்துப் போகாமல் இருப்பட்டத்துக்கே ஆபத்து வந்து விட்டது. பின்பு திருவாங்கூரில் மிஷனெரியாயிருந்து 1885-ல் ஓய்வெடுத்து இங்கிலாந்தில் 1909-ல் மறுமைக்குள்ளானார் வயது 89.

13

ஹென்றி கான்ஸ்டன்றைன் ஹக்ஸ்றபிள் ஐயர்

(S.P.G) 1849 - 1856

ஹென்றி கான்ஸ்டன்றைன் ஹக்ஸ்றபிள் ஐயர் (Rev. Henry Constantine Huxtable) இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் நகரில் (Bristol) 1825-ல் பிறந்தார். இளமைப் பருவத்தில் முறைப்படி கற்று, லண்டன் நகரத்து அத்தியட்சரிடம் உதவிக் குருப்பட்டம் பெற்று, S.P.G. மிஷனெரியாக இந்தியாவுக்கு வந்தார். M.D.C. அவரை கிறிஸ்தியாநகரத்தில் **J.K.பெஸ்ட் ஐயருக்கு** உதவி மிஷனெரியாக நியமித்தது (1849 - 51).

கிறிஸ்தியாநகரத்தில் அவர் உதவி மிஷனெரியாக இருந்ததால் அவருடைய பணிச் சிறப்பென்று நாம் எதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. மேலும் அவர் ஓர் உதவிக் குருவாகவேயிருந்தார். எனவே **பெஸ்ட் ஐயர்** சொல்லும் பணிகளை மட்டும் நிறைவேற்றி வந்தார். சபை சந்திப்பு இவருடைய முக்கிய வேலையாயிருந்த தென்பது மட்டும் தெளிவு. இப்படியிருக்கும் காலத்தில் 1851 பெப்ரவரி 2-ம் தேதி பாளையங்கோட்டை தேவாலயத்தில் சென்னை அத்தியட்சர் **ஹக்ஸ்டபிளுக்கு** குருப்பட்டம் கொடுத்தார்.

அவ்வாண்டில் **சாயர்புரம்** மிஷனில் நிர்வாகக் குழப்பமேற்பட்டு, போப் ஐயர் நிறுவி சிறப்பாக நடத்தி வந்த, புகழ்பெற்ற சாயர்புரம் செமினெரி மூடப்பட்டதுடன் மிஷனெரி ஸ்தானமும் காலியானது. எனவே **ஹக்ஸ்டபிள் ஐயர்** சாயர்புரத்துக்கு மாற்றப்பட்டார். அவரும் அவருடைய மனைவியும் 1852 துவக்கத்தில் சாயர்புரம் சென்று மிஷனெரிப் பொறுப்பேற்றனர்.

அவர்கள் வந்ததும் செய்த முதல் வேலை M.D.C.யின் அனுமதியுடன் சாயர்புரம் செமினெரியையும், **மேரிஜேன் போப் அம்மாள்** (போப் ஐயரின் முதல் மனைவி) துவக்கி அண்மையில் மூடப்பட்டிருந்த பெண்கள் பள்ளிக்கூடத்தையும் மறுபடியும் திறந்ததாகும். செமினெரி ஆசிரியராகவும் சாயர்புரம் உபதேசி - மிஷனெரியாகவும், பணியாற்ற **ஃப்ரடெரிக் ஜேம்ஸ் வீப்பர்** என்ற ஒரு 'லே' மிஷனெரியை M.D.C. அனுப்பினது. சாயர்புரம் விசாரணை உபதேசியாரான (Inopecting Cathechist) **அருளப்பன் தாவீது**

உபதேசியாரும், யோவான் ஆசீர்வாதம் பிள்ளையும் செமினெரியில் கற்பிக்க நியமிக்கப்பட்டனர். மாணவர் 90 பேர்.

ஹக்ஸ்டபின் பொறுப்பேற்ற 1852-ம் வருஷம் பெப்ரவரியில் சாயர்புரம், புதுக்கோட்டைச் சேகரங்களில் கிறிஸ்துமார்க்கத்துக்கு நேராக ஒரு கூட்டியக்கம் (Mass Morement) தோன்றி அதின் விளைவாக, ஏற்கனவே கிறிஸ்தவ சபைகளிலிருந்த கிராமங்களிலும், சபைகளில்லாத கிராமங்களிலும் சுமார் 1,100 பேர் கிறிஸ்தவர்களாக விரும்பித் திருச்சபையில் ஞானஸ்நான ஆயத்தக்காரராகச் சேர்க்கப்பட்டார்கள்.

ஆனல் அவர்களில அனேகர் உலகப் பிரகாரமான காரணங்களுக்காக வந்தவர்கள். சிலர் 1843 - 44ல் கிறிஸ்தவர்களாகிப் பின் வாங்கினவர்கள் இப்பொழுது மறுபடியும் மனந்திரும்பினவர்கள். ஆகையினால் இவர்களுக்கு கிறிஸ்துமார்க்க சத்தியங்களையும், கடமைகளையும் கற்பிப்பதில் பல முயற்சிகளில் ஈடுபட்டு காலை மாலை ஆராதனைகளுக்கு கூடுமான மட்டும் அனைவரும் ஒழுங்காக ஆஜராக வேண்டுமென்று கட்டளையிட்டு, அந்த ஆராதனைளில் இரண்டாம் பாடத்தை உபதேசிமார் விளக்கித் தெளிவுபடுத்திப் போதிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார். அத்துடன் கேள்விகள் கேட்டுப் பதில் வரவழைத்துக் கற்பிக்கவும் (Catechotical Teaching) உபதேசிமாருக்குக் கட்டளையிட்டார். இந்த முறையில் புதுக் கிறிஸ்தவர்களுக்குப் போதிக்கத் திட்டம் செய்த ஹக்ஸ்டபிள் ஓராண்டு காலத்துக்குப் பின் "கடந்த ஆண்டு முழுவதிலும் எல்லாருமே நிறையக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்திலிருக்கும் நகரங்களிலும், கிராமங்களிலும் வாழ்கிறவர்களிலுங்கூட இந்த அளவு (கிறிஸ்துமார்க்க) அறிவைக் காண முடியாது" என்றெழுதினார் (1853).

கிறிஸ்தவர்களுக்குப் போதித்து, வளர்த்து, வழிநடத்துகிற உபதேசிமாரைப் பற்றி ஹக்ஸ்றபிள், "உபதேசிமாருக்கு எத்தனையோ சோதனைகளும் இடர்பாடுகளும் உண்டு. ஆனாலும் திருநெல்வேலியில் இன்னமும் சிசுவாக இருக்கும் திருச்சபையின் வருங்கால நல்வாழ்வு இவர்களுடைய திறமையையும் உண்மையான உழைப்பையுமே வெகுவாகச் சார்ந்திருக்கிறது" என்றெழுதுகிறார்.

எனவே உபதேசிமாரின் அறிவு வளர்ச்சியையும் வேலைத் திறனையு(ம்) பற்றி அக்கறை கொண்ட **ஹக்ஸ்றபின்** சனிக்கிழமை தோறும் சேக(ர) உபதேசிமாரனைவரையும் சாயர்புரத்தில் கூட்டுவித்து அவர்களுக்குப் பா(ட) வகுப்புகள் நடத்தினார். முற்பகலில் **பீட்டர்** உபதேசியார் வேதசரித்திரமு(ம்) (Scripture History) **யோவான் ஆசீர்வாதம்** கிறிஸ்து சமய(க்) கோட்பாடுகளும் (Dogmatic Fheology) கற்பித்தனர். மாலையி(ல்) சுவிசேஷங்களில் வியாக்கியானம் மற்றும் மத்தேயு சுவிசேஷ விளக்கவுரைகளை **ஹக்ஸ்றபின்** போதித்தார்.

பள்ளி ஆசிரியர்களும் இவ்வுபதேசிமார் கூட்டங்களுக்கு வர வேண்டும் தவிர திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் மாலை 4 மணி முதல் 5 மணி வரை அவர்களுக்கு கர்த்தருடைய ஜெபத்திலும், புவியியலிலும் ஐய பாடங்கள் கற்பித்ததுமின்றி, சனிக்கிழமை பிற்பகலில் கணக்கு, தமிழ், தமி(ழ்) இலக்கண வகுப்புகள் நடத்தினார். இப்பாடங்களில் தேர்வுகள் உண்(டு) பரீட்சைகளில் வெற்றி பெற்றவர்களைத் தான் உபதேசிமாராகப் பத(வி) உயர்வு பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களென்று திட்டம் செய்தார்.

போப் ஐயர் சாயர்புரம் வந்து பொறுப்பேற்றவுடன் தேவாலயமொன்(று) கட்டினார். (பிரதிஷ்டை 25.04.1844) ஆனால் அது தற்காலிகமான(து) தானென்றும் நிரந்தரமான பெரியதொரு ஆலயம் கட்டவேண்டுமென்(று) அந்நாளைய ஆர்ச்டீக்கனுக்கு அவரே எழுதினார் (1844). எனினும் போ(ப்) அதற்கான முயற்சியெடுக்கவில்லை.

ஹக்ஸ்றபின் சேகரப் பொறுப்பேற்றிருந்த இந்தக் காலத்தில் (185(3)) சேகர சபை மக்கள் 1,618 பேர். இவர்களில் ஞானஸ்நானம் பெற்றவர்க(ள்) 588, நற்கருணைக்காரர் 106 பேர். நற்கருணை ஆராதனை நடக்கு(ம்) நாட்களில் சேகரச் சபையார் இங்கே வரும் போது மிகுதியானவர்க(ள்) வெளியில் தான் நிற்க வேண்டியதிருந்தது. ஆகையினால் 1582-(ம்) வருஷத்திலேயே **ஹக்ஸ்றபின் ஐயர்** ஆலயம் கட்டத் திட்டங்கள(ை) நிறைவேற்றுவதில் முனைந்து, 1853 அக்டோபரில் ஆலயத்துக்(கு) அஸ்திபாரமமைக்கத் திட்டம் செய்தார். ஆனால் செப்டம்பரில் ஹக்ஸ்றபி(ன்) ஐயரின் மனைவிக்கு உடல்நலம் கெட்டு அதிக வியாதிக்குட்பட்டபடியா(ல்) அஸ்திபாரமமைப்பது தள்ளிப் போய் விட்டது. மேலும் பல தடங்கல்க(ள்) ஏற்படவே அஸ்திபாரம் போடும் வைபம் 1854 அக்டோபர் 19-ம் தேதி(க்)

நிறுத்திப் போடப்பட்டது. இதற்கிடையில் போப் ஐயர் கட்டின ஆலயம் 1852-ம் வருஷத்திலேயே இடிக்கப்பட்டு தற்காலிகக் கட்டிடமொன்றில் ஆராதனைகள் நடத்தப்பட்டன.

ஆலயக் கட்டிடத்து வரைபடங்களை (Plans) கட்டிடச் சிற்பி திரு. பார்சிவல் குறித்த காலத்தில் கொடுக்கத் தவறிவிட்டாரெனினும் அஸ்திபார நாள் மாற்றப்படவில்லை.

1854 அக்டோபர் 19, வியாக்கிழமை மழை மேகங்கள் கருத்து எந்த நேரமும் மழை கொட்டும் என்ற அச்சம். ஆயினும் அழைக்கப்பட்ட ஐரோப்பியர்கள் 28 பேரும் வந்து விட்டார்கள். அவர்களில் 12 பேர் மிஷனெரி குருமார். 11.30 மணிக்கு ஆலயத்தில் ஆங்கில ஆராதனை. செமினெரி மாணவருட்பட ஆங்கிலம் தெரிந்த இந்தியர் சுமார் 100 பேர் கலந்து கொண்ட வழிபாடு. ஹக்ஸ்றபிள் ஆராதனை நடத்த, **கோர்ன்ஸ்** ஐயர் (முதலூர்) ஏசாயா 60-ம் அதிகாரத்தைப் பாடமாக வாசித்தார். **ஜான் தாமஸ் ஐயர்** (மெய்ஞ்ஞானபுரம்) ஏசாயா 28:16ஐ வைத்து அருளுரையாற்றினார்.

மாலை 4.30 மணி தெற்கு மூலையில் அஸ்திபாரம் அமைக்கும் குழி. அதைச் சுற்றிலும் கிராமப் பள்ளி சிறுவர்களும், பண்ணைவிளை போர்டிங் பள்ளி மாணவர்களும் செமினெரிப் பழைய புதிய மாணவர்களும், சபையாரும் அமர்ந்திருக்க, ஆராதனை நடத்துகிறவர்கள் குழிக்கருகில் மிஷனெரிமாரின் மனைவியர் பண்ணைவிளை **ற்றக்கர் ஐயர்** கொடுத்துதவிய பெரிய கூடாரத்தின் கீழ் ஆசனங்களிலிருக்க ஆராதனை ஆரம்பமானது. நல்லூர் **W.க்ளார்க் ஐயர்** ஆராதனையை நடத்தினார். முதலில் எல்லாருக்கும் மா உன்னதர் கர்த்தாதி கர்த்தரே என்ற கீதத்துடன் மாலை ஆராதனை ஆரம்பமாகி 128-ம் சங்கீதம் வாசிக்கப்பட்டபின் திருநெல்வேலி S.P.G. மிஷனெரிகளில் மூத்தவரான **நாசரேத் கேமரர்** ஐயர் அஸ்திபாரக் குழியண்டை வந்தார். குழியைச் சுற்றி மூன்று தூண்களை நட்டி அவைகளை நுனியில் இணைத்து, அந்த இணைப்பிலிருந்து கயிறுகளில், குழிக்குமேல் அஸ்திபாரக்கல் தொங்க விடப்பட்டிருந்தது. மூன்று தூண் கால்களும் கயிறுகளும் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இணைப்புக்கு மேல் பிரிட்டிஷ் தேசியக் கொடி பறந்தது.

கேமரர் ஐயர் குழியினருகில் நின்று தானே தயாரித்து எழு வைத்திருந்த ஒரு நீளமான ஜெபத்தைப் பக்தி விணயமாய் வாசித்தார். அ ஜெபத்தை எழுத இச்சிறு நூலில் இடமில்லை. எத்தனை வருஷங்கள் கழி அதை வாசித்தாலும் அந்த ஜெபம் இருதயத்தை அனலுறச் செய்கிறது.

பின் அக்காலத்தில் உபயோகத்திலிருந்த 1 ரூபாய், 1/2 ரூபா 1/4 ரூபாய், 1/8 ரூபாய் (இவை வெள்ளி நாணயங்கள்) 1/2 ரூபாய் மதிப்புள் 2அணா நாணயம், 1/4 ரூபாய் மதிப்புள்ள 4 அணா, 1 அணா நாண (இவை நிக்கல் நாணயங்கள்), (ஒரு ரூபாய் அகலமுள்ள) 1/2 அணா, ரூபாய் அகலமுள்ள 1/4 அணா, 1/4 ரூபாய் அகலமுள்ள 1 பைசா (இ செம்பு நாணயங்கள்). நாணயங்களில் வகைக்கு ஒன் அஸ்திபாரக்கல்லின் மேல் கேமரர் ஐயர் பரப்பி வைத்தார். பின் அவரி ஒரு செப்புப் பட்டயம் (Brass Plate) கொடுக்கப்பட்டது. அதை அவர் அ நாணயங்களின் மேல் வைத்தார். அதில், விக்டோரியா அரசி, கல்கத் நாயாதீன பேரத்தியட்சர் **தானியேல் வில்சன்**, சென்னை அத்திய தாமஸ் டெல்ட்ரி, சாயர்புரம் S.P.G. சேகர மிஷனெரி குரு, H.C.ஹெக்ர உதவிக்குரு **அருளப்பன் தாவீது**, ஜில்லா கலெக்டர் C.J.பர்ட் (Mr. C Bird) இவர்கள் காலத்தில் கர்த்தருடைய வருஷம் 1854 அக்டோபர் மா பத்தொன்பதாம் தேதியன்று நாசரேத் மிஷனெரி A.E.கேம ஐயரவர்களால் இந்த அஸ்திபாரம் போடப்பட்டது. பரிசுத்தரும், நித்தியரும திரியேக தேவனுக்கு மகிமையுண்டாக இந்த ஆலயம் அஸ்திபா பண்ணப்படுகிறது. அவருக்கே என்றென்றைக்கும் துதியுண்டாவத ஆமென். "உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக" என்ற வாசகங் பொறிக்கப்பட்டிருந்தன.

பின்பு பாளையங்கோட்டையில் **எட்வர்ட் சார்ஜென்ற் ஐ** நிறுவியிருந்த கைத்தொழில் பயிற்சிப் பள்ளியில் கருப்பு நிற மரத்தின செய்யப்பட்டு வெள்ளித் தகடு பதிக்கப்பட்ட மட்டப் பலகையும், அ மரத்தினால் செய்து வெள்ளிப் பூண் போட்ட கரண்டியும் கேமரரி கொடுக்கப்பட்டது. அப்பொழுது அவர் கயிறுகளை தளர்த்திக் கல் இறக்கிக் குழியில் வைத்துச் சாந்திட்டு பரிசுத்தமும், மகிமையுள்ளவ ஸ்தோத்தரிக்கப்படுகிறவரும் ஒன்றானவருமான பிதா குமாரன் பரி ஆவியின் நாமத்திலே, திரித்துவ தேவனுடைய நாமத்தினா

அழைக்கப்படவிருக்கிறதும், இங்கிலாந்து திருச்சபை முறைமைகளின்படி சர்வ வல்லமையுள்ள தேவனை தொழுது சேவிக்கப்படுமிடமுமான இந்த ஆலயத்தின் மூலைக் கல்லாகவும், அஸ்திபாரக் கல்லாகவும் இதை அமைக்கிறேன். தேவனாகிய கர்த்தருடைய மகிமையுள்ள பராக்கிரமம் எம்மோடிருப்பதாக. கர்த்தாவே எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும். ஆம் எங்கள் கைகளின் கிரியைகளையே எங்களிடத்தில் உறுதிப்படுத்தும். அவருடைய நாமம் என்றுமுள்ளது என்று இன்னமும் சில வேத வசனங்கள் கூறி முடிக்கச் சபையார் ஆமென், ஆமென் என்றனர்.

தொடர்ந்து பாடகர் வரிசை (Choir) 'சேனைகளின் தேவனாகிய கர்த்தரே நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்' என்று பாடினர். பின் **கேமரர் ஐயர்** எசே. 8:22ன் மீது அருளுரையாற்றினார். பரிசுத்த சீமோன், யூதா அப்போஸ்தலர்களின் திருநாளுக்குரிய சுருக்க ஜெபத்துக்குப் பின், ஒரு கீதம் பாடும் பொழுது காணிக்கைப் படைக்கப்பட்டது. காணிக்கை ரூ.293/- அதன் பின் ஆசீர்வாதம் கூறப்பட்டு ஆராதனை முடிந்தது.

இந்த விபரங்களையெல்லாம் சென்னை அத்தியட்சருக்கு எழுதின ஹக்ஸ்றபிள், S.P.G. C.M.S. ஆகிய இரு சங்கங்களும் இவ்வாலயக் கட்டுமானத்திற்காகப் பணவுதவி செய்ய, அத்தியட்சரே அவைகளுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டு. சேகரச் சபை மக்கள் ரூ.900/- கொடுத்திருக்கிறார்களென்று கூறுகிறார். அத்தியட்சருக்கு எழுதின மற்றொரு கடிதத்தில் ஒன்றரை வருஷங்களுக்குள் 1856-ல் ஆலயத்தைக் கட்டி முடித்துப் பிரதிஷ்டைக்கு அத்தியட்சரை அழைத்து விடுவேன் என்ற நம்பிக்கை தெரிவித்தார்.

ஆனால் அந்த நம்பிக்கை நிறைவேற முப்பது மூன்று வருஷங்களாகுமென்று ஹக்ஸ்றபிளுக்குத் தெரிந்திருக்க நியாயமேயில்லை!

அஸ்திபாரமிடும் வைபவம் முடிந்து அனைவரும் கலைந்து சென்றுவிட்டனர். மேகங்கள் உறுமின... இடி... மின்னல்.

பெருமழை சொரிந்தது, பெருவெள்ளம் வந்தது!

[illegible]

[illegible]

[illegible]

1852-ம் வருஷக் கட்டுப்பாட்டத்தில் கிறிஸ்தவர்களை விசுவாச[illegible] உறுதிப்படுத்த ஆலயத்தில் சில முறைகளைக் கையாளுவார் என்று மு[illegible] கூறினோமல்லவா? அம்முயற்சிகளுக்கு நல்ல பலனிருந்தது. இ[illegible] கொள்ளை நோய்க் காலத்தில் அது தெளிவாய்த் தெரிந்தது. பெரு[illegible] இடம்பெற்ற சந்தர்ப்பங்களில் புதுக்கிறிஸ்தவர்கள் பின் வாங்குவ[illegible] ஆனால் இப்பொழுது ஒருவர் கூட விசுவாசத்திலிருந்து மனமாறவி[illegible] மாறாக அவர்களில் காவூரக் கண்டு இறந்த சிலருடைய விசுவாச உறுதி[illegible] [illegible]

கிறிஸ்தவர்களுக்குச் சோதனையாகவும், தங்களு[illegible] ளடகுமாகவுமிருப்பதற்காகக் கஸ்ருக்கை திறக்க முயற்சித்த [illegible] எதிர்த்து அவர்களுடைய முயற்சியைத் தோற்கடித்து அவர்க[illegible] பகையைச் சம்பாதித்துக் கொண்ட யூதக்கிறிஸ்தவன் மாசி[illegible] அவனுக்குக் காவூரா. மானவேலை. பூரண நிச்சயமும் சமாதா[illegible] உடையவனாய்க் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தான். பகைவரும் [illegible]

ந்தினர். வேறு ஒரு ஊரில் மூன்று வாலிபர். ஒருவனுக்குக் காலரா. மரண நேரம் தன் நண்பரின் கைகளைப் பற்றிக் கொண்டு இறுதிவரை விசுவாசத்தை விட்டு விடாதேயுங்கள் என்று கேட்டு கொண்டு முகமலர்ச்சியுடன் மறுமைக்குள்ளானான். இவை ஒன்றிரண்டு உதாரணங்களே.

புதுக்கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமானவுடன் ஹக்ஸ்றபிள் அவர்களுக்கு அச்சாக்கிரமெந்தை நல்கினார். பழைய சபைகளையும் அடிக்கடி சந்தித்து வந்தார். சபையாரிடம் ரொம்ப நெருங்கிப் பழகினார். நல்ல நோக்கத்தோடேயே பழகினாரானாலும் அளவு கடந்த நட்பு பின்னாளில் அவருக்குக் கெட்ட பெயரைச் சம்பாதித்தது.

புளியங்காடு சபையில் தனவந்தரிருவர் **வேதமாணிக்கம்,** வேதமுத்து என்னும் பெயரினர். பெரிய **லேவாதேவிக்காரர்.** ஐயரிடம் அடிக்கடி கைமாற்றாகப் பணம் கேட்டுப் பெறுவர், திருப்பிக் கொடுப்பர். நாளடைவில் பெருந்தொகைகளைக் கேட்டனர். ரசீது கொடுத்தும் கொடாமலும் பெற்றனர். திருப்பிக் கொடுத்தனர். ஐயரும் நம்பி விட்டார். மிஷன் பணத்தையும் கடன் கொடுத்தார். ரசீது வாங்கியும் வாங்காமலும் கொடுத்தார். காலம் கடந்தது. ஐயரும் அம்மாளும் இங்கிலாந்துக்குத் திரும்பிப் போக வேண்டியதாயிற்று. நண்பரிருவரும் ஏமாற்றி விட்டார்கள். ஐயர் போன பின் அந்தப் பணங்களுக்காக மிஷன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க வேண்டியதாயிற்று.

சபைகளின் ஆவிக்குரிய நிலைமையைச் சரியானபடி நிதானித்து அந்தந்தச் சபைகளுக்கேற்ற ஊழியர்களை நியமித்துக் கண்காணித்துக் கொள்வதில் ஐயர் கவனமாயிருந்தார்.

செந்தியம்பலம் சபையில் கள் குடிக்கும் பழக்கம் பெருகிவிட்டது. நெடுநாளாக **ஹக்ஸ்றபிள்** இதைப்பற்றி மிகுந்த கவலை கொண்டார். இறுதியில் ஜெபத்துடன் அவர் எடுத்த முயற்சிகள் பலன் தந்தன. சபையார் கூடி யாரும் இனி கள் குடிப்பதில்லையென்று தங்களுக்குள்ளேயே தீர்மானங்கள் பண்ணிக் கடுமையான சட்டங்களையும், பிரமாணங்களையும் விதித்து,"அவை மீறப்படாதபடி கடந்த ஓராண்டாகக் காத்துக் கொண்டார்கள். ஒருவர் கூட மீறவில்லை" என்றெழுதுகிறார்.

முன்னாள்களிலேயே சில வருஷங்களுக்கு முன் சிலர் கிறிஸ்தவர்களாக மாற முயன்றும் விட்டனர். எதிர்ப்புகளினால் பின்வாங்கினார்கள். கிறிஸ்தவர்களுக்கு இருந்த பல விரோதங்களை எதிர்த்து நிற்பது [illegible]. ஆனாலும் 1893-ல் வருஷம் அக்டோபரில் ஒரு குடும்பம் [illegible] வந்தது. உடனே மற்றவர்கள் [illegible] கிராமத்தின் [illegible] ஒரு கூடாரம் [illegible] உடனே அந்தக் கிறிஸ்தவ குடும்பம் பலவகையாகத் துன்பப்படுத்தப்பட்டது (Persecuted).

ஆனால் அந்தக் குடும்பம் தன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டது. அதன் பயனாக நம்பிக்கையுள்ளவராகக் கிறிஸ்து சபையில் சேர்ந்தார்கள். இப்பொழுது (அதாவது 1898 நவம்பரில்) அங்கு 43 ஆத்துமாக்கள் கொண்ட ஒரு சபையிருக்கிறது. நாங்கள் முதலாவது ஊழியம் துவக்கிய அந்தக் கூடாரம் இருந்த இடத்தில் இப்பொழுது ஜெபவீடு கட்டப்பட்டிருக்கிறது என்று எழுதுகிறார்.

1893-ல் ஆண்டின் முற்பகுதியில் ஹார்ஸ்லியின் ஐயர் இடையன்குளம் என்ற கிராமத்தில் தீவிர ஊழியப் பணி நடத்தும்படி செய்தார். ஏற்கனவே அங்கு ஒரு சிறு சபையிருந்தது. இப்பொழுது நடந்த ஊழியத்தின் விளைவாக 200 பேர் கிறிஸ்தவர்களானார்கள். அவர்கள் தாங்கள் வணங்கி வந்த விக்கிரகங்களிலிருந்த வளாகத்தை (Compound) ஐயருக்குக் கொடுத்தனர். முற்றிலுமிருந்தாலும் ஹார்ஸ்லியின் இடையன் சென்று, அந்த வளாகத்தில், விக்கிரகங்களிருந்த அதே இடத்தில் தன் கூடாரத்தைப் போட்டுத் தங்கினார். இரவில் புதியவர்கள் இருநூறு பேரும் பழைய கிறிஸ்தவர்களும் கூடாரத்துக்கு முன் கூடி ஐயர் ஆராதனை நடத்த அவர்களுக்குப் போதனை கொடுத்தார்.

பின்னால், கூடாரம் போடப்பட்ட அதே இடத்தில் ஒரு குருமனை கட்டி, சில காலம் அந்தச் சபையைக் கண்காணித்துக் கொள்ள அருளப்பர் தாமிது ஐயரை அங்கு இருக்கச் செய்தார்.

சபைகளுக்குள் சமாதானம் நிலவ, ஒழுக்கம் வளர, கிறிஸ்தவ கடமை உணர்வு நிலைபெற, மொத்தத்தில் கிறிஸ்துமார்க்கம் சீரும் சிறப்புமாக வளருவதற்காக சபைகளில் சாதாரணமாகக் காணப்படும் குறை

குற்றங்கள், தவறுகள் மற்றும் மீறுதல்களைக் கண்டிப்பதற்காகவும், தண்டிப்பதற்காகவும், கட்டுப்படுத்துவதற்காகவும் சில வாழ்க்கை விதிகளை (Regulations) உண்டாக்கி, மீறினால் தண்டனை இன்னின்னவென்றும் தீர்மானம் செய்து, அவைகளைச் சபைகளில் பிரசித்தம் பண்ணி ஒப்புதல் பெற்று அமல்படுத்தினார். மீறுதல்களின் தண்டனையை நிறைவேற்றும் அதிகாரமும் பொறுப்பும் அந்தந்தச் சபை உபதேசியார் மற்றும் அச்சபையார் தங்கள் சபையில் தேர்ந்தெடுக்கும் ஒரு தலைவர் ஆகிய இருவருக்கும் உரியது.

நல்ல திட்டம்தான். விளைவும் கொஞ்சக் காலம் நற்பயன்களே. ஆனால் பிற்காலத்தில் உபதேசிமாரின் அதிகாரமும், செல்வாக்கும் அதீத வளர்ச்சியடைந்து, அவர்களில் பலர் குட்டி ஜமீன்தார்களாகி விட்டனர். இது பின்னாளைய மிஷனெரிமார் கருத்து.

திருநெல்வேலி S.P.G. மிஷன் முதல் குருவாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர் **அருளப்பன் தாவீது**, அவருக்கு 1854ல் உதவி குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. அவருடைய ஈராண்டு குரு ஊழியத்தை ஹக்ஸ்றபிள் பெரிதும் பாராட்டி எழுதுகிறார் (1856).

சாயர்புரம் சேகர ஊழியத்துக்கு உதவியாக இருக்க ஒரு நிலைவர நிதி உருவாக்கப்பட வேண்டுமென்பது ஹக்ஸ்றபிளின் நெடுநாளைய ஆசை. அது உருவாகக் கர்த்தர் சித்தங்கொண்டு சபையாரில் சிலரை ஏவினார். ஐயரின் ரிப்போர்ட் ஒன்றில் மிஷனுக்கு ஒன்பது சங்கிலி நிலமொன்றை அன்பளிப்புச் சபையார் (gift) செய்திருக்கிறார்கள். இது சேகரத்தின் நிலைவர நிதிக்கு (Endowment) மூலச் சொத்தாகிறது என்று குறிப்பிடுகிறார். திருநெல்வேலித் திருமண்டலத்தின் சேகரங்களில் நிலைவரச் சொத்து மிகுதியுள்ள சேகரமாக சாயர்புரம் விளங்குவதற்கு வித்திட்டவர் ஹக்ஸ்றபிள் **ஐயரே.**

பள்ளிக்கூடங்களை M.D.C.யின் உதவி பெறாமலே நடத்தி வருகிறேன். அரசு அறிவித்திருக்கிற உதவித் தொகைத் திட்டத்தின் பூரண பலனை வருங்காலத்தில் பெற்று விடுவோம் என்று நம்பிக்கை தெரிவித்தார். வெள்ளம் காலரா இவைகளினால் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளின் வருகை குறைந்து விட்டது. எனினும் காலப்போக்கில் சரியாகி விடும் என்று எண்ணினார் (1855). கிராமப் பள்ளிகளைப் பாலர் வகுப்புக் பள்ளிகளாகவே

விசேஷத் திருப்பணியின் வளர்ச்சிக்கு மிகவும் அனுகூலமாயிருக்கும். ஹக்ஸ்றபிள் 1855-ம் ஆண்டிலெழுதிய இந்த வாசகம் சாயர்புரம் செ.ரபாயெல் **மருத்துவ நிலையத்தின்** (St. Raphael's Hospital) பிறப்பு வரலாறாகும்.

திருநெல்வேலிக்கு வந்த C.M.S., S.P.G. மிஷனெரிமாரனைவரிலும் மருத்துவச் சேவையின் முக்கியத்துதை உணர்ந்து தங்களுக்கிருந்த அற்பமான மருத்துவ அறிவை மிஷனெரிப் பணியில் பயன்படுத்தியவர்கள் **இரேனியஸ்**, மெஞ்ஞானபுரம் **ஜாண் தாமஸ்**, பாளையங்கோட்டை **ஸ்பற்றிட்**, இடையன்குடி **கால்டுவெல்** முதலிய ஒரு சிலர். ஏற்கனவே சிறிது மருத்துவ அறிவு பெற்று மிஷனெரியாக வந்து, தன்னாலான மருத்துவ உதவியாற்றியவர்கள் சுரண்டை **பேரன்புருக்**, நாசரேத் **ஸ்ட்ரான்**. மருத்துவ அறிவை தானே பெற்று மருத்துவம் செய்ய வேண்டுமென்றுணர்ந்து, திரும்பவும் இங்கிலாந்துக்குப் போய் மருத்துவம் படித்துப் பட்டம் பெற்று ஆங்கில மருத்துவமனையொன்றை முறைப்படி நிறுவியவர் **ஸ்ட்ரானே** (Rev. Dr. J. Strachen - St. Luke's Hospital, Nazareth 1870). நாட்டு மருத்துவத்திலே கிறிஸ்தவ மருத்துவ நிலையத்தின் மூலம் வைத்திய உதவி மக்களுக்கு இலவசமாகக் கிடைக்கச் செய்ய முயன்று, அவ்வித நிலையங்களைத் தோற்றுவித்தவர்கள் சாயர்புரம் **ஹக்ஸ்றபிளும்**, சுரண்டை **பேரன்புருக்கும்**, உபதேசிமாரைச் சென்னைக்கு அனுப்பி ஆங்கில மருத்துவ முறைகளைக் கற்கச் செய்ய நடவடிக்கை எடுத்தவர் பாளையங்கோட்டை **சார்ஜென்ற்**. முறைப்படி இங்கிலாந்திலேயே மருத்துவம் கற்று மிஷனெரிகளாக வந்து மருத்துவப் பணியை மருத்துவ நிலையமொன்றில்லாமலே நிறைவேற்றியவர் பன்னைவிளை **ற்றக்கர்**. மருத்துவம் கற்று மருத்து மிஷனெரியாக ஒப்பற்ற பணியாற்றியவர் நாசரேத் **மர்காஷிஸ்** (1876 - 1908).

அரசு மருத்துவ நிலையமொன்றை மிஷன் மையத்தலத்திலேயே நிறுவ முயன்று வெற்றி பெற்றவர். **இடையன்குடி வயட்**. இந்திய கிறிஸ்தவர்களைத் திருநெல்வேலியிலே மேனாட்டு மருத்துவ முறையில் பொது கல்வி நிலையங்களிலேயே மருத்துவர்களாகவும், உதவியாளர்களாகவும், நர்ஸ்களாகவும் பயிற்றுவிக்க வேண்டுமென்று ஆசித்தவர்கள் சாயர்புரம் **ஹக்ஸ்றபிளும்**, பாளையங்கோட்டை **ஜேன்**

ஆன் ஆஸ்க்வித் அம்மாளுமே. அன்றைய M.D.C.யும், S.P.G.யு
ஹக்ஸ்றபிளோடும், அந்நாளைய M.C.C.யும், C.M.S.ம் கெம்ப
உவாக்கர், கார் போன்ற நெல்லை C.M.S. மிஷனெரித் தலைவர்களு
ஆஸ்க்வித் அம்மாளோடும் ஒத்துழைத்திருந்தால் சாயர்பு
ஸ்தாபனத்துடனும் சாராள் ற்றக்கர் ஸ்தாபனத்தோடு இணைந்த ஆண்க
பெண்கள் மருத்துவப் பள்ளிகள் அந்நாளிலேயே தோன்றி, இன்
இருபெரும் மிஷனெரிக் கல்லூரிகளாக வளர்ந்திருக்கலாம், ஹக்ஸ்றபிளி
ஆசை பற்றி M.D.C.யும் S.P.G-யும் சிந்திக்கவேயில்லை
பாளையங்கோட்டையிலோ மற்ற மிஷனெரிமாரும் M.C.C.யும் காட்டி
எதிர்ப்பை ஏற்ற C.M.S.(தாய்க் கமிற்றி) ஆஸ்க்வித் துவக்கியிருந்த நர்
வகுப்பை (Nursing Classes) மூடிவிடும்படி கேட்டுக் கொண்ட
நிற்க செமினெரி மாணவரில் ஆங்கில மொழி அறி
குன்றியிருந்ததைக் கண்ட ஐயர், அதை விருத்தி செய்ய
தேவையான நடவடிக்கையெடுத்தபின், விரைவான முன்னேற்ற
காண்கிறேன் என்றெழுதுகிறார்.

செமினெரியுடனிணைந்த கைத்தொழில் பயிற்சி பள்ளியொன்
ஹக்ஸ்றபிள் நடத்தி வந்தார். முதலூரிலும் அங்குள்ள மிஷனெரி ஒ
கைத்தொழில்பள்ளி நடத்தினர். அதில் புஸ்தகம் கடடும் இயந்திரம் ஒன்
இருந்தது. ஏதோ காரணத்தால் அந்தத் தொழில் அங்கு நிறுத்தப்பட
அந்த இயந்திரத்தை ஹக்ஸ்றபிள் சாயர்புரம் கைத்தொழிற்பள்ளிக்க
முதலூர் மிஷனெரியிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

தவிர செமினெரியில் கடைசி வருஷ மாணவர்களுக்காக (Final Ye
Students) ஆசிரியப் பயிற்சி வகுப்பொன்றையும் (School - Mate
இணைத்தார் (1853). அதில் கற்பிக்கும் முறை பள்ளிக்கூட நிர்வாக
ஒழுக்கம், பயிற்சி, பள்ளி அமைப்பு போன்ற ஆசிரியப் பயிற்சிப் பாடங்
போதிக்கப்பட்டன.

செமினெரியென்ற அந்த ஸ்தாபனம் இரண்டு பிரிவுகளையுடைய
முதல் பிரிவில் முன்னால் சொல்லப்பட்ட அந்த இரண்டு பள்ளிகளிலும் ம
சேகரங்களிலிருந்து மிஷனெரிகளால் அனுப்பப்படும் மாணவர்
மூன்றாண்டுகள் கற்பர். கற்பது பள்ளிப் பாடங்கள், இரண்டாவது பிரி
ஆங்கிலத்தில் உபதேசிமாருக்குரிய பாடங்கள் கற்பிக்கப்பட்ட

மிஷனெரிப் பள்ளியில் படித்த, தெரிந்து கொள்ளப்பட்ட மாணவர்களும் இடையன்குடி முதலூர் நாசரேத் மற்றும் கிறிஸ்தியாநகரம் போர்டிங் பள்ளியில் படித்து மிஷனெரிமாரால் பரிந்துரைக்கப்பட்டவர்களே சேர்க்கப்படுவர். மாணவரனைவரும் S.P.G. யினாலும் S.P.C.K.யாலும் ஆதரிக்கப்பட்டார்கள். 1855-ல் S.P.C.K.யின் ஆதரவு நின்று விட்டது. மாணவரின் தொகையும் 53 ஆகக் குறைக்கப்பட்டது.

ஆசிரியர்கள் **ஹக்ஸ்றபிள், லீப்பர், கிருஷ்ணப்பிள்ளை** மேலும் மூன்று இந்திய கிறிஸ்தவ ஆசிரியர்கள். ஒரு தடவை ஹக்ஸ்றபிள் ஐயர் கிருஷ்ணப்பிள்ளையிடம் சுவிசேஷம் கூறத் தொடங்கவே அவர் கோபித்துக் கொண்டு வேலையை விட்டு விட்டார். பின்னாளில் அவர் கிறிஸ்துவின் அடியாரான போது ஹக்ஸ்றபிளின் முதற்பெயரான 'ஹென்றி' யையே தன் முதற்பெயராக்கி கொண்டார்.

மிஷனெரி ஊழியம் நன்கு நடந்து கொண்டிருக்கும் பொழுது அதற்கு ஒரு பயங்கரமான விபத்து நேரிட்டது.

அருளப்பன் **தாவீது ஐயர்** ஒரு நாள் ஓர் அருளுரையில் **நாடார்** குலத்தினரை மனவேதனைக்குள்ளாக்கும் ஏதோ சில வார்த்தைகளைச் சொல்லி விட்டார். இது அம்மக்களைப் புண்படுத்தி விட்டது. பெரிய சபையாகிய **செபத்தையாபுரத்திலும்,** அருகில் **நடுவக்குறிச்சி,** புளியங்காடு சபைகளில் சிலர் ஆராதனைகளைப் புறக்கணித்தனர். பெரிய தனவந்தரான புளியங்காடு **மிராசுதார் வேதமாணிக்கம்,** அவருடைய உறவினரான **வேதமாணிக்க உபதேசியார்.** மற்றொரு செல்வந்தரான **வேதமுத்து.** மேலும் பலருடைய தூண்டுதலினால் மேலும் பலர் அவர்களைப் பின்பற்றினர். இரவு தோறும் அந்தக் கிராமங்களில் பொதுக் கூட்டங்கள் கூட்டித் தலைவர்கள் பேசினார்கள். சமாதானம் பண்ண மிஷனெரிமார் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இந்த விஷயத்தில் எவ்வளவோ பொறுமையுடனும், நிதானத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறியாதவரல்ல **ஹக்ஸ்றபிள்.** ஆனாலும் ஏனோ எப்படியோ பொறுமையிழந்தார். ஸ்ரீவைகுண்டம் தாசில்தாரிடம் இரவுக் கூட்டங்களைப் பற்றிப் பிராது செய்தார். அவர் வந்து வேதமாணிக்கம் மிராசுதார், வேதமுத்து மற்றும் மேலும் சிலரைக் கைது செய்து அடைத்து வைத்து விட்டார். இதற்குள் விஷயம் சென்னை அத்தியட்சருக்கு எட்டி அவர்

அருளப்பன் தாவீது ஐயர் வெளிப்படையாக (in public) மன்னிப்புக் கே…
வேண்டுமென்று கட்டளையிட தாவீது ஐயரும் ஆயத்தமானார். ஹக்ஸ்ற…
தாவீதுக்கு எழுதிக் கைதானவர்களை விடுவித்தார். தாவீதும் மன்னி…
கேட்டார். ஆயினும் தங்கள் தலைவர்களைச் சிறையிலடைத்த…
ஜனங்களால் சகித்துக் கொள்ள இயலவில்லை. தலைவர்க…
தூண்டுதலும் நிற்கவில்லை. மேற்சொன்ன மூன்று சபைகளிலும், வே…
சிலவற்றிலுமிருந்து 1000 பேருக்கு அதிகமானவர்கள் சபையை வி…
பிரிந்தார்கள். மெஞ்ஞானபுரத்தில் துவக்கத்தில் 250 பேர் பிரிந்தார்…
பின்னால் மேலும் பலர்.

அந்த நிலையில் ஹக்ஸ்றபின் ஐயரும், அவருடைய மனைவி…
உடல்நலம் குன்றி, விடுப்பில் இங்கிலாந்துக்குத் திரும்பினர். 18…
இறுதியில் அவர் போகும் முன் எழுதி வைத்த சேகரக் கணக்கு பின்வரு…
சேகர பரப்பு 65 சதுர மைல், ஜனத்தொகை 15,000, அதில் இந்து 10,…
ரோமானித்தர் 2,100, சுவிசேஷச் சபை (S.P.G) 2,098, முஸ்லீம் 500, …
சபையார் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 761, பெறாதவர்கள் 1,3…
நற்கருணைக்காரர் 143, சபைகள்: சாயர்புரம் 130, மெஞ்ஞானபுரம் 3…
புளியங்காடு 140, நடுவக்குறிச்சி 117, நெந்திப்பலம் 73, சுப்பிரமணிய…
152, இடையர்காடு 111, செட்டிகுளம் 35, முன்னான்விளை 43, குமா…
16, காயல் 10, பிரிவினைக்காரர் 918, ஞாயிறு காணிக்கை ரூ. 36…
ஏழைகள், வியாதியஸ்தர் பராமரிப்புக்கு ரூ. 196.0.1, பள்ளிக்கூடங்கள்…
கிராமங்களில் 7, செமினெரி 1, படிக்கும் பிள்ளைகள் ஆண்கள் …
பெண்கள் 49, ஞாயிறு பள்ளிகளில் படிக்கும் பெரியவர்கள் : ஆண்கள் …
பெண்கள் 175, ஹக்ஸ்றபின் ஐயரின் மாதச் சம்பளம் ரூ.275.80

இங்கிலாந்தில் பத்து வருஷங்கள் (1857 - 1867) பல சபைக…
குருத்துவ ஊழியம் செய்த பின் ஹக்ஸ்றபின் மொரிஷியஸ் தீவுக்…
மிஷனெரியாகச் சென்றார் (1867). அங்கு 1870 நவம்பர் 30-ம் …
அத்தீவின் அத்தியட்சராக அபிஷேகம் பெற்றார். மறுவருஷம் ஜூன் …
நாளில் 46 வயதுடையவராய் மறுமைக்குட்பட்டு, இளைப்பாறுத…
பிரவேசித்தார்.

14

சாமுவேல் வில்லியம் கோல்ற்ரூப் ஐயர் (S.P.G)
1851 - 1852

சாமுவேல் வில்லியம் கோல்ற்ரூப் ஐயர் (Rev. Samuel William Coultrup) இந்தியாவில் பிறந்த ஆங்கிலோ இந்தியர். பிறந்த ஊர் வருஷம் தெரியவில்லை. 1844-ல் உதவிக் குருவாகவும், 1847-ல் குருவாகவும் சென்னை அத்தியட்சரிடத்தில் அபிஷேகம் பெற்ற இவர் 1844 முதல் 1850-க்குள் **பெங்களூர், நாகப்பட்டிணம், ஆனைக்காடு, சித்தூர்,** வேலூர் என்ற ஐந்து இடங்களில் S.P.G. மிஷனெரியாகப் பணியாற்றினார். M.D.C. மிஷனெரிகளை எப்படிப் பந்தாட்டம் ஆடினதென்பதற்கு கோல்ற்ரூப் பின் வரலாறு ஒரு நல்ல உதாரணம்.

அடிக்கடி வயிற்றுக் கடுப்பினால் அவதிப்பட்ட, இடையன்குடி மிஷனெரி ராபர்ட் **கால்டுவெல் ஐயர்** 1851-ம் ஆண்டில் மருத்துவ விடுப்பில் உதகமண்டலத்துக்குப் போய்ச் சிகிச்சை பெற வேண்டியதாயிற்று. அவருக்குப் பதிலாக **இடையன்குடி** சேகர மிஷனெரிப் பணிக்கு, M.D.C. வேலூரிலிருந்து **கோல்ற்ரூப்பை** இடையன்குடிக்கு மாற்றினது.

இடையன்குடியில் கோல்ற்ரூப் ஐயர் ஓராண்டுக்குக் குறைவாகவே ஊழியம் செய்தார்.

1852 பெப்ருவரியில், கால்டுவெல் நற்சுகம் பெற்று இடையன்குடிக்கு திரும்பவே, **கோல்ற்ரூப் சென்னைக்கு** மாற்றப்பட்டார்.

இடையன்குடியில் அவர் ஆற்றிய பணிபற்றிய குறிப்புகளெவையும் அவர் எழுதி வைத்ததாகத் தெரியவில்லை.

சென்னையில் 12 ஆண்டுகளும் தரங்கம்பாடியில் 3 ஆண்டுகளும் ஊழியம் செய்து 1867-ல் ஓய்வெடுத்து 1874-ல் நித்ய வாழ்வடைந்தார்.

15

சார்ள்ஸ் எக்பெர்ட் கென்னெட் ஐயர் D.D. (Lon) (S.P.G.) 1852 - 1865

சார்ள்ஸ் எக்பெர்ட் கென்னெட் ஐயர் (Rev. Charles Egbert Kenne ஓர் ஆங்கிலோ இந்தியர். 1826-ம் ஆண்டு செப்டம்பர் 21-ம் நாளி பிறந்தார். பள்ளிப் படிப்பு முடித்து மிஷனெரி ஊழியராக S.P.G.யினா ஏற்றுக் கொள்ளப்பட்டு, அச்சங்கத்தார் சென்னையில் **சல்லிவ** தோட்டத்தில் நடத்தி வந்த இறையியல் பள்ளியில் கற்றபின் M.D.C.யினா **முதலூரில்** மிஷனெரி உபதேசியராக நியமிக்கப்பட்டார் (1849 அப்பொழுது அவருக்கு வயது 22. **ஃப்ராங்ளின் ஐயர்** அந்நாட்களி முதலூரில் மிஷனெரியாயிருந்தார்.

முதலூர் :

ஓர் உபதேசியாராக மட்டுமே இருந்தாலும் சேகரம் முழுவதையும் பற்றி பொறுப்பு உடையவராக அவர் செயல்பட்டார். அவர் **முதலூர் சேகர சம சகாயச் சங்கம்** என்ற (Friend - in Need Society) ஒரு சங்கத்தை நிறுவினா இது C.M.S.ல் வழங்கி வந்த தர்ம சகாய நிதிச் சங்கத்தைப் போன்றது சேகரத்தில் ஒவ்வொரு குடும்பமும் ஒரு சிறு தொகை கொடுக்க வேண்டு அந்த நிதியிலிருந்து. கிறிஸ்தவர்களானதினிமித்தம் புறமதத்தினரா கொடிய துன்பங்களை அனுபவித்த புதுக் கிறிஸ்தவர்களுக்கு உதவவு தேவையானால் குடியேற்ற நிலங்கள் வாங்கவும் ஏற்படுத்தினார். ஆகவே துவக்கத்திலிருந்தே அவருடைய திறமை வெளிப்பட்டது.

1851 பெப்ரவரி 2-ம் தேதி சென்னை அத்தியட்சர் பாளையங்கோட் பரிசுத்த திரித்துவ தேவாலயத்தில் **கென்னெற்றுக்கு** உதவிக்குருப்பட் கொடுத்தார். பின்னும் ஓராண்டு முதலூரிலேயே தொடர்ந்து பணியாற்றி **கென்னட் ஃப்ராங்க்ளின்** மாற்றப்பட்ட பின் **முதலூர் மிஷனெரியானா** இடையன்குடி **கால்டுவெல் ஐயர்** இவருக்கு மேலாளராக நியமிக்கப்பட் 1852 முதல் 1855 வரை கென்னட் முதலூர் சேகர மிஷனெரியாயிருந்த

முதலூர் சேகரத்தில் ஒரு கிராமத்தில் **கம்மாள ஜாதியினர்** அதிக அவ்வூரில் **கென்னெட்** சுவிசேஷம் கூறி வந்தார். கம்மாளரில் பல

கர்த்தரை ஏற்றுக் கொண்டனரென்றாலும் அவர்கள் அப்படிச் செய்தது முற்றிலும் உலக வாழ்வு பற்றியதே ஆகையால் விரைவில் பின் வாங்கி விட்டனர். **வேலாயுத ஆசாரி** என்ற வாலிபனொருவன் மட்டும் மெய் விசுவாசியாகி **கால்டுவெல் ஐயரிடம் தீமோத்தேயு** என்ற பெயருடன் ஞானஸ்நானம் பெற்றான் (1853). தன் குலத்தினரில் அவர் முதற்கனியானார்.

இடையன்குடி :

1855-ல் இடையன்குடிக்கு மாற்றப்பட்டார். அங்கு **செல்லெர், பெர்னிவல்** என்று இரு ஐரோப்பிய உபதேசிமார் ஏற்கனவே கால்டுவெல்லுக்கு உதவியாயிருந்தனர். இப்பொழுது கால்டுவெல் மூன்றாண்டு விடுப்பில் சென்ற காலத்திலும் அவர்கள் தொடர்ந்து கென்னெற்றக்குக் கீழ் பணியாற்றி வந்தார்கள்.

1855-ல் இடையன்குடி சேகரக் கிறிஸ்தவர்கள் 2409 ஞானஸ்நானம் பெற்றவர்கள் 1661, ஞானஸ்நானம் பெறாத கிறிஸ்தவர்கள் 748, சபை வருமானம் ரூ. 548.9.8 இதில் ரூ. 200 M.D.C.கழகத்துக்கு நன்கொடையாக அனுப்பப்பட்டது. S.P.G. அனுப்பின பணத்திலிருந்து தான் உபதேசிமாருக்கு M.D.C. சம்பளம் கொடுத்து வந்தது. இப்படி ஒரு தொகையை M.D.C.க்கு அனுப்புவதால் S.P.G. சங்கத்துக்கு உதவி செய்வதாகும். எனவேஇடையன்குடியைப் பின்பற்றி ஒவ்வொரு S.P.G. சேகரமும் M.D.C.க்கு நன்கொடைகள் அனுப்பி S.P.G.யின் பாரத்தைச் சற்றுக் குறைக்க முன்வந்தன. அது S.P.G.என்ற தாய்ச் சங்கத்துக்கு உதவியென்பதினால் அதற்கு **"சங்கப் பணம்"** என்பது "S.P.G. சங்கத்துக்கு (உதவும்) பணம்" என்று பொருள்படும். ஆனாலும் C.M.S. பகுதியில் சேகரங்களில் நிறுவப்பட்ட "சேகரச் சங்கம்" அதாவது 'கழகத்'துக்கு கொடுக்கப்படும் 'சங்கப் பணம்' இதில் 'சங்கம்' என்பது C.M.S.என்ற சங்கம் அல்ல. ஆனால் சபையார் தெரிந்தெடுத்து நியமித்த 'சேகரச் சங்கம்' அல்லது கழகம் அல்லது கமிற்றி. இந்தக் கமிற்றி அல்லது சங்கம். சேகர நிர்வாகத்தில் மிஷனெரிக்கு உதவியாயிருக்கப் பொருள் சேகரிக்க சபையாரால் நியமிக்கப்பட்ட சங்கம். இச்சங்கத்துக்குக் கொடுக்கப்படும் பணம் 'சங்கப் பணம்' என்ற சொல்லால் குறிக்கப்பட்டது. இரண்டு 'சங்கப் பண'ங்களுக்குமுள்ள வித்தியாசம் S.P.G.யில் சங்கப்பணம்

S.P.G.க்குரியது. ஆனால் C.M.S-ல் சங்கப் பணம் சேகரத்தில் தேவைகளுக்காக தலத்தில் நிறுவப்பட்ட 'தலச் சங்க'த்துக்கு (Local Committee) உரிய சங்கப் பணம் இந்த 'தலக்கமிற்றி'யே பிற்காலத்தில் தோன்றி சர்க்கிள் கமிற்றியின் முன்னோடியாம்.

இரண்டிலுமே 'சங்கப் பணம்' சுயாதரவு வளர்ச்சியில் முதல் திட்டமாகவும் கூட்டமாகவும் அமைந்தது.

இடையன்குடி சேகரத்தில் சபைகள் 30, சேகரச் சபைகளை மேற்பார்வையிடுவதிலும் கண்காணிப்பதிலும் **செல்லெர்** வெகு உதவியாயிருந்தார். **பெர்னிவல்** கட்டிடம் கட்டும் கலையில் கை தேர்ந்தவர். இடையன்குடி சேகரத்தில் அவர் உபதேசியாயிருந்த பொழுது பல கட்டிடங்களையும், சில ஆலயங்களையும் கட்டினார். ஆனைகுடி ஆலயத்தை இரண்டாண்டுகளாகக் கட்டி வந்தார். 1855-ம் ஆண்டில் கட்டுமானம் முடிந்தது. **கென்னெட் ஐயர்** அதை பிரதிஷ்டை செய்தார். பெர்னிவல் பிளான் போட்டு அதின்படியே கட்டப்பட்ட புகழ்மிக்க ஆலயம் சாயர்புரம் **தேவாலயமாகும்**.

இடையன்குடி சேகர உபதேசிமாருக்கு மாத ஊதியம் கொடுத்து வருகிற "M.D.C. யின் நிதிக்கு ஆதரவாக" என்ற தலைப்பில் அனுப்பப்பட்ட அந்த பணமான ரூ. 200 ஐ பற்றிப் பேசும் **கென்னெட்** நாளடைவில் உபதேசிமாரின் சம்பளத்தில் மூன்றில் இரண்டு பங்கைச் சபையாரே கொடுத்துவிடக்கூடும் என்று கருத்துத் தெரிவித்தார். மேலும் அதே 1855-ம் வருஷ ஆண்டறிக்கையில் ஞாயிறு ஆராதனைக் காணிக்கை அவ்வாண்டில் ரூ.161.5.4 என்றும், அதில் ரூ.13.3.0 '**நற்கருணைக்காரரில் ஏழைகளானவர்களுக்குச் செலவிடப்பட்டது**' என்றும் எழுதியிருக்கிறார்.

கிறிஸ்தியாநகரம் :

கால்டுவெல் விடுப்பிலிருந்து திரும்பியபின், **கென்னெட் ஐயர்** கிறிஸ்தியாநகரம் மிஷனெரியாக நியமிக்கப்பட்டு, 1865 வரை ஊழியம் செய்தார் (1856 ஆகஸ்ட் - 1865).

சேகரத்தில் 'சபைகள்' என்று கருதப்படக்கூடியவை ஏழுதான். மற்றவை மிகவும் சிறியவை. கென்னெட் அவைகளைப் பற்றி 1857 ஜூன் 30-ம் தேதி எழுதின ரிப்போர்ட்டிலிருந்து சில குறிப்புகள் தருவோம்.

...ஸ்தியாநகரம் : சபை மக்கள் 300 பேர், முதியோர் கல்வித் ...த்தில் பெண்களில் 28 பேர். கென்னெற்றின் மனைவியினிடத்தில் ...தார்கள். அந்த அம்மாள் அவர்களுக்கு ஞாயிறு, புதன்கிழமைகளில் ...பாடமும், சுருக்க ஜெப விளக்கமும் கற்றுக் கொடுத்தார். ஆண்களில் ...யோர் வகுப்புக்கு வருபவர்கள் வெகு சிலர். அவர்களும் ஒழுங்காக ...வதுமில்லை. கிறிஸ்தியாநகரம் ஆண்கள் போர்டிங் பிள்ளைகள் ...றே ஆறு பேர்தான். பெண்கள் போர்டிங் பிள்ளைகள் பத்து பேர். ...வாலயததில் அணையா விளக்கு இரவு முழுவதும் எரிய வேண்டுமென்ற ...ணம் இங்குள்ளவர்களைப் பலமாய் ஆக்கிரமித்திருக்கிறது. இது ஓர் ...ஞான மூட நம்பிக்கை. இதை எதிர்க்க வேண்டும்.

...க்கூர், மங்களபுரம் : இந்த இரண்டு சபைகளுக்கும் இடையில், ...சேகரப்பட்டிணத்தின் நடுவில் ஒரு இந்திய குருவானவர் வசிப்பது ...சியம் என்று தீர்மானம் பண்ணி M.D.C.க்கும், சென்னை பிஷப்புக்கும் ...ண்ணப்பித்து அனுமதி பெற்றாரெனினும் அதற்கென்று நியமிக்கப்பட்ட ...னமுத்து ஐயர் கிறிஸ்தியாநகரத்தில் தான் வசித்தார். அதுவும் ஒரே ...ருஷம் தான் (1857 - 1859).

...ங்கநகரம் : சபையை கென்னெட் அதிகமாக நேசித்தார். ...ரத்துக்கொருமுறை அச்சபையைச் சந்தித்து வந்தார். நல்ல ஒழுக்கமான ...பை. பள்ளிக்கூடம் நல்ல நிலைமையிலிருந்து வந்தது. கொட்டங்காடு ...பதேசியார் அதின் ஆசிரியர்.

...கோர்கிபுரம் : பனங்காடுகளுக்குள் ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் ...ழும் சபை.

...கொட்டங்காடு : ரொம்ப ஏழைகள் - அமைதியான மனுஷர் - வம்பு ...ம்புக்குப் போகிறவர்களல்ல - கற்றுக் கொடுப்பதைக் கவனிக்கிற ...ப்படிதலுள்ள மனுஷர். "என் மனைவிக்கு இச்சபை பெண்கள் மேல் ...ரொம்பப் பிரியம். ஏனென்றால் அப்பெண்கள் எளிய சுவாபமுள்ளவர்கள், ...த்தமாயிருப்பவர்கள்" என்று ஐயர் எழுதுகிறார்.

...சத்திரபுரம் : ஒரு மிஷன் கிராமம்.

கென்னெட் ஐயரின் நாட்குறிப்புகளிலிருந்து சில செய்திகளையும் ...ண்போம்.

5 செப்டம்பர் 1856 [illegible]

1. யாத்திராகமம் 1-ம் அதிகாரத்தில் [illegible] அதிகாரத்தில் [illegible] சொல்லவில்லை. அவர்களுக்கு [illegible] இருக்கும் [illegible] வாசிக்கிறோம். இதைப்பற்றி நாம் [illegible] என்னுவது?

2. மோசேக்கு 'பெண் கொடுத்த' மாமனார் யார்? அவனுடைய [illegible] சரித்திரத்தைப் பற்றி வேதாகமத்தின் பிற பகுதிகளில் நாம் அறிவது என்ன?

3. லேவி. 7:37 இல் சொல்லப்பட்டுள்ள பலிகளை வித்தியாசப்படுத்தி [illegible] பயன்பாட்டையும் பற்றி எழுதுக.

4. கிதியோனின் வரலாற்றைக் கூறி, அவனுக்கும் அவனுடைய குடும்பத்துக்கும் கண்ணியாயமைந்த அவனுடைய கடைசிச் செயலிலிருந்து நமக்குக் கிடைக்கும் படிப்பினையை வெளிக்கொணர்க.

5. மத்.2-ல் 'அவர் நசரேயனென்னப்படுவார்' விளக்குக. எந்த தீர்க்கதரிசனத்திலிருந்து இது எடுக்கப்பட்டிருக்கிறது.

6. உயிரோடெழுப்பப்பட்டவர்கள் 1. பழையேற்பாட்டில் 2. சுவிசேஷங்களில், 3. புதியேற்பாட்டின் பிற ஆகமங்களில் யார், யார்?

7. யோவான், தன் சுவிசேஷத்தில் கர்த்தருடைய பரமேறுதலைப் பற்றிச் சொல்லாவிட்டாலும், எவ்வெவ்வ வார்த்தைகளில் அச்சம்பவத்தைக் குறிக்கிறார்?

8. யோவான் 15:26ல் திரித்துவக் கொள்கையை [illegible] ருடைாறப்படுத்துவதற்கு கிடைக்கும் குறிப்புகளெவை?

21 செப்டம்பர் 1856 மங்களபுரம் : ஆராதனை, ஆண்கள் [illegible] பெண்கள் 37. ஆராதனை முடிந்தபின் ஆலயக் கட்டுமானத்துக்கு ரூ.5[illegible] கையார் கொடுத்தார்கள்.

29 செப்டம்பர் 1856 **கிறிஸ்தியாநகரம்** சேகரச் சங்கக் கூட்டம் - லூர் மிஷனெரி **ஸ்யூட்டர் ஐயரும்,** கடாட்சபுரம் மிஷனெரி வசகாயம் **ஐயரும்** பங்கெடுத்தனர். பெருங்கூட்டம் சபையார் மிகுந்த தோஷம் காணிக்கை ரூ.115.

30 ஜுலை 1857 **வடக்கூர் ஆலயம்** கட்டுமானம் முடியும் தருணம். லயக் கூரையில் கிராதியறைக்கு மேலே சிலுவை வைக்கத் திட்டம். றிஸ்தியாநகரம் ஆலயம் கட்டும் போது சாந்து அரைக்க கல் பயன்படுத்த பக்கம் கிடந்தது அதை சிலுவையாக உருமாற்றும் போது ஒரு காலத்தில் து ஒரு விக்கிரகமாயிருந்தது தேய்ந்து போன கல்லெனத் தெரிந்தது. சிலுவையே தேவலாயத்தின் முகட்டில் வைக்கப்பட்டது.

1857-ம் ஆண்டு டிசம்பர் 31-ல் எழுதிய ரிப்போர்ட்டில் **கென்னெட்** தரும் செய்திகள்.

மங்களபுரத்தில் : பெண்கள் மிஷன் பள்ளியை நிறுவினார். பெண் வியை சபையாரில் பலர் எதிர்த்தனர். ஆனாலும் **கென்னெட்** ங்கொடுக்கவில்லை.

சேகரச் **சபையார் :**

ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஆண்கள் 291, பெண்கள் 304, பிள்ளைகள் 504 மொத்தம் - 1099

ஞானஸ்நானம் பெறாதவர்கள் ஆண்கள் 94, பெண்கள் 115, பிள்ளைகள் 169 மொத்தம் - 378

கிறிஸ்தியாநகரத்தில் ஞாயிறு ஆராதனை ஆண்கள் 97, பெண்கள் 87, பிள்ளைகள் 56 மொத்தம் - 240

சேகரப்பள்ளிகள் : பகல் நேர ஆண்கள் பள்ளிகள் 7, பகல் நேர பெண்கள் பள்ளிகள் 2, போர்டிங் பள்ளிகள் ஆண்கள் - 1, பெண்கள் - 1. அந்தக் காலத்தில் S.P.G. சங்கத்தார் ஐரோப்பியரையும், யூரேஷியன்கள் என்றறியப்பட்ட ஆங்கிலோ இந்தியரையும் தங்கள் மிஷனெரிகளாக நியமித்திருந்தனர். ஆனால் அவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுப்பதில் ஐரோப்பியருக்கும், யூரேஷியருக்குமிடையில் பெரிய வித்தியாசம் காண்பித்தார்கள். இதை யூரேஷிய மிஷனெரிமார் யாரும் எதிர்த்ததில்லை.

எதிர்க்கத் துணிவுமில்லை. நாமறிந்தமட்டில் **கென்னெட் ஐயர்** தான் இ... பற்றி விமர்சித்து, இதை எதிர்க்காவிட்டாலும், துணிவுடன் சுட்டிக் காட்ட... செய்தார். ஐரோப்பியருக்கும், யூரேஷியருக்கும் சம்பள விஷயத்தில் ரூ. ... லிருந்து ரூ. 120, 130க்கு அதிகமான வித்தியாசமிருந்தது. அ... எழுதுகிறார். என் உத்தியோகத்துக்காக நான் பெறும் மாதச் சம்பளம் ரூ... தான். குதிரைச் செலவுக்காக ரூ.10.8.0 ஒவ்வொரு மாதமும் தூரப்படுகி... எனக்கு ஒன்றும் வேண்டாம். ஆனால் நான் என்ன விகிதத்தில் சம்ப... கொடுக்கிறேன் என்பதை "தாய் கமிற்றிக்கு நான் தெரியப்படுத்துவது த... நியாயம். என்னுடைய பிஷப்பின் கண்களிலும் கமிற்றியினர் (M.D... கண்களிலும் என்னுடைய கல்வியறிவும் என்னுடைய தாலந்துகளும், க... இந்த ஒரு வருஷமாக நான் செய்து வருகிறபடி மூன்று சேகரங்க... (Districts) பொறுப்பை ஏற்கக் கூடியவன் என்று என்னை நோக்கச் செய்... காரணங்களாயிருக்கின்றன. ஆயினும் நான் ஓர் ஆங்கி... இந்தியனாயிருப்பதினால் திருநெல்வேலியிலேயே குறைந்த சம்ப... வாங்குகிறவன் நான் தான். இடையன்குடியிலும், முதலூரிலும் எனக்குக்... குருத்துவப் பணி செய்து வந்தவர்கள் என்னைவிட அதிகச் சம்ப... வாங்கியிருக்கிறார்கள். இது வெறுக்கப்படத்தக்க பாகுபாடு என்று என்ன... எண்ணாமலிருக்க முடியவில்லை. மிஷன் நிறுவனமொன்றில் இது இருக்... கூடாது".

இந்தக் கடிதத்தில் எந்த 'ஜாதிப்' பாகுபாட்டை கென்னெட் எதிர்த்தா... அதைப்பற்றி S.P.G. கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. வழக்கம... வருடாந்தரச் சம்பளஅதிகரிப்புடன் (increment) மனைவிக்காகவென்று (W... Allowance) ரூ. 25 மட்டும் கூட்டினர். இது **கென்னெற்று...** விசனமாயிருந்தது. ஆனாலும் விரைவில் அதை மறந்தார்.

கால்டுவெல் ஐயர் விடுப்பிலிருந்த காலத்தில், **கென்னெ...** இடையன்குடி மிஷனெரியாயிருந்தபோது, அச்சேகர எல்லைக்... சுவிசேஷம் சரியாக வேரூன்றாத பகுதிகளில் தீவிர சுவிசேஷப் ப... நிறைவேற என்ன செய்வதென்று அச்சேகர உபதேசிமாரு... ஆலோசித்தார். அவர்கள் தாங்கள் பொதுச் சங்க பணமாகக் கொடு... பணத்தை பிரித்தெடுத்து, அதைக் கொண்டு, அப்பகுதியில் சுவி... ஊழியம் செய்ய ஒரு உபதேசியாரை நியமிக்க வேண்டுமெ...

ஆலோசனை கொடுத்தனர். அவ்வாலோசனையை கென்னெட் உடனே நடைமுறைப்படுத்தினார்.

கிறிஸ்தியாநகரத்திலும் அம்முறையைச் சிறிய அளவிலாவது கடைப்பிடிக்கலாமாவென்று சிந்தித்த ஐயர் இது சிறு சேகரமாயிருந்ததினால் அவ்வெண்ணத்தைக் கைவிட்டு, வேறொரு திட்டம் வகுத்தார். அருகருகிலிருக்கும் இரண்டு உபதேசிமார் புதன்கிழமை அவரிலொருவருடைய ஊர் ஆலயத்தில் கூடி ஜெபித்து விட்டு அப்பகுதியிலுள்ள கிராமங்களில் சுவிசேஷம் கூற வேண்டும். அடுத்த புதன்கிழமை இவருடைய ஊருக்கு அவர் வரவேண்டும். இவ்விதமாய் சேகரத்தின் எட்டு உபதேசிமாரும் இரண்டிரண்டு பேராகச் செய்யும் ஊழியத்தைப் பற்றிய அறிக்கையை, சனிக்கிழமைதோறும் கிறிஸ்தியாநகரத்தில் உபதேசியார் கூடும் வாராந்தரக் கூட்டங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என்று திட்டம் செய்தார்.

இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டது. "மிகுந்த ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் இந்த வேலை நடந்து வருகிறது" என்று கென்னெட் எழுதுகிறார் (6.1.1959).

ஜனவரி 26-ம் நாள் (1859) எழுதிய ஒரு ரிப்போர்ட்டில் சேகரப்பட்டிணத்தில் ஒரு தாலுகாப் பள்ளியை (Taulk School) S.P.G. சங்கத்தின் சார்பில் திறக்க வேண்டும் என்ற தன்னுடைய வாஞ்சையைத் தெரிவிக்கிறார். தாலுகாப் பள்ளியென்பது தமிழுடன் ஆங்கிலமும் கற்பிக்கின்ற ஆங்கிலோ – வெர்னாக்குலர் பள்ளியாகும்.

16

ஷ்னார் அம்மாள் (C.M.S.)

ரேனியஸ் ஐயர் C.M.S. மிஷனெரியாக இந்தியாவுக்கு வந்து சென்னையில் மிஷனெரிப் பணியைத் துவக்கி நடத்திய காலம், அவருடன் வந்து, அவருக்கு உதவியாயிருந்தவர் **ஷ்னார் ஐயர்** (1814). ரேனியஸை போல அவரும் ஒரு ஜெர்மானியரே. இருவரும் சம வயதுடையவர்கள். ரேனியஸ் 1820-ல் திருநெல்வேலியில் C.M.S. மிஷனெரி ஊழியத்தை துவக்கி நடத்த அனுப்பப்பட்ட போது ஷ்னார் ஐயரே அவருடன் திருநெல்வேலிக்கு வருவதாயிருந்தது. ஆனால் அவர் திடீரென்று இறந்து விட்டதினால், நாம் முன் அத்தியாத்தில் கண்டுள்ளபடி, **பெர்னார்ட் ஷ்மி** ஐயர் வந்தார்.

பாளையங்கோட்டையில் பெண்கள் செமினெரி நிறுவப்பட்டது முத அப்பள்ளி **ரேனியஸின்** கண்காணிப்பிலும் அவருடைய மனைவி அ **ரேனியஸ்** அம்மாளின் தலைமையிலும் நடத்தப்பட்டு வந்தது. பள்ளி வ வளர பணியும் அதிகமாயிற்று. ஆகையினால் ரேனியஸ் ஐயர், இறந் போன தன் நண்பர் ஷ்னார் ஐயரின் மனைவியை, இப்பள்ளியி ஊழியத்தில் தங்களுக்கு உதவியாயிருக்கும்படி விரும்பி அழைத்தா C.M.S.சங்கத்தின் தாய் கமிற்றியும், தென்னிந்தியாவில் C.M.S ஊழியங்களை, மேற்பார்வையிடும் சென்னை கமிற்றியும் (The Pare Committee of the C.M.S. and the Madras Corresponding Committee MCC) ஒப்புதல் தரவே. **திருமதி. ஷ்னார் அம்மாள்** பாளையங்கோட்ட பெண்கள் செமினெரியின் பணியில் சேர்ந்தார் (1824). திருநெல்வேலிக் வந்த தனிப்பெண் மிஷனெரிகளில் ஷ்னார் அம்மாளே முதலாவதான

பெண்கள் செமினெரியை நடத்துவதின் நோக்கங்கள் வருங்காலத்தில் உபதேசிமார் ஆசிரியர் மற்றும் குருமார் ஆ ஊழியங்களுக்கு தகுந்த துணைவியர்களை பயிற்றுவிப்பது. கிராம பள்ளிகளில் ஆசிரியைகளாகவும் அல்லது ஆசிரியர் துணைவியர இருந்து பணியாற்றக் கூடிய பெண்களுக்குப் பயிற்சியளிப்பது. கிரா கிறிஸ்தவப் பெண்களுக்கு சத்திய காரியங்களில் வழிகாட்டும் நல் தாய்மாரையும் உருவாக்குவது இந்நன்நோக்கங்கள். நிறைவு கா

னாரம்மாள் மிகுந்த கவனத்துடன் அப்பள்ளியில் செயல்பட்டார்.

ஒரு தாயைப் போல அம்மாணவிகளை நேசித்து, சகல கிறிஸ்தவ லங்களிலும் அவர்களைப் பயிற்றுவித்து, சரீர ஆவிக்குரிய காரியங்களில் அவர்களை முறையாகத் தேர்ச்சி பெற உதவினார்.

அந்நாட்களில் இப்பள்ளியையும் இங்கு நடைபெற்று வந்தப் பணியையும் பற்றி எழுதியுள்ள வாசகம் வருமாறு: இந்தியாவில் இப்பகுதியில் இப்பள்ளி ஒரு புதிய யுகத்தைத் தொடங்கியிருக்கிறது. இந்நாட்டு நடைமுறையில், அறிவீனத்துக்கும் மூட நம்பிக்கைக்கும் சகல தீமைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிற பெண் வர்க்கத்திலிருந்து முப்பத்தைந்து பேரை தங்களுக்கிருக்கும் கடமைகளை மெய்யான சந்தோஷம் தரத்தக்கதாக நிறைவேற்றிக் கொள்ளக் கூடாத அவர்களுடைய தற்கால நிலையிலிருந்து விடுவித்து, சுவிசேஷ ஒளியில் அவர்களை வளர்த்து வருகிறோம். தங்களையும், தங்கள் இல்லங்களையும் சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்துக் கொள்ள அவர்களுக்கும் கற்பிக்கிறோம். எது சரி, எது தவறு கடவுள் எப்படிப்பட்டவர், இரட்சகர் எவ்வாறானவர், இம்மை மறுமை போன்றவற்றையும் பற்றிய சரியான உபதேசங்களைக் கொடுக்கிறோம். தெளிந்த புத்தியும், உண்மையும் அன்புமுள்ள மனைவியாகவும் தாய்மாராகவும் அவர்கள் பிற்காலத்தில் விளங்கத்தக்கதாக அவர்களை உருவாக்குகிறோம்.

செமினெரி மாணவிகள் ஒருவருக்கொருவர் நல் ஆலோசனைகள் கொடுத்துக் கொள்வதும் ஆவிக்குரிய காரியங்களைப் பேசிக் கொள்வதும், எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் தங்கள் கடமைகளைச் செய்து வருவதும் அவர்களுக்கு (ஷ்னார் ரேனியஸ் அம்மையருக்கு) மிகுந்த மகிழ்ச்சியூட்டின.

1824-ல் திருநெல்வேலியின் முதற்பெண் மிஷனெரியாக வந்த ஷ்னார் அம்மாள் எப்பொழுது வேலையை விட்டார். இங்கிருந்து எங்கு சென்றார் என்ற விபரங்களெவையும் கிட்டவில்லை. ஒருக்கால் 1832 வரை பெண்கள் செமினெரியில் ஊழியம் செய்தாரென்று அனுமானிக்கலாம்.

17

ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயர் (C.M.S.)

1839 - 1856

ஒரே தாய் தகப்பனின் பிள்ளைகளான இரண்டு சகோதர அவர்களின் இரண்டு சகோதரிகளுமான நான்கு பேர் ஏறத்தாழ காலத்தில் **திருநெல்வேலியில்** மிஷனெரிப் பணி நிறைவேற்றனார் என்கிற பெருமை **ஹாப்ஸ்** (Hobbs) சகோதர, சகோதரிகளையே சாரு இவ்வரிய அண்ணன், அக்காள், தம்பி, தங்கையாகிய இவர்க முன்னோர்களின் செய்தியெதுவும் நமக்குத் தெரியவில்லை.

இவர்களில் மூத்தவரான **ஸ்டீபன் ஹாப்ஸ்** 1815-ம் வருஷம் பிறந் வாலிப வயதில் தன்னை C.M.S.ன் மிஷனெரிப் பணிக்கு ஒப்புக் கொடுத் 23 வயதினராயிருக்கும் போது **லண்டன்** மாநகரத்து அத்தியட்சரிடத் உதவிக்குருப்பட்டமும் (1838), அடுத்த வருஷம் அதே அத்தியட்சரிடத் குருப்பட்டமும் பெற்று 1839 வருஷம் 28-ம் நாள் **பாளையங்கோட்டை** அடைந்தார்.

செமினெரி - 1839 - 42 :

பாளையங்கோட்டையில் **ஹென்ரி ஹார்லி ஐயர்** திருச் மாற்றப்பட்டு விட்டபடியால் செமினெரித் தலைமைப் பதவி ஐரோப்பியர்களுக்குச் செய்ய வேண்டிய குருத்துவக் கடமைகளும் அவரி ஒப்படைக்கப்பட்டதுடன் அத்துடன் **பெற்றிட் ஐயருக்கு** உதவியா சபைகளை மேற்பார்வையிடுவதிலும் **ஹாப்ஸ்** ஈடுபட்டு வந்தார்.

செமினெரிப் பணியில் மாறுதலெதுவுமில்லை. அவர் பொறுப்பேற்ற பொழுது மாணவர் தொகை 20 அடுத்த வருஷம் 24, 1841-ல் 27, 1842- 30.

1842-ல் ஹாப்ஸ் ஐயருடைய இளைய சகோதரன் **ஹெப்றிம ஹாப்ஸ் ஐயரும், மிஸ் பார்ட்னர்** என்ற ஒரு பெண்ணும், இங்கிலாந் குருப்பட்டம் பெற்று திருமணமும் செய்து திரும்பிய **எட்வர்ட் சார்ஜென்டு** பாளையங்கோட்டை வந்து சேர்ந்தனர். (ஜூன் 24, 1842) **மிஸ் பார்ட்ன**

சென்னையில் தங்கி விட்டார். ஆகஸ்ட் 4-ம் தேதி அந்த அம்மாளுக்கும் ...பன் **ஹாப்ஸ்** ஐயருக்கும் சென்னையில் திருமணம் நடந்தது. அந்தத் திருமணத்தை அவரது தம்பி **ஹெப்றிமஸ் ஹாப்ஸ் ஐயரே** நடத்தி வைத்தார்.

அந்த வருஷத்தில் **நல்லூர்** மிஷனெரியாயிருந்த **பால் பசிபிக் ஷாஃப்றர் ஐயர்** (பெரிய ஷாஃப்றர் ஐயர்) விடுமுறையில் சுயநாடு சென்றதால் **ஹாப்ஸ் ஐயர்** நல்லூருக்கு மாற்றப்பட்டார். **ஹெப்றிமஸ்** ஹாப்ஸ் செமினெரியின் தலைவரானார்.

நல்லூர் 1843- 44 :

ஹாப்ஸ் ஐயர் 1843-ம் ஆண்டு துவக்கத்தில் நல்லூரில் குடியேறித் தன் பணியைத் துவக்கினார். அவருடைய தங்கை **ஸொஃபையாவும்** சில மாதங்களுக்குள் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு வந்து. தன் மையனாருக்கு உதவி செய்து வரலானார்.

நல்லூரில் இன்று **அருணோதயம் பெண்கள் பள்ளியென** விளங்கும் பள்ளி **P.P.ஷாஃப்றர்** ஐயரால் திருநெல்வேலியில் துவக்கப்பட்டது (1843). **ரேனியஸ்** பிளவின்போது சில மூடப்பட்டுப் பின் 1838-ல் திரும்பவும் திறக்கப்பட்டது. பிளவு நீங்கி **ஷாஃப்றர்** நல்லூரை தலைமைத் தளமாகக் கொண்டு அங்கு குடியேறின பின் (1838) ஷாஃப்றர் ஐயரின் மனைவி **ஏஞ்சலினா ஷாஃப்றரம்மாள்** அதன் தலைவியாயிருந்து வந்தார். ஷாஃப்றர் குடும்பம் விடுமுறையிலிருந்த காலத்தில் **ஸொஃபையா ஹாப்ஸ்** அப்பள்ளியின் தலைமைப் பொறுப்பேற்றார். அந்நாளில் அப்பள்ளியில் 25 மாணவிகள் கற்றனர். அவர்களில் 22 பேர் போர்டிங் மாணவிகள் பள்ளிக்கூட பாடங்களுடன் நூல் நூற்றல் என்னும் கைத்தொழில் பயிற்சியும் அப்பெண்கள் பெற்று வந்தனர். கிறிஸ்தவ அறிவிலும் சன்மார்க்க நெறியிலும் அப்பிள்ளைகள் வளர்க்கப்பட்டார்கள். கற்பிக்கப்பட்ட பாடங்கள் தமிழ் எழுத வாசிக்க, கணக்கு தமிழ்முறை, ஆங்கிலமுறை, வேதாகமம், வரலாறு, புவியியல், தமிழ் இலக்கணம், தமிழ் பாடப்புத்தகம், திருச்சபை ஞான உபதேசம், இயற்கலை, 1843 இறுதிக்குள் மாணவிகள் தொகை 30, அதில் 27 பேர் போர்டிங் பிள்ளைகள்.

அக்காலத்தில் நல்லூர் சேகரம் என்பது தெற்கே அம்பாசமுத்திரம் முதல் வடக்கே கம்பம் வரையிலும் வியாபித்திருந்தது. சுமார் 15 ஜமீன்கள் இவ்வெல்லைக்குள் அடக்கம். சுரண்டை, வீரகேளம்புதூர், ஏழாயிரம்பண்ணை, ஆலங்குளம் முதல் ஜமீன்கள் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு எதிராய் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வந்தன. ஷாப்டர் ஐயர் அவர்களுடைய எதிர்ப்புகளை சமாளித்து மிகுந்த பிரயாசப்பட்டுத் தன் ஊழியத்தை வெற்றியுடன் நிறைவேற்றி வந்தார்.

இப்பெரிய சேகரத்தில் பல சபைகளில் ஆலயமோ ஜெபவீடுகளோ இல்லாத குறையை நீக்குவது தன் முதல் கடமை என்று தீர்மானித்து ஷாப்டர் 1844 ஜனவரி 1-ம் நாளில் நல்லூர் சேகர ஆலயக் கட்டுமான நிதிச் சங்கத்தை நிறுவினார். அதனுதவியினால் பின் வந்த நாட்களில் சேகரத்தில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன.

சபைகளைச் சந்தித்து அவர் எழுதியுள்ள நாட்குறிப்புகள் வருமாறு : இந்த சேகரம் வடசேகரம் (Northern District) என்றழைக்கப்படுகிறது. இதில் பணியாற்றும் உபதேசிமார் - 24. தலைமை உபதேசிமார் எனப்படும் (Inspecting Catechists) - 4 Readers எனப்படும் கல்விசேவர் - 21. Inspecting School Master எனப்படும் விசாரணை உபாத்தியாயர் - 1. பள்ளி ஆசிரியர் - 14. ஜனவரியில் கம்பம் சென்றேன். ஏப்ரலில் வீரகேரளம்புதூர். மே மாதம் கல்லத்திக்கிணறு சென்றேன்.

வீரகேரளம்புதூர் : மகிழ்ச்சி தரும் சபை. தலைமை உபதேசியார் இங்கு வசிக்கிறார். அவர் பெயர் பேதுரு.

கல்லத்திக்கிணறு : இச்சேகரத்தின் ஓர் உட்பிரிவுக்கு இது தலைமைத்தலம். இங்கும் ஓர் தலைமை உபதேசியார் வசிக்கிறார். அவர் பெயர் மிகாவேல். இது மன நிறைவு தரும் ஒரு சபை.

பரங்குன்றாபுரம் : இங்கு ஒரு சிறு பங்களா உண்டு. முன்னர் அது ஒரு பேய்க் கோவில். நாடார்கள் அதை மிஷனுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். இவ் வருகையில் அதைப் பழுது பார்த்தேன். தங்குவதற்கு ஏற்ற இடம்.

பனையடிப்பட்டி : இவ்வருடமும் அநேகர் புதிதாக சபையில் சேர்ந்துள்ளனர். இங்கிருக்கும் உபதேசியார் இதையும் சுற்றிலுமிருக்கிற வேறு சபைகளையும் கண்காணித்து நடத்துகிறார்.

...ல்லிசேரி : முந்தின அரையாண்டு காலத்தில் இச்சபையார் சபை நீக்கம் செய்யப்பட்டார்கள். இப்பொழுது மனஸ்தாபத்துடன் மனந்திரும்புவதால், ...றபடியும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவ்வூரிலும் சிலர், ...திதாகக் கிறிஸ்து சபையில் சேர்ந்துள்ளனர்.

...ல்லூர் : நல்லூர் பெண்கள் போர்டிங் பள்ளியில் படிக்கும் பெண்களில் ...டு பேர் உபதேசிமாரின் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளின் ...ன்னேற்றம் திருப்தியாயிருக்கிறது. வேத அறிவில் சீரான தேர்ச்சி. நூல் ...றப்பது தங்கள் ஆகாரத்தைத் தாங்களே சமைத்தல் ஆகிய வீட்டு ...வேலைகளையும் பிள்ளைகளே செய்கிறார்கள். நல்லூர் சேகர தேவாலயம் ...டுமானச் சங்கத்தில் (தே.க.ச) ஈடுபாடு கொண்டு ஆகாரம் சமைக்கும் ...பொழுதெல்லாம் கொஞ்சம் அரிசியைத் தனித்து வைத்து மாதந்தோறும் ...தை தே.க.ச (C.B.S.) காணிக்கையாகப் படைக்கிறார்கள். இந்த மாதம் ...வ்விதம் அவர்கள் படைத்தது **ரூ.0 அ. 12 பை (ரூ.0.75).**

1844-ம் ஆண்டில் அவர் எழுதிய நாட்குறிப்புகளின் சிலவற்றையும் ...ருவோம். **வெங்கடேஸ்வரன்பட்டி** 06.05.1844. ரெட்டியார் குலமக்கள் ...கொண்ட சபை. சீரான வளர்ச்சி காட்டும் இச்சபையிலும் ஒத்தரன்பட்டிச் ...சபையிலும் (06.05.1844) சேர்த்துச் சபையார் 300 பேர்.

...ல்லத்திக்கிணறு : பள்ளர்குலமக்கள் கொண்ட ஒழுங்கான பூர்வீக சபை.

...மைலோடை : மைலோடை 06.05.1844. கடந்த மார்ச் மாதத்தில் ...வ்வூரில் பள்ளர் குலத்தினரில் 25 குடும்பத்தினர் கிறிஸ்து மார்க்கத்தில் ...ர்ந்து அதிக ஊக்கத்துடன் பாடங்கற்று வருகின்றனர்.

...லாங்குளம் : நாடார் குல மக்கள் கொண்ட இச்சபை சமீப காலத்திற்குள் ...ருவானது. அவர்கள் சுமார் 100 பேர். மூன்றாண்டுகளில் ஒரு சிலர் ...ன்வந்து போதனை பெற்றார்கள். ஆனால் அனைவரும் மறுதலித்து ...டனர். இப்பொழுது அவர்களும் முன்வந்து உறுதியாய் இருக்கிறார்கள். ...ரு ஜெபாலயமும் கட்டிவிட்டார்கள். அச்சபைக்கு ஓர் உபதேசியாரை ...யமிக்க வேண்டும்.

...ம்பவர் வடகரை : சாம்பவர் வடகரை என்ற ஊரிலிருந்து (தங்களை ...றிஸ்துமார்க்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு ஒரு மனு ...ன்னிடம் வந்து சேர்ந்திருக்கிறது (1843).

ரெட்டியார்பட்டி : குருபாதம் இங்கு உபதேசியாராயிருக்கிறார்.

ஊற்றுமலை : கிறிஸ்தவர்களுக்கு இங்கு கொடிய துன்ப உண்டாயிருக்கிறது. அவர்களுடைய வீடுகளுக்கு நெரு வைக்கப்படுகிறது. ரூ. 300 மதிப்பிடத்தக்க சொத்துக்களும் மூன் காளைகளும் நஷ்டமாயின. ஆனாலும் கிறிஸ்தவர்கள் உறுதியா திடமனதுடனும் இருக்கின்றனர்.

நல்லூர் : திருமதி. ஹாப்ஸ் தன் கணவருடைய ஊழியத்திற்கு மிகு உதவியளித்து வந்தார். உபதேசிமாரின் மனைவியருக்கு வகுப்புக நடத்தியும், பெண்களுக்குள் நடந்த ஊழியத்தை மேற்பார்த்தும் உதவின **ஸொஃபையா ஹாப்ஸ்** மேற்பார்வை செய்த பெண்கள் போர்டி பள்ளியில் (1844-ல்) படித்த பிள்ளைகள் 49. அவர்களில் 42 பே போர்டிங்கில் சேர்ந்து படித்தார்கள்.

சாத்தான்குளம் - 1844 - 52 & 54 :

விடுமுறையில் (furlough) சென்றிருந்த **ஷாஃப்றர் ஐயர்** திரும் வந்தவுடன், **ஸ்டீபன் ஹாப்ஸ் ஐயர்** சாத்தான்குளத்துக்கும் அங்கிரு **ஜாண் தேவசகாயம் ஐயர்** கடாட்சபுரத்துக்கும் மாற்றப்பட்டனர்.

ஹாப்ஸ் சாத்தான்குளம் சேகரப் பொறுப்பேற்ற போது அச்சேகரத் கிறிஸ்தவர்கள் 3943, சபைகள் சுமார் 24, உபதேசிமார் 23, சுவிசே 7, தலைமை உபதேசிமார் 4, பள்ளிக்கூட ஆசிரியர் 14, விசாரன உபாத்தியாயர் 1.

சேகரத்தில் **ஹாப்ஸீக்கு** முன்னிருந்த **தேவசகாயம்** ஐ காலத்திலிருந்து கிராமச் சபைகளில் காலை ஆராதனை இரண்டு மணிக் மாலை ஆராதனை இரவு 10 மணிக்கும் நடத்தப்பட்டன. சபையா அனேகர் காலை 3 மணிக்கே வேலைக்கு போய் இரவு 9 மணிக்குத் த வீடு திரும்பினராதலால் இந்த ஏற்பாடு. இப்படி அகால வேளைகளில் கா மாலை ஆராதனை நடத்தப்பட்டாலும் சபையார் ஆராதனைகளு ஒழுங்காக வந்தது அக்காலக் கிறிஸ்தவர்களின் தெய்வ பக்திை மார்க்கப்பற்றையும் காட்டுகிறதன்றோ!

கர்த்தருடைய நாளில் வயதானோர் ஞாயிறு வகுப்புகள் (Adult Sunday Classes) நடத்தப்பட்டன. சாத்தான்குளம் வகுப்பில் ஆண்கள் 30 பேர், பெண்கள் 49 பேர் தவறாமல் வகுப்புக்கு வந்தவர்களாகக் குறிக்கப்பட்டவர்கள் கிராமங்களில் ஆண்கள் 141, பெண்கள் 29.

இந்நல்ல வழக்கங்களை ஹாப்ஸ் தொடர்ந்து கடைப்பிடித்து வரச் சபையாரையும் உபதேசிமாரையும் உபதேசிமாரின் மனைவியரையும் ஊக்குவித்தார்.

தர்மநகரத்தில் ஆலயக் கட்டுமானம் ஆரம்பமாகியிருந்தது. அதிலும் ஹாப்ஸ் ஊக்கம் காட்டி வந்தார். 1845-ல் அது முடிந்ததாகத் தெரிகிறது.

ஹாப்ஸ் ஐயருடைய வருடாந்திர அறிக்கைகளோ நாட்குறிப்புகளோ நமக்கு அதிகம் கிடைக்கவில்லை. கிடைத்தவற்றிலும் வரலாற்றுச் சிறப்புடையவை வெகு குறைவே.

1851-ம் ஆண்டு நாட்குறிப்புகள் சில நமக்குக் கிடைத்துள்ளன. அநேக கிராமச் சபைகளைச் சந்தித்து அவர் எழுதியுள்ளவற்றில் முக்கியமானவை. C.M.R. 1851 - Sathankulam District - Journals S.H. March - April 1851.

சிறப்பூர் : பள்ளிக்கூடத்தில் 50 பிள்ளைகள் படிக்கிறார்கள். சபை தெய்வ கிருபையில் வளருகிறது. ஒவ்வொரு மாலை ஆராதனையிலும் 120 பேர் பங்கு பெறுகிறார்கள். 50 சிறுவரும் வருகிறார்கள்.

சத்தியநகரம் : பாடங்கள் படிப்பதில் மற்றும் போதனைகள் கேட்பதில் வெகு கவனமாயிருக்கும் சபை. சபைத் தலைவனுமே அப்படியிருக்கிறார்.

கிருபாபுரம் : இவ்வூர் சபைத் தலைவன் ரொம்ப பக்தியுள்ள மனிதர் உண்மையும் மார்க்கப் பற்றும் மிக்கவர்.

ஜெபஞானபுரம் : இச்சபையில் ஒரு பக்தனிருக்கிறார். ஆலய ஆராதனைகளுக்குத் தவறாமல் வருபவர். ஓர் ஞாயிற்றுக்கிழமை அவருடைய ஒரு மகனுக்குக் காலரா வந்து விட்டது. ஆயினும் அவர் அன்று மாலை ஆராதனைக்கு வந்து விட்டார். ஆராதனை முடிந்து வீட்டுக்குப் போனார். அவருக்கும் வியாதி வந்து விட்டது போய் ஜெபித்தேன். இப்போது சுகமாயிருக்கிறார்.

சாத்தான்குளம் சபையின் வரலாற்றில் அது தோற்றமெடுத்த 182
முதல் மறுமலர்ச்சியிருந்து காணப்பட்ட ஒரு சிறப்பான கிறிஸ்தவப் பண்
சுவிசேஷ ஊழிய ஆர்வமாகும். அந்த ஆர்வத்தை மங்கிவிட விடுவிடாம
அதை எப்போதும் உயிருள்ளதாகவும், செயல்படுவதாகவு
வைப்பதற்காக ஒரு சுவிசேஷ ஊழிய நிரந்தர நிதியை (Gospel Stati
Treasury) 1852 ஜனவரி 1-ம் தேதி சாத்தான்குளத்தில் நிறுவினா
சாத்தான்குளம் சபையாரும் மற்ற சபையினரும் அந்நிதியை உற்சாகமா
வளர்த்து ஊழியத்தில் அதன் வட்டித் தொகையைச் செலவிட்டார்கள்.

அவரும் அவருக்கு உதவியாக 1851-ல் சாத்தான்குளத்தி
நியமிக்கப்பட்ட முத்துசுவாமி தேவப்பிரசாதம் ஐயரும் பற்
சபைகளில் எழுதிய குறிப்புகளிலிருந்து நாம் அறியக் கூடிய சி
வரலாற்றுச் செய்திகள்.

C.W.R. 1854 - Sattankulam District - Journals - S.H. July 1854.

பாக்மன் ஐயர் துவக்கின ஆண்கள் பள்ளியை ஒரு உயர்
போர்டிங் பள்ளியாக உயர்த்தினார். இப்பள்ளி சிறப்பாக நடந்தது. அதற்
காரணம் இது ஒரு சிறு நகரில் இருந்தது என்பதே. ஆனாலும் அப்பள்
1856-ம் ஆண்டில் மெய்ஞ்ஞானபுரம் ஆண்கள் போர்டிங் பள்ளியு
இணைக்கப்பட வேண்டியதாயிற்று.

ஹாப்ஸ் செய்த முக்கியமான வேலை தச்சமொழி ஜெபவீட்டை
மேலச் சாத்தான்குளம் ஜெபவீட்டையும் கட்டி முடித்தது. இவற்றிலு
சிறப்பான செயல் சாத்தான்குளம் ஆலயத்தை 1851-ல் கட்டத் தொட
1854-ல் முடித்ததாகும். இந்த ஆலயத்தைக் கட்டுவது இடைக்காலத்தி
ஏற்பட்ட பணத்தட்டுப்பாட்டினாலும், கட்டுமானப் பணியில் ஈடுப
ஆசாரிகளுக்குள் ஏற்பட்ட மனத்தாங்கல்களாலும் தடைப்பட்டு வேலை
முடியக் காலமாயிற்று.

ஆசாரிமார்களில் பெரியவர் முத்தாசாரி என்னப்பட்ட
பன்னம்பாறை ஊரைச் சேர்ந்தவர். தேவாலயத்தைக் கட்டிக் கொண்டிருக்
போதே அவர் கிறிஸ்துநாதரை விசுவாசிப்பவராகி அதை பகிரங்கமா
அறிக்கையிட்டார். உடனே அவருடைய குடும்பத்தில் பலத்த எதிர்
உண்டாயிற்று. ஆகவே வேலை தடைப்பட்டது. ஆயினும் பின்

அவருடைய மனைவியும், சகோதரர்களும் அவர்களுடைய மனைவியரும் கிசுவாசிகளாகி எல்லாரும், ஒன்றாய் சேர்ந்து உழைத்து ஆலயத்தைக் கட்டி முடித்தார்கள்.

ஆலயப் பிரதிஷ்டை செய்தியோ, செலவினங்களைப் பற்றிய தகவல்களோ எதுவுமே தெரியவில்லை. 1854 ஜுலைக்கு முன் அது பிரதிஷ்டையாயிற்று. அம்மாதம் 14-ம் தேதி நாட்குறிப்பில் அதை புது ஆலயம் என்று **ஹாப்ஸ்** குறிப்பிடுகிறார்.

ஹாப்ஸின் சகோதரி **ஸொஃபையா** 1846-ல் **ஜேம்ஸ் ஸ்ப்ராட்** ஐயரை மணந்தார். அவருடைய மற்றொரு தங்கை **மேரிஜேன்** 1852-ம் வருஷம் வந்து சில மாதங்களில் **ஜேம்ஸ் ஸ்ப்ராட்டின்** தம்பி தாமஸ் ஸ்ப்ராட்டை மணந்தார். மகிழ்ச்சியாயிருந்த இந்த மிஷனெரிக் குடும்பங்களில் திடீரெனப் புயல் வீசினது. மேரி ஹாப்ஸ் – தாமஸ் ஸ்ப்ராட் திருமணமாகி சில மாதங்களுக்குள் **ஸொஃபையா ஸ்ப்ராட்** இறந்தார். சரியாக இரண்டாண்டுகளுக்குப் பின் **ஜேம்ஸ் ஸ்ப்ராட்டும்** இறந்தார் (14.09.1854).

ஜேம்ஸின் மரணத்துக்குப் பின் **ஸ்டீபன் ஹாப்ஸ்** ஐயர் ஓராண்டு விடுமுறையில் இங்கிலாந்துக்குப் பின் போய் திரும்பி வந்து சில மாதங்கள் சாத்தான்குளத்திலிருந்தார்.

1855 முதல் சாத்தான்குளம் சேகரம் மெய்ஞ்ஞானபுரம் சேகரத்துடன் இணைக்கப்பட்டதினால் **ஹாப்ஸ் டோனாவூருக்கு** மாற்றப்பட்டார். டோனாவூரோடு **சுவிசேஷபுரமும்** அவருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் இரண்டொரு மாதங்களில் **மொரீஷியஸீக்கு** மாற்றப்பட்டார். அங்கு 21 ஆண்டுகள் பணியாற்றினார் (1856 - 77). 1871-ல் மொரீஷியஸ் ஆர்ச் டீகனார். பின் 1877-ல் ஓய்வெடுத்து இங்கிலாந்திலும் குருத்துவ ஊழியம் செய்து 1893-ல் ஏப்ரல் 3-ம் தேதி மரித்தார். வயது 78.

18

ஜான் தாம்ஸன் ஐயர் (S.P.G.)

1837

ஒரு வருடத்தில் (1837) ஒரு சில மாதங்கள் மட்டும் மதுரையி மிஷனெரியாகவோ, சேப்ளைனாகவோ பணி புரிந்த S.P.G. மிஷனெரியா இவர் சென்னை அத்தியட்சர் தானியேல் காரியிடம் குருப்பட்டம் பெற்ற என்றும், பின் 1837 முதல் 1842 வரை நாகப்பட்டினத்தில் ஊழிய செய்து ஓய்வு பெற்றார் என்றுமேயன்றி வேறெதுவும் இவரைப்பற் நாமறிவதில்லை. ஏனெனில் மதுரை, திண்டுக்கல் முதலியவிடங்களி பணியாற்றிய S.P.G. மிஷனெரிமார் மற்றும் சேப்ளான்களின் பெய பட்டியல் திருநெல்வேலித் திருச்சபை பட்டியலுடன் சேர்க்கப்படாமலு அவர்கள் அனுப்பும் ரிப்போர்ட்கள் சென்னை அத்தியட்சருக் உரியனவாகக் கருதப்பட்டன (Hector Mackaliff in 1888).

19

வில்லியம்ஸ் ஹிக்கி ஐயர் (S.P.G.)

1837 - 1839, 1847 - 1857, 1858 - 1866, 1866 - 1869)

மசூலிப்பட்டணத்தைச் சேர்ந்த ஆங்கிலோ - இந்தியரான மிஷனெரி 1808 ஜனவரி 21-ல் பிறந்தார். குருத்துவப் பணிக்காகப் பயிற்சி பெற்ற **ஹிக்கி** சென்னை பிஷப் காரியிடம் 1837-ல் உதவிக்குருப் பட்டம் பெற்றவர். S.P.G. சங்கத்தாரால் மிஷனெரியாக ஏற்கப்பட்ட அவர் 1837-ம் ஆண்டு பெப்ரவரியில் **திண்டுக்கல்லிலும்** ஜூனில் **ராமநாதபுரத்திலும்** மறுபடியும் செப்டம்பரில் **திண்டுக்கல்லிலும்** மிஷனெரியாக நியமிக்கப்பட்டார். பின் 1839 முதல் **சென்னை, திருச்சி,** **தஞ்தாக்குடி, திருச்சியென்று** 1846 வரை அங்குமிங்கும் மாற்றப்பட்டு, 1847 முதல் 1857 வரை **மதுரையில்** மிஷனெரியாகப் பணிபுரிய அனுமதிக்கப்பட்டார். இப்பொழுது தான் மாற்றுதல் தொந்தரவில்லாமல் அமைதியாக வேலை செய்ய அவருக்குச் சமயம் கிடைத்தது. 1857-க்கு பின் ... ஆண்டுகள் **கும்பகோணத்தில்** ஊழியஞ் செய்து ஓய்வு பெற்றார். ஆனாலும் திரும்பவும் சென்னையில் மூன்றாண்டுகளும், **மதுரையில்** 1866 - 69லும் ஊழியம் செய்து, ஓய்வெடுத்து **திண்டுக்கல்லில்** 1870 ஜூன் ...4-ம் தேதி மரித்து அங்கேயே அடக்கம் பண்ணப்பட்டார்.

திருநெல்வேலி ராமநாதபுரம் மதுரை அத்தியட்சாதீனம் என்று 1947 வரை அழைக்கப்பட்ட திருநெல்வேலி அத்தியட்சாதீனத்தின் வட எல்லை ஒரு காலத்தில் **திருச்சிராப்பள்ளி** மாவட்டம் வரை எட்டியது.

ஹிக்கி ஐயர் தன் ஊழியகாலத்தில் ராமநாதபுரத்திலும், திண்டுக்கல்லிலும், மதுரையிலும் சுமார் 15 ஆண்டுகள் ஊழியம் செய்தார் என்று தெரிகிறது.

மதுரை மிஷன் வரலாறு :

இப்பகுதியின் வரலாற்றை நாமறிந்தமட்டில் சுருக்கமாய் எழுத முயல்வோம். இன்றைய **புதுக்கோட்டை, சிவகங்கை, திண்டுக்கல்,** மதுரை, **ராமநாதபுரம்** மாவட்டங்கள் இப்பிராந்தியத்தில் அடங்கும். இங்கு

நடைபெற்ற கிறிஸ்தவ திருப்பணி மதுரை மிஷன் மற்றும் தஞ்சாவூர் மிஷன் மற்றும் இருபிரிவுகளாக நடத்தப்பட்டது.

மதுரை மிஷன் என்ற அமைப்பிற்கு அறியப்பட்ட சிலவற்ற தஞ்சாவூரும், சிறப்பாக பூமியில் திருச்சி, தஞ்சை நகரங்களை அழுகியத்தின் வைபத்தலங்களாகக் கொண்டிருந்த சங்கை ஸ்வார்ட்ஸ் ஐயரால் அனுப்பப்பட்ட உபதேசிமார் மற்றும் சுவிசேஷகர்களுடைய பணியின் பயனாக பற்பல கிராமங்களில் சிறு சிறு கிறிஸ்தவ சபைகள் தோன்றின. 1785-க்குப் பின் தஞ்சாவூரும், திருக்கரை பகுதியிலும் சபைகள் தோன்றின. ஸ்வார்ட்ஸ் ஐயர் அச்சபைகளைத் 'திருச்சிராப்பள்ளி சபை' (The Trichinopoly Congregation) என்ற பெயரில் அழைத்தார். மதுரைக்கு வடக்கிலும் வடமேற்கிலும் சில சபைகள் தோன்றின. அவற்றில் பிரதானமானது நத்தம் என்றவூரில் உள்ள சபையாகும். விரிந்து பரந்து கிடந்தும் பற்பலவிதமான நிர்வாகங்களின் கீழிருந்த, ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லா இச்சபைகளை மேற்பார்வையிடுவது கூடாத காரியமாயிருந்த உபதேசிமார்களையும் சுவிசேஷகர்களையும் கூடுமான வல்லவர்களை நியமித்து, அச்சபைகளைக் கண்காணிக்க சங்கை ஸ்வார்ட்ஸ் ஏற்பாடுகளைச் செய்து, தானே நேரில் சென்று, அல்லது அனுபவமுள்ள உபதேசிமாரை அனுப்பி அவர்களுடைய பணியை மேற்பார்த்து வந்

1785-க்கு பின் ஸ்வார்ட்ஸ், ஜெனிக்கே, கெரிக்கே ஐ முன்னிலும் சற்று அதிகமாகச் சபை விசாரிப்பை மேற்கொண்டனர் (178 1803). அவர்களுக்குப் பின் போஹலே, ராட்லர், J.C.கோலா ஐயர்மார் தங்கள் கண்காணிப்பைக் கொஞ்சம் கொஞ்சமாய் குறைத்து கொண்டனர். எப்போதாவது ஒரு முறை வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போ விடுவர். ஆகையினால் சபைகளான ஊழியரும் உற்சாகம் குன்றி சோர்வு கொண்டனர். ஊழியத்தின் மேன்மையையும், தன்மையை மறந்தனர். களைகள் வளர்ந்தன. பயிர்கள் நலிந்தன. பலர் மரித்தன வேறு பலர் மறுதலித்தனர். சபைகள் பல மறைந்தன. கிறிஸ்து சபை ஒன்றிருந்தது என்று ஞாபகப்படுத்த ஒரு சில பெயர்களே (names) மீந்

தானியேல் ஷ்ரீவோகல் (The Rev. Daniel Shreyvogel) என்ற மிஷனெரி திருச்சிராப்பள்ளியிலிருந்தார். 1834-ம் ஆண்டில் அ

துரை மிஷன் சபைகளைச் சுற்றிப் பார்த்து வரச் சென்று, பாலைவனமாய்ப் போயிருந்த அம்மிஷனின் நிலைமையைக் குறித்து அந்நாளில் சென்னை அத்தியட்சராயிருந்த **பிஷப் தானியேல்காரிக்கு** (Rt. Rev. Daniel Corrie, the first Bishop of Madras) விபரமாக எழுதினார். அவரும் மதுரை மிஷனுக்கு புத்துயிரூட்ட வேண்டிய அவசியத்தை நன்கு உணர்ந்தார்.

இச்சமயத்தில் இன்னுமொரு 'தானியேலைக் கர்த்தர்' ஊக்குவித்தார். அவர் மதுரை முன்சீபாக இருந்த **தானியேல் பர்பி** (Mr. Daniel Burber) என்றவொரு **நீதிபதி** இவரும் மதுரையிலும் மதுரை மிஷன் பிரதேசத்திலும் விசேஷ ஊழியத்தைத் தீவிரப்படுத்துவதில் உதவ முன்வந்தார்.

1836 ஜனவரியிலும் பெப்ரவரியிலும் மதுரைக்கு வந்த **பிஷப் காரி, ஸ்ரீவேலாகனும், பர்பியும்** கூட்டிச் சேர்த்திருந்த சிறு சபையையும் அவர்கள் மத்தியில் ஊழியஞ் செய்ய நியமிக்கப்பட்டிருந்த உபதேசியாரையும் சந்தித்து ஆசீர்வதித்துச் சென்றார். சென்னைக்குச் சென்ற பின் தன் மகளுக்கு எழுதின கடிதத்தில் மதுரை மிஷனின் அன்றைய பரிதாபமான நிலைமைப் பற்றி பிஷப் எழுதினார். பின் அவர் S.P.G. சங்கத்தாருக்கு எழுதி அவர்கள் குறிப்பிட்ட **தாம்ஸன் ஐயரை மதுரையிலும், ஹிக்கி ஐயரைத் திண்டுக்கல்லிலும்** மிஷனெரியாக நியமித்தார் (1837).

ஆனால் இந்த ஒழுங்குகள் நெடுநாள் நிலைக்கவில்லை. சில காரணத்தினாலோ, சில மாதங்களுக்குள் **ஹிக்கி இராமநாதபுரத்துக்கும் தாம்ஸன் நாகப்பட்டிணத்துக்கும்,** ஹிக்கி மறுபடியும் **திண்டுக்கல்லுக்கும்** பாளையங்கோட்டையிலிருந்த **ஹபர்ட்** துரைக்கும் மாற்றப்பட்டனர் (1837). ஹிக்கி திண்டுக்கல்லில் இரண்டு வருஷங்கள் மட்டுமே ஊழியம் செய்தார் (1837 - 39).

ஹபர்ட் மதுரையையும், திண்டுக்கல்லையும் சேர்த்தே கண்காணித்தார். அவருடைய காலத்தில் **கொடைக்கானல்** மலைகளில் விசேஷம் கூறப்பட்டதெனவும், ஒரு சபையும் சிற்றாலயமும் உருவாயினவென்றும், பொதுவாக அவருடைய ஊழியம் சிறப்பான பலன்களை விளைவித்தது என்று **ஹிக்கியின்** கடிதமொன்றிலிருந்து அறிய முடிகிறது.

மதுரை மிஷனுக்கு மையத்தலமாகக் கருதப்பட்டது பெத்தேல் என்ற மிஷன் கிராமம். அது கொடைக்கானல் மலைக்கு முப்பது மைல்கள் கிழக்கில் அம்மாபட்டிக்கு பக்கத்தில் சில நூறு மீட்டருக்கு அப்பாலு சிற்றூர். அதில் ஒரு பெரிய விசாலமான பங்களா கட்டப்பட்டிருந்தது. போர்டிங் பள்ளிக்கூடமும் வேறொரு பெரிய கட்டிடத்தில் நடத்தப்பட் அக்கட்டிடத்தில் ஒரு சிறு பகுதியைப் பிரித்து, அதை உபதேசிய வாசம்பண்ணும் வீடாக்கியிருந்தனர். இந்த இரண்டு கட்டிடங்களை கட்டுவதற்கு ஆன செலவு ரூ. 45 அ 6 மட்டுமே (ரூபாய் 45-37). சும 150 பேர் அமர்ந்து ஆராதிக்க போதுமான இடமுள்ள ஓர் ஆலயமும் உண் ஆனால் அதன் சுவர்கள் மண்ணாலானவை. கூரை ஓலையா வேயப்பட்டது. ஓர் உறுதியான ஆலயம் பெத்தேலின் உடன தேவையென்று **ஹிக்கீ** எழுதுகிறார்.

அம்மாப்பட்டியில் 129 பேர் கொண்ட ஒரு சபை இருந்தது. அங்குள் ஆலயமும் ஒரு தற்காலிகக் கட்டிடமே. அதில் 200 பேருக்கு இடமுண் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு **பெத்தேல், நல்லக்கோட்** **முருகத்தூரான்பட்டி, அம்மையநாயக்கனூர்** சபையாரும். இந் ஆலயத்துக்கே வருவார்கள். ஐந்து ஊர்களின் சபையார் ஆராதனைக் வருவதால் அதிக நெருக்கமாயிருக்கிறது என்கிறார் **ஹிக்கி.**

மதுரை மிஷனின் முழுப்பொறுப்பையும் ஏற்ற (District Missio **ஹிக்கி** ஐயரின் மிஷனெரி ஆதீனம் 5,300 சதுர மைல் பரப்புள்ள வடக்கே **மணப்பாறை** அதன் எல்லை. தெற்கில் **கள்ளக்குடி,** மேற்கி **பழனி** மலைகள், கிழக்கில் 23 மைல்களுக்குப்பால் **வல்லாம்பட்டி,** இ நிலப்பரப்பில் 1847 - 52ல் இருந்த கிறிஸ்து சபைகள் 30. கிறிஸ்தவர்க 815. அவர்களுள் நற்கருணைக்காரர் 203, 1853-ல் புதிதா ஞானஸ்நானம் பெற்றவர்கள் பெரியவர்கள் 11, சிறியவர்கள் 45 ரோமானிக்கத்திலிருந்து வந்தவர்கள் 40 சபை ஊழியர் இந்தியர் 13 ஆ.இ. 1, ஐரோப்பிய உபதேசியார் 1, மிஷனெரி 1.

இந்தப் பெரிய ஆதீனத்துக்கு மையமான ஓர் இடத்தில் தான் மிஷனெ கேந்திரம் இருக்க வேண்டுமென்று எண்ணியே 1848 - 49ல் **ஹிக்கி** ஐய **பெத்தேல்** உருவாக்கினாரெனத் தோன்றுகிறது.

கொடைக்கானல் மலையில் 1851-ம் ஆண்டில் ஒரு சிற்றாலயம் கட்டப்பட்டதுடன் அக்கட்டிடத்திலேயே ஒரு பள்ளிக்கூடமும் ஹிக்கி ஐயரால் துவக்கப்பட்டது. R.D. பார்க்கர் என்னும் ஓர் ஐரோப்பிய கனவானின் உதவியால் இது கட்டப்பட்டது. 200 பேர் கூடி ஆராதிக்கப் போதுமான இடம் இதிலுண்டு. 1848 முதல் கொடைக்கானல் சபையை S.G. காய்ஸ் (Mr. S.G. Coyle) என்ற மிஷனெரி கண்காணித்து வருகிறார் என்று எழுதுகிற ஹிக்கி, காய்ஸ் உபதேசியார் மிகுந்த சுயவெறுப்போடு மண்ணாலான ஒரு சிறு குடிசையில் கடந்த ஆறு வருஷமாய் வசித்துக் கொண்டு ஊழியத்தில் தன்னை முழுவதுமாய் ஈடுபடுத்தி, தன் ஊழியத்தை நிறைவேற்றி வருகிறார். கர்த்தருடைய ஆசீர்வாதம் அவருடைய ஊழியத்தில் நிறைவாகத் தங்கியிருக்கிறது என்றும் வரைகிறார்.

திண்டுக்கல்லிலிருந்த சபை மிகவும் சிறியது மொத்தமே 29 ஆத்துமாக்கள் தான். ஹிக்கி மதுரை மிஷன் பொறுப்பேற்ற சில வருஷங்களுக்குள் அந்நகரில் ஒரு வீட்டை விலைக்கு வாங்கி அதில் சில மாறுதல்களைச் செய்து ஒரு பகுதியை சுமார் 400 பேர் அமர்ந்து ஆராதிக்கத்தக்க ஓர் ஆலயமாகவும் அடுத்துப் பகுதியை மிஷனெரி வரும் போது தங்குவதற்கேற்ற ஒரு சிறு பங்களாகவும் அமைத்தார்.

திண்டுக்கல் உபமிஷனைச் சேர்ந்த சுமார் எட்டுச் சபைகள் செல்லப் பிள்ளையார் நத்தம் என்றவூரில் அதைச் சுற்றிலும் இருந்தன. ஷ்ரிவோகல் ஐயர் காலத்தில் இவை கிறிஸ்துநாதரை அண்டின. 1834-ல் ஷ்ரிவோகல் M.D.C.யின் உதவியுடன் ஒரு ஆலயம் கட்டி ஓடு மேவினார். ஆனால் அது 30 பேர் ஆராதிக்கத்தக்கதான சிறு கட்டிடம். சபையார் எட்டு ஊர்களிலும் சேர்த்து 55 பேர் தான். அனைவரும் குறவர் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர். ஹிக்கி ஐயர் அவ்வாலயத்தைப் பழுது பார்ப்பதை விட இடித்துப் பெரிதாய்க் கட்ட முயற்சி செய்தார்.

திண்டுக்கல் நகரிலும், மேலும் பல ஊர்களிலும் அமெரிக்கன் மிஷன் பலமாக வேரூன்றி விட்டதால், திண்டுக்கல்லை அந்த மிஷனுக்கு விட்டு விடுவது நலம் என்று ஹிக்கி சென்னை அத்தியட்சருக்கும், S.P.G. சங்கத்தாருக்கும் எழுதினதுமல்லாமல், அமெரிக்கன் மிஷனெரிகளுக்குத் தன்னாலான சிநேக பாவத்துடன் நடந்து வருவதாகவும் எழுதினார்.

சபைகளைப் பற்றிக் குறிப்புகள் எழுதி மகிழ்ந்த ஹிக்கி ஒரு சம்பவத்தை மட்டும் மிகுந்த மனவேதனையுடன் எழுதுகிறார். செல்லப்பிள்ளையார் நத்தம் உபதேசியார் துன்மார்க்கமாய் நடந்து கிறிஸ்தவ சபைக்கும் கிறிஸ்து மார்க்கத்துக்கும் அவகீர்த்தியை உண்டாக்கி விட்டார். முதலில் ரகசியமாயிருந்த விஷயம் வெளிப்படவே அவர் தன் மனைவிக்கும் கூடத் தெரியாமல் இலங்கைக்கு ஓடிப்போய் விட்டார். இது ஒன்று தான் என்னுடைய மிஷன் சபைகளில் நடந்த ஒரே வேதனை மிகுந்த சம்பவம்.

மதுரையில் தானியேல் பர்பீ சபை விஷயத்தில் அக்கறைக் கொண்டு உதவினார் என்று பார்த்தோம். அக்காலத்தில் கிழக்கிந்தியர் (East Indian) என்று அறியப்பட்டு வந்த ஆங்கிலோ இந்தியர் பலர் மதுரையில் வாழ்ந்தார்கள். பர்பீ அவர்களை ஒன்று சேர்த்து ஒரு கிறிஸ்தவ சபையாக உருவாக்கி ஓர் ஆலயம் கட்டுவதற்காக அவர்களிடத்திலும், மதுரையில் வாழ்ந்த ஐரோப்பியரிடத்திலும் அன்பளிப்பு பெற்ற, தட்டடி போட்ட ஓர் தேவாலயதனையும் கட்டி முடித்தார். அந்தச் சபையில் பணியாற்றுவதற்கு ஞானமுத்து என்னும் பெயருடைய ஓர் உபதேசியாரையும் நியமித்தார். ஞானமுத்து உபதேசியார் ஒரு சிறந்த பக்தன், உத்தம ஊழியன், ஆங்கிலப் புலமை உள்ளவர். பர்பியுடன் சேர்ந்து மேற்கண்டவாறு பணம் பிரித்து, இருவருமாக அழகான ஒரு தேவாலயத்தைக் கட்டினர். இது 1828-ம் வருஷத்துக்கு இரண்டோராண்டுக்கு முன் நிகழ்ந்திருக்க வேண்டும். திட்டமிட்டப்படியே அது தட்டடி (Terrace) போட்ட கட்டிடமாயிருந்தது.

ஞானமுத்து உபதேசியார் அவ்வாலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் திருநாட்களிலும் ஆராதனை நடத்தி வந்தார். கலியாணம், ஞானஸ்நானம், அடக்கம் முதலிய ஆராதனைகளையும் அவரே நடத்தினார். மதுரைக்கு வெளியே சில கிராமங்களில் வாழ்ந்த கிறிஸ்தவக் குடும்பங்களையும் சந்தித்து, போதித்து, ஜெபித்துத் திரும்புவதும் அவருடைய வழக்கம். சபையார் அவருக்கு மாதம் ரூ. 14.0.0 மாத ஊதியம் கொடுத்து வந்தனர். 1829-லிருந்து அச்சபையர்ரின் வேண்டுதலுக்கு இணங்கி, சென்னை அரசாங்கமே உபதேசியாரின் சம்பளத்தைக் கொடுத்தது.

1836-ல் சென்னை அத்தியட்சர் மதுரைக்கு வந்த போது சந்தித்த உபதேசியார் இந்த ஞானமுத்தே. இவர் ஓர் ஆங்கில பள்ளியையும் தன் சபையாரின் பிள்ளைகளுக்காக நடத்தினார். அப்பள்ளியையும் அத்தியட்சர் பார்வையிட்டு மகிழ்ந்தார்.

அத்தியட்சர் வந்து போன பின் நாமறிந்துள்ளபடி மதுரை மிஷனுக்கு தாம்சன், ஹிக்கி, ஹபர்ட், கோலாஃப் முதலிய மிஷனெரிக் குருமார் அனுப்பப்பட்டனர்.

20

ஜெல்ஸ்ஹெத் ஐயர் (C.M.S.)

1832 - 1835

பெர்னார்ட் ஷ்மிட் ஐயர் திருநெல்வேலி மிஷன் ஊழியத்திலிருந்து உதகமண்டலத்துக்கு மாற்றப்பட்ட பின் ரேனியஸ் ஐயருக்கு உதவியாக அனுப்பப்பட்டவர்களில் முதலாவது வந்தவர் பால் பசிஃபிக் ஷாஃப்டர் ஐயர். அடுத்தவர் முதல் தென்னிந்திய ஆங்கிலிக்கன் திருச்சபை குருவான ஜான் தேவசகாயம் ஐயர். இவர்கள் இருவரும் 1831 முதல் 1861 வரை முப்பது வருஷங்களுக்கு மேல் C.M.S. மிஷனெரிகளாக ஊழியம் செய்து பிரபலம் அடைந்தவர்கள்.

வின்க்ளரும் ஷ்மிட்டும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் வேலையை விட்டுப் போய் விட்டதால் ஷாஃப்டரும், தேவசகாயமும் வந்து சேர்ந்தது ரேனியஸிக்குப் பேருதவியாயிருந்தது. மாயவரம் C.M.S. மிஷன் ஊழியத்தில் பள்ளிக்கூட ஆசிரியராகவும் பள்ளி மேற்பார்வையாளராகவும் தேவசகாயம் அநுபவம் உள்ளவராயிருந்தபடியால் ரேனியஸ் அவரை கிராமப் பள்ளி கூடங்களைக் கண்காணிக்கும் பொறுப்பில் வைத்தார். ஷாஃப்டர், டோனாவூர் மிஷனெரியாகி அங்கிருந்து கொண்டு டோனாவூர் சாத்தான்குளம் சேகரங்களை நிர்வகிக்க நியமிக்கப்பட்டார்.

ஷ்மிட் கண்காணித்து வந்த செமினெரியை ரேனியஸ், ஆசீர்வாதம் உபாத்தியாரின் பொறுப்பில் வைத்தார் (1830 - 31). மாணவர் தொகை 3[illegible] ஆசீர்வாதம் வெகு கண்டிப்புக்காரராயிருந்து சிறு தவறுகளுக்கும் கொடிய தண்டனை கொடுத்து மாணவர்களின் பகையைச் சம்பாதித்தார். ஒரு நாள் ரேனியஸ் வெளியூர் போயிருக்கும் போது நள்ளிரவில் ஆசீர்வாதத்தைக் கொலை செய்யவும் அவருடைய வீட்டுக்குத் தீ வைக்கவும் திட்டமிட்டது கண்டுபிடிக்கப்பட்டதினால் அவர் உயிர்தப்பினார்! அந்த அளவுக்கு நிலைமை சீர்கெட்டுப் போயிற்று. செமினெரியை நடத்துவதற்கு மிஷனெரி ஒத்தாசை கிடைக்கவில்லையென்று கலங்கி நின்ற ரேனியஸிக்கு ஜெல்ஸ்ஹெத்தும் தொடர்ந்து J.J.முல்லர் ஐயரும் வந்து சேர்ந்தது எவ்வளவு மகிழ்ச்சி அளித்தது!

செமினெரி அக்காலத்தில் பிரிப்பராண்டி எனப்படும் உபதேசிமார் வகுப்புகளும் ஆசிரியப் பயிற்சி வகுப்புகளுமாக இரண்டு பிரிவுகளைக் கொண்டதாயிருந்தது. இரண்டுக்கும் ஜெல்ஸ்ஹெறத்தே தலைவர். அவர் காலத்தில் மாணவர் தொகை வருமாறு : 1831 - 32 : 34, 1832 - 33 : 39 1833 - 34 ; 47 ; 1834 - 35 : 36.

1832 முதல் 1835 சுமார் மூன்றாண்டுகள் ஜெல்ஸ்ஹெறத் செமினெரித் தலைவராயிருந்தார். ஆசீர்வாதம், தானியேல் முதலிய ஆசிரியர்கள் செமினெரியிலும் தாவீது உபதேசியார் லேயாள் முதலியவர்கள் பிரிப்பராண்டியிலும் அவருக்கு உதவியாயிருந்தனர். வெளியூர் போகாத நாட்களில் ரேனியஸூம் வந்து இரு பிரிவுகளிலும் பாடம் நடத்துவதுண்டு.

திருநெல்வேலிக்கு வந்த மிஷனெரிமாரில் நெல்லை ஊழிய காலத்திலோ அதற்குப் பின்போ தங்களுடைய மேலான அறிவைப் பாராட்டும் வகையில் DD., LLD. முதலிய கலாநிதிப்பட்டங்கள் கொடுத்துக் கௌரவிக்கப் பட்டவர்கள் ஒரு சிலரே அச்சிலரில் முதலாவதானவர் இவரே. செமினெரியில் பிரிப்பராண்டி வகுப்பு மாணவருக்கு கிரேக்கம், எபிரேயம், லத்தீன் மொழிகளையும் வேத வியாக்கியானங்களையும் கற்பித்து மாணவர்கள் அவற்றில் பாண்டித்தியம் அடைய உதவினர்.

ஸ்வீடன் தேசத்திலுள்ள ஜெலனே என்ற ஊரில் லூத்தரன் சபையைச் சேர்ந்த பெற்றோருக்கு மகனாக 1802 செப்டம்பர் மாதம் 17-ம் தேதி பிறந்த இவர் ஜெல்ஸ்ஹெறத் பக்தி மார்க்கத்தில் வளர்க்கப்பட்டு 26 வயதாயிருக்கும் போது அதே திருச்சபையில் குருப்பட்டம் பெற்று 1832-ல் திருநெல்வேலக்கு C.M.S. மிஷனெரியாக வந்தார் (1832 - 35). இங்கிருந்து போய் சிமிர்னாவில் 5 ஆண்டுகள் உழைத்த பின் ஸ்வீடனில் திருச்சபை பொறுப்பு ஏற்று சீரிய பணிவிடை நிறைவேற்றி வரும் நாளில் ஜெர்மனியிலுள்ள ஹல்லே சர்வகலா சாலையினரால் (Halle University) D.D. பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்டார். பின்னும் பலகாலம் பணியாற்றி தமது 79-ம் வயதில் 1881 டிசம்பரில் உப்சாலாம் பட்டணத்தில் மரித்தார்.

21

ஜாண் ஜேம்ஸ் முல்லர் ஐயர்

1832 - 1843

ஜாண் ஜேம்ஸ் முல்லர் ஐயர் ஜெர்மனியில் உர்ட்டெம்பர்க் கொப்பிங்கென் (Goppingen) என்னுமிடத்தில் 1808-ம் ஆண்டில் ஒரு பக்தியுள்ள நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். தெய்வ பக்தியில் வளர்க்கப்பட்ட அவர் வாலிப வயதில் தன் நாட்டவரான **ரேனியஸ்** திருநெல்வேலியில் C.M.S.-ன் சார்பில் ஆற்றி வந்த வெற்றிகரமான மிஷனெரிப் பணியை பற்றிக் கேள்விப்பட்டு தானும் திருநெல்வேலிக்குப் போய் அவருடன் சேர்ந்து மிஷனெரி ஊழியம் செய்ய வேண்டுமென்று ஆசித்தார். ஆகவே அவர் இங்கிலாந்துக்குச் சென்று C.M.S. சங்கத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆங்கிலேயத் திருச்சபையைச் சேர்ந்து லண்டன் பட்டணத்து அத்தியட்சரிடத்தில் உதவிக் குரு அபிஷேகம் பெற்று 1832-ம் வருஷம் ஜனவரி மாதம் 19-ம் தேதி **பாளையங்கோட்டை** வந்து சேர்ந்தார். திருமணமாகாத 23 வயதான அவ்விளம் மிஷனெரியை மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் வரவேற்ற **ரேனியஸ்** உடனே தன் பங்களாவுக்கு அருகில் பெரும் பாதைக்குப் பக்கமாய் ஒரு சிறு வீடு கட்டி அதில் அவரை குடியேறச் செய்தார். (சில வருஷங்களுக்கு முன்னர் தான் அக்கட்டிடத்தை இடித்து விட்டு அந்த இடத்தில் மேரி சார்ஜென்ற் பெண்கள் பள்ளி சிற்றாலயத்தைக் கட்டியுள்ளனர்).

இளவயதினரான **முல்லரை ரேனியஸ் ஐயர்** தனக்கு உதவி மிஷனெரியாக வைத்துக் கொண்டு ஊழியத்தில் நன்கு பழக்குவித்தார். சுவிசேஷப் பணி, சபைப் பணி, பள்ளிக்கூடப் பணி இவைகளிலும் ஆசிரியர் மற்றும் உபதேசிமாரின் வேலையைப் பரிசீலிப்பதிலும் ஊழியர்களுக்கு கூட்டங்கள் நடத்துவதிலும் போதிப்பதிலும் மக்களின் கிறிஸ்தவ அறிவை சோதிப்பதிலும், தகராறுகள் சச்சரவுகள் மற்றும் கட்சிப் பேதங்களை தீர்ப்பதிலும் மிஷன் கணக்குகளைக் கவனிப்பதிலும் மிஷனெரி ஊழியத்தின் பலதிறப்பட்ட வேலைகள் அனைத்திலும் **ரேனியஸிடமிருந்து முல்லர்** நல்ல பயிற்சிப் பெற்றார்.

ஜான் தேவசகாயம் ஐயருடன் சென்று பள்ளிக்கூடங்களைச் …திப்பதிலும் பள்ளிக்கூடங்களை நிர்வகிப்பதிலும் நல்லனுபவம் பெற்றார். …ஃப்டர் ஐயருடன் சேர்ந்து சாத்தான்குளம் டோனாவூர் சேகரச் …கள் அனைத்துக்கும் சென்று சபை ஊழியம் சம்பந்தப்பட்டவைகளிலும் …யரைக் கண்காணிப்பதிலும் அவருக்கும் உதவியாயிருந்தார்.

…சுவிசேஷ ஊழியத்தினிமித்தமாகவும் வேறு பல மிஷன் ஊழிய …யங்களினிமித்தமாகவும் ரேனியஸ் அவரை அனுப்புமிடங்களுக்கும் …ய தன் கடமைகளை நிறைவேற்றித் திரும்பினார். இவ்விதமாக …ளூரான முல்லர் ஐயர் ரேனியஸுக்கு வலதுகரமாக …ங்கினார்.

1834-ம் ஆண்டில் ரேனியஸ் ஐயருக்கும் C.M.S. சங்கத்தின் …ல்லைக் கமிற்றிக்கும் (M.C.C) இடையிலிருந்த விகற்பங்கள் முற்றிக் …ண்டே போயின. நிலைமை வரவர சீர்கெட்டு 1835-ல் இனி …லவாகுமோ என்று ரேனியஸ் ஷாஃப்டர் மற்றும் முல்லர் ஐயர்மாரும் …யமறிந்த ரீகல் வெஸ்ட் வின்ப்ரெட் தாவீதுபிள்ளை முதலிய …தேசிமாரும் கலக்கம் கொண்டார்கள். C.M.S.-ம் M.C.C.யும் ரேனியஸ் …ரை இழக்கவும் விரும்பவில்லை. வைத்துக் கொள்ளவும் தீர்மானிக்க …யவில்லை. அந்நாட்களிலெல்லாம் ஜெல்ஸ்ஹெறத், ஷாஃப்டர், …ல்லர் புதிதாக வந்த லெக்னர் என்ற மிஷனெரிமார் ரேனியஸுக்கு …ரியம் சொல்லவும், ஜெபிக்கவும் அடிக்கடி கூடினர்.

அந்நாட்களில் மார்ச் மாதம் 12-ம் நாள் (1835) பாளையங்கோட்டை …வாலயத்தில் முல்லர் ஐயருக்கும் ரேனியஸ் தம்பதியரின் மூத்த மகள் …த்ரைனுக்கும் (Catherine) திருமணம் நடந்தது. …ளையங்கோட்டையில் வசித்த ஐரோப்பிய கலெக்டர் முதலான சிவில் …றும் ராணுவ அலுவலர்களும், சபை மக்களும், ஊழியர்களும் திரண்டு …து திருமணத்தைச் சிறப்பித்தார்கள்.

அதன்பின் C.M.S ரேனியஸ் தகராறு முற்றி ரேனியஸும் …ல்ஸ்ஹெறத், ஷாஃப்டர், முல்லர், லெக்னர், என்ற மிஷனெரிமாரும் …ன் மாதத்தில் ராஜினாமா செய்து திருநெல்வேலியை விட்டு வெளியேறி …காடு சென்றனர். அங்கு ஆற்காடு ஜெர்மன் இவாஞ்சலிக்கல் …னை ரேனியஸ் நிறுவி நடத்தலானார்.

திருநெல்வேலியில் C.M.S. சங்கத்தின் M.C.C. யால் அனுப்ப...
ஜியார்ஜ் பெற்றிட், ஈட்வர்ட் என்ற ஆங்கிலேய திருச்சபைக் குரு...
ஈட்வர்ட் சார்ஜெண்ட் குருத்துவரல்லாத ஒரு இளம் மிஷனெரியும் நாம் மு...
சந்தித்துள்ள ஜான் தேவசகாயம் ஐயரும் C.M.S. மிஷனெரி ஊழிய...
எடுத்து நடத்தி வரலாயினர்.

ஆனால் திருநெல்வேலி உபதேசிமாரில் அநேகர் ரேனியஸை...
அவருடனிருந்த மிஷனெரியாரையும் திரும்பி வாருங்கள் என்று வற்புறு...
அழைத்துக் கொண்டேயிருந்ததினால் ரேனியஸ் ஐயர் தன் குடும்பத்து...
அக்டோபர் மாதத்தில் திருநெல்வேலிக்குத் திரும்பி வந்து இன்றைக்...
திருநெல்வேலி ஜங்ஷனிலிருக்கும் பகுதியில் ஆற்றோரமாக வீடு...
சிற்றாலயமும் ஒரு செமினெரியும் கட்டி தனது (புதிய) ஜெர்ம...
இவாஞ்சலிக்கல் மிஷனைத் துவக்கினார். அவர் வந்ததையறிந்ததும் C.M.S...
சபைகளில் பலவும் உபதேசிமார் மற்றும் ஆசிரியர்களில் அநேகர் அ...
பக்கம் சேர்ந்தனர். திருச்சபை பிளவுப்பட்டது. ரேனியஸுடன் சேரா...
சபைகளும் உபதேசிமார் மற்றும் ஆசிரியர்களும் பெற்றிட் ஐய...
சேர்ந்தனர்.

சில நாட்களில் ஷாஃப்டர் ஐயரும் வந்து ரேனியஸுடன் சேர்ந்தா...
ரேனியஸ் தன்னோடிருந்த சபைகளை இரண்டு சேகரங்களாகப் பிரித்...
1. மேற்குப் பகுதி சபைகள் - இவை ஷாஃப்டர் ஐயரின் மேற்பார்வையி...
வைக்கப்பட்டன. 2. கிழக்குப் பகுதி சபைகள் - இவை முல்லர் ஐயரி...
கண்காணிப்பில் வைக்கப்பட்டன.

முல்லர் தனக்குக் கொடுக்கப்பட்ட சபைகளைத் திருநெல்வேலியில் த...
மாமனரான ரேனியஸ் ஐயருடன் வாசம் செய்து கொண்டு குதிரையி...
பிரயாணம் பண்ணி சந்தித்தும் கூடாரங்களில் தங்கியும் கண்காணி...
வந்தார் (1835 - 36).

அவருடைய கண்காணிப்பின் கீழ்பகுதியில் தோன்றிய புது சபைக...
சில : குமரன்விளை (1835), கிருஷ்ணாபுரம், சுவிசேஷபு...
கந்தன்குடியிருப்பில் மறுதலித்த பலர் மனந்திரும்புதல், ஜோதிநக...
மூன்றடைப்பு (1836) ஆதாளிகுளம் (1837), சத்தியநகரம் (1837 - ...
மேற்கு புதூர் கிருஷ்ணாபுரத்தில் புதுக்கிறிஸ்தவர்களுக்கு பகைவ...
துன்பமுண்டாயிற்று. நாம் முன்னர் சந்தித்துள்ள தா...
உபதேசியாருக்குச் சொந்தமான நிலமொன்று அவ்வூருக்கருகிலிருந்...

ரேனியஸும் முல்லரும் அவரிடமிருந்து அந்நிலத்தை வாங்கி கிருஷ்ணாபுரம் புதுக்கிறிஸ்தவர்களை அதில் குடியேற்றி அன்றையத்தினமே அக்குடியேற்றத்துக்குச் **சுவிசேஷபுரம்** என்று பெயரிட்டனர் (15 டிசம்பர் 1836).

இவ்வாறு ஊழியம் நடந்து கொண்டிருந்த காலத்தில் 1838 ஜுன் மாதம் ரேனியஸ் ஐயர் திடீரென்று வியாதிப்பட்டு இறந்தார். அதன் பின் **முல்லர்** ஐயர் தன் மனைவியுடன் **சுவிசேஷபுரத்தில்** குடியேறி ஒரு பங்களாவும் சிற்றாலயமும் கட்டினார். அதே ஆண்டில் **சுப்பிரமணியபுரத்தில்** ஒரு சிற்றாலயமும் கட்டிப் பிரதிஷ்டை செய்தார்.

ரேனியஸ் இறந்து மூன்று மாதங்களுக்குள் **ஷாஃப்டர் பிளவை நீக்கி** தன் கண்காணிப்பிலிருந்த மேல் பகுதிச் சபைகளுடன் C.M.S. உடன் சேர்த்துக் கொண்டார். ஆனால் முல்லரோ பிரிவினையில் நீடித்தார் (1838 1840). ஆனால் அவரோ நெடுநாள் தன் கண்காணிப்பிலிருந்த சபைகளைப் பராமரிக்க முடியவில்லை. எனவே 1840 ஜுலை மாதம் அவரும் பிரிவினை நீத்து C.M.S. உடன் சேர்ந்தார். திருநெல்வேலி C.M.S.-ல் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. சுவிசேஷபுரம் அது C.M.S. பட்டாரங்களிலொன்றாக அமைக்கப்பட்டது. **முல்லரே** அதின் மிஷனெரியாகத் தொடர்ந்தார்.

C.M.S.- ஐ சேர்ந்தவுடன் **கேத்ரைன் முல்லர்** பாளையங்கோட்டையில் தன் பெற்றோர் தொடங்கி வெற்றிகரமாக நடத்தி வந்தது போன்ற ஒரு **பெண்கள் போர்டிங் பள்ளியைத்** தொடங்கினார். ஆனால் பொருளாதாரக் குறைவினால் 1841 டிசம்பரில் அதை மூட வேண்டியதாயிற்று.

சுவிசேஷ ஊழியத்தினால் நல்ல பலன் கிடைத்தது. சேகரத்தின் மேற்குப் பகுதியில் ஆலங்குளத்தில் 130 பேருடன் ஒரு புதுச்சபை உருவாயிற்று.

முல்லருடைய ஊழியத்தை நன்கு மதித்த சென்னை **பிஷப்** ஸ்பென்ஸர் உதவி குருவாயிருந்த அவருக்குக் குருப்பட்டமும் கொடுத்தார் (7.12.1942).

ஆனால் 1843 பெப்ரவரியில் **முல்லர் ஐயர்** கொடியதொரு நோய் வாய்ப்பட்டு, திருநெல்வேலியில் சுகம் கிட்டாததால் சென்னைக்கு கொண்டு போகப்பட்டு அங்கு மார்ச் 18-ம் தேதி பரலோகவாசியானார். வயது 35.

22

ஜான் மைக்கேல் லெக்ளர் ஐயர்

1835 - 1837

ஜெர்மனியில் உர்டெம்பர்க் (Wurtemberg) நகரில் Lechler என்ற பெயருடைய ஒரு லுத்தரன் குடும்பத்தில் பிறந்த (செப்டம்பர் 1804) ஜான் மைக்கேல் ஜெர்மன் பள்ளியில் வளர்க்கப்பட்டார். தன் நாட்டவரான ரேனியஸ் திருநெல்வேலியில் பெற்ற மிஷனெரி வெற்றிகளைப் பற்றிய செய்திகளைக் கேட்டு, திருநெல்வேலிக்கு மிஷனெரியாக அனுப்பப்பட தனக்கிருந்த ஆவலை C.M.S.-க்கு தெரிவிக்க அச்சங்கத்தாரும் அவரை தங்கள் மிஷனெரியாக ஏற்றுக் கொண்டனர். அவரும் லண்டனுக்குச் சென்று இங்கிலாந்து (ஆங்கிலிக்கன்) திருச்சபையில் சேர்ந்து, முறைப்படி ஆயத்தமான பின் அத்திருச்சபையில் உதவிக்குருவாக லண்டன் நகர அத்தியட்சரால் அபிஷேகிக்கப்பட்டார் (1834). பின் அவர் இந்தியாவுக்கு வந்து திருநெல்வேலியில் ரேனியஸுடன் ஊழியத்தில் சேர்ந்தார். ஆனால் அவர் வந்து சேர்ந்த சில காலத்துக்குள், ரேனியஸ் ராஜினாமா செய்தார். லெக்ளரும் பின் தொடர்ந்தார்.

ரேனியஸ் திருநெல்வேலிக்குத் திரும்பி வந்த போது லெக்ளரும் சில மாதங்கள் கழித்து அவருக்கு உதவியாயிருந்து விட்டு 1837-ல் லண்டன் மிஷனெரி சங்கத்தில் சேர்ந்தார்.

அச்சங்கத்தார் அவரை சேலம் நகரத்தின் முதல் மிஷனெரியாக நியமித்தனர். அந்நியமனத்தை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்று லண்டன் மிஷன் ஊழியத்தை சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் பிரதேசங்களில் வியாபித்து பரவ செய்தார். சேலத்தில் **அஸ்தம்பட்டி சேலம் கோட்டை** மற்றும் சில இடங்களில் அவர் நிறுவிய சபைகள் இன்னமும் நிலைத்து வளர்ந்து வருகின்றன. 1837 முதல் 1861 வரை சேலத்திலேயே 24 வருஷங்கள் மிஷனெரி பணியாற்றி **"சேலம் அப்போஸ்தலன்"** என்று வரலாற்றாசிரியர்களால் புகழப்படுகிற **லெக்ளர் ஐயர்** சேலத்திலேயே 1861 ஜூன் 17-ம் நாள் மரித்தார். சேலம் கோட்டையிலிருக்கும் C.S.I. (gioa L.M.S.) ஆலயம் **லெக்ளர் ஞாபகார்த்த ஆலயம்** என்று விளங்குகிறது.

23

தாமஸ் ஹென்றி ஆப்பிள்கேட் ஐயர் (C.M.S.)

1836

இங்கிலாந்தில் 1807-ம் வருடத்தில் பிறந்த இவர், லண்டன் பட்டணத்து அத்தியட்சரிடத்தில் 1833-ல் உதவிக்குருபட்டமும், 1834-ல் குருபட்டமும் பெற்று, C.M.S. மிஷனெரியாக சென்னைக்கு வந்து (1835) தமிழ் கற்று மிஷன் ஊழியத்தில் ஈடுபட்டார். 1836-ல் திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டு, அவ்வருடம் மார்ச் மாதம் 27-ம் தேதி பாளையங்கோட்டைக்கு வந்தார். இங்கு சுமார் 5 மாதங்கள் செமினெரியில் ப்ளாக்மன்னுக்கு உதவியாக ஆசிரியராகப் பணியாற்றினார். செப்டம்பரில் மாயவரத்துக்கு மாறுதல் பெற்றார். அங்கும் சுமார் பதினொரு மாதங்களே ஊழியம் செய்தார் (1836-37). 1837 நவம்பர் மாதம் உதகமண்டலத்திற்குப் போயிருந்த போது, அங்கு மரித்து கர்த்தருடைய இராஜ்யம் சேர்ந்தார் (வயது 30).

24

சார்ள்ஸ் ப்ளாக்மன் ஐயர் (C.M.S.)

1835 - 1837

சார்ள்ஸ் ப்ளாக்மன் ஐயர் (Rev. Charles. Blackman) இங்கிலாந்து தேசத்தில் சத்ரம் (Chathram) என்ற ஊரில் 1802-ல் ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்து தெய்வ பக்தியிலும் மிஷனெரி ஊழிய ஆர்வத்திலும் வளர்க்கப்பட்டவர். தன்னுடைய 26-ம் வயதில் அவர் C.M.S.-ன் மிஷனெரி ஊழியத்துக்குத் தன்னை ஒப்புவித்து, முறைப்படி இறையியல் கல்வி கற்று லண்டன் பட்டணத்து அத்தியட்சரிடத்தில் உதவிக்குரு (1828) குருப் (1829) பட்டங்கள் பெற்ற பின் 1830-ல் C.M.S. மிஷனெரியாக சென்னை வந்து சேர்ந்தார்.

ஐந்தாண்டுகள் சென்னையில் மிஷனெரியாகவும், சென்னை பெரம்பூர் இறையியல் பள்ளி தலைவராகவும் பணியாற்றிய பின், திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டு, 1836 ஜனவரி 7-ம் நாள் தன் மனைவியோடு பாளையங்கோட்டைக்கு வந்து, **பெற்றிட் ஐயரால்** மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டார்.

பாளையங்கோட்டைக்கு வந்தவுடன், செமினெரியின் தலைவரானார். அவருடைய மனைவி பெற்றிட் ஐயரின் மனைவி **லூயிசா பெற்றிட்** அம்மாளிடமிருந்து பெண்கள் செமினெரியின் பொறுப்பை ஏற்றார். **ப்ளாக்மன் ஐயர்** 1836 ஜனவரி முதல் 1837 பெப்ரவரி வரையே செமினெரியின் தலைவராயிருந்தார். மாணவர் தொகை 1836 - 37ல் 34 மாணவரில் பாதிப்பேர் பிரிப்பாராண்டி என்ற உபதேசிமார் பயிற்சி வகுப்பிலும் மற்றவர்கள் ஆசிரியர் பயிற்சி வகுப்பிலுமிருந்தனர். செமினெரியில் அவர் செய்த பணியைப் பற்றிய சிறப்பு விபரங்களொன்றும் நமக்குக் கிடைக்கவில்லை.

1837 பெப்ரவரியில் **ப்ளாக்மன் ஐயர் சாத்தான்குளத்துக்கு** மாற்றப்பட்டு அங்கு அவரும் அவருடைய மனைவியும் ஐந்து ஆண்டுகள்

இறந்த பணியாற்றினர் (1837 - 41) மார்ச் மாதம் (1837) சாத்தான்குளம் வந்து சேர்ந்த மிஷனெரித் தம்பதியரை சாத்தான்குளம் உபதேசிமாரும் சபையார்களும் மிகுந்த சந்தோஷத்துடன் வரவேற்றனர். வந்து சேர்ந்த முதல் மாதத்திலேயே இருந்து வெகு சுறுசுறுப்புடன் இயங்கத் துவங்கினார்.

அந்நாட்களில் சாத்தான்குளம் சேகரத்தில் இந்நாளைய மெய்ஞ்ஞானபுரம், வெள்ளாளன்விளை, நாலுமாவடி வட்டாரங்களும், சுவிசேஷபுரம் சேகர சபைகளில் சிலவும் உண்டு. இப்பகுதியிலுள்ள சௌக்கியபுரம் மற்றும் பல சபைகள் ரேனியஸின் பக்கம் சேர்ந்து சுவிசேஷபுரம் முல்லர் ஐயரின் கண்காணிப்பிலிருந்தன. 1840-ல் ரேனியஸ் பிளவு நீங்கின பின்னும் அதே நிலை சில சபைகளில் நீடித்தது. ஆயினும் கிறிஸ்தவர்கள் தொகையிலும் சபைகளின் எண்ணிக்கையிலும் சாத்தான்குளம் சேகரமே மற்ற C.M.S. சேகரங்களை விடப் பெரியது. இச்சேகர ஊழியத்தில் ப்ளாக்மன்னுக்கு உதவியாயிருப்பதற்காக ராஸ் என்னுமோர் ஆங்கிலோ - இந்திய உபதேசியார் நியமிக்கப்பட்டார். சாத்தான்குளத்திலிருந்த தானியேல் உபதேசியார் டோனாவூருக்கு மாறுதல் பெற்றார்.

ப்ளாக்மன் முதலாவது செய்த வேலை தனக்கு ஒரு பங்களாவும் ராஸ் உபதேசியாருக்கு ஒரு வீடும் கட்டினதாகும். அக்கட்டிடங்கள் இன்று முறையே மேனிலைப்பள்ளி பிரதான கட்டிடமாகவும் குருமனையாகவும் விளங்குகின்றன.

சபைகளனைத்தையும் சந்திப்பதிலும், சுவிசேஷ ஊழியத்தைத் தீவிரப்படுத்துவதிலும் ப்ளாக்மன் துவக்கத்திலிருந்தே மிகுந்த கவனம் செலுத்தினார். அதன் பயனாகச் சில புதிய சபைகள் தோன்றின. அவற்றில் சில மேலச்செட்டிகுளம் 20 ஆத்துமாக்கள் கொண்ட ஏழு குடும்பங்கள் (1837 ஜூலை) சிறப்பூர் 203 ஆத்துமாக்கள் (ஜூலை 1837) வேலாயுதபுரம் (1837 ஜூன்) பண்டாரபுரம் (1841) பல பழைய சபைகளில் புதிய வரவுகளால் சபை பெருக்கம் கொண்டன.

சத்தியநகரம் ரேனியஸ் ஐயரால் 1837-ல் தோற்றுவிக்கப்பட்டு இந்த இறந்தபின் 1838 செப்டம்பரில் கிருபாபுரம், ஆனந்தபுரம், பழங்குளம் சபைகளோடு C.M.S. ஐ சேர்த்து ப்ளாக்மன் ஐயரின் கண்காணிப்புக்குட்பட்டுச் சாத்தான்குளம் சேகரத்துக்குள்ளாயின (ஆனந்தபுரமும், பழங்குளமும் பின்னால் மெய்ஞ்ஞானபுரம் சேகரத்துடன் இணைந்தன)

சேகர வளர்ச்சிக்கு உதவியாயிருக்கவென்று சாத்தான்குளம் தர்ம சகாய நிதிச்சங்கத்தை நிறுவித் துன்பப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்யவும். தேவைப்பட்டால் புதுக்கிறிஸ்தவக் குடியேற்றங்களை உருவாக்கவும் ப்ளாக்மன் திட்டம் செய்து, 1838-ல் அச்சங்கமொன்றை அமைத்தார். அதே போல் ஆலயங்கள் கட்டுவதில் சேகரச் சபைகளுக்கு உதவ சாத்தான்குளம் சேகர தேவாலயக் கட்டுமான சங்கத்தையும் தோற்றுவிக்க முயற்சிகளெடுத்தார். அச்சங்கம் அவருக்குப் பின்னால் வந்த தேவசகாயம் ஐயரால் நிறுவப்பட்டது.

சத்தியநகரத்தில் ரேனியஸ் ஐயர் கட்டத் துவக்கியிருந்த ஆலயத்தைக் கட்டி முடித்து 1839-ல் பிரதிஷ்டை செய்தார். கடாட்சபுரம் சபை சேகர சபைகள் அனைத்திலும் பெரிது. சபையார் 726 பேர். ஆலயமோ சிறிது ஆகையால் பெரிய ஆலயமொன்று கட்டத்திட்டமிட்டு ரூ.1,500 திரட்டுவதில் ஈடுபட்டார். அதே சமயத்தில் அனுக்கிரகபுரம் ஆலயத்தைக் கட்டி 1841 ஜூனில் பிரதிஷ்டை செய்தார்.

உபதேசியார் விதவைப் பராமரிப்பு நிதிச் சங்கமொன்று செயலற்றிருந்தது. ப்ளாக்மன் அதை உயிர்ப்பித்தார். உபதேசியார் பயிற்றுவிக்கப்படுவதற்காக சாத்தான்குளம் சேகர பிரிப்பராண்டி நிலையத்தையும் நிறுவினார்.

பெண்களுக்கும் மிகுந்த ஆர்வத்துடன் ஆவிக்குரிய பணி நிறைவேற்ற திருமதி. ப்ளாக்மேன் சாத்தான்குளத்திலும் சேகர சபைகளிலும் பெண்கள் கூட்டங்களை (Women's Meetings) நடைபெற செய்து மேற்பார்த்து வந்தார்

புகழ்பெற்ற சாராள் டிறக்கர் அம்மாள் அனுப்பிய உதவித் தொகையைக் கொண்டு சாத்தான்குளத்தில் ஒரு பெண்கள் போர்டிங் பள்ளியையும், கடாட்சபுரம் பெண்கள் பள்ளியொன்றையும் ப்ளாக்மன் அம்மாள் நிறுவினார் (1838 மார்ச்).

1841-ல் ப்ளாக்மன் அதிக சுகவீனமாகி, அவ்வாண்டினிறுதியில் ராஜினாமா செய்தார். பின் இங்கிலாந்தில் செஷம்-பாஸில் (Chesham - Boss) குருத்துவ ஊழியம் செய்து 1868-ல் மரித்தார் (வயது 66).

அடுத்து வெளிவருவது.....

நமது திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பணி செய்த ஆதி திருச்சபை சபை ஊழியர்களின் வரலாறு, நமது திருமண்டலத்திலுள்ள சபைகளின் வரலாறு என்ற தலைப்புகளில் புத்தகங்கள் வெளியிடப்பட ஜெபத்துடன் ஆயத்த வேலைகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. புத்தகம் வெளியிடப்பட தேவையான பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். நீங்களே ஒரு புத்தகம் வெளியிடப்படுவதற்கான தேவைகளை சந்திக்கலாம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

குறிப்பு :

1. ஆண்கள் ஐக்கிய சங்கம் வெளியிட்டுள்ள புத்தகங்களை ஐம்பது புத்தகங்களுக்கு மேலாக மொத்தமாக வாங்கினால் குறைந்த விலையில் கொடுக்கப்படும்.

2. ஆலயங்களிலும், நிறுவனங்களிலும் இந்த புத்தகங்களை பரிசாக கொடுத்தால் குறைந்த விலையில் கொடுக்கப்படும்.

3. ஞாயிறு பள்ளி தேர்வு, திருமறைத் தேர்வுகளுக்கான பொறுப்பாளர்கள் இப்படிப்பட்ட புத்தகங்களை பரிசாக கொடுப்பது நல்லது.

C.S.I. Thoothukudi - Nazareth Diocese

MEN'S FELLOWSHIP

Rt. Rev. Dr. J.A.D. ஜெபச்சந்திரன்
பேராயர்

"சமாதானத்தைக் கூறி ... சுவிஷேசகனுடைய பாதங்கள் .... எவ்வளவு அழகாயிருக்கின்றன"

விலை ரூ. 60/-

Rev. R. சாமுவேல் ஜெயசீலன்
செயலர்

வெளியீடு

ஆண்கள் ஐக்கிய சங்கம்

தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலம்
கால்டுவெல் மேல்நிலைப் பள்ளி வளாகம்,
தூத்துக்குடி – 628 001.
செல் : 9486938380